# 5 வெளிநாட்டுத்துறை அபிவிருத்திகளும் கொள்கைகளும்


## 5.1 பொதுநோக்கு

**ஆண்டின் முதலரைப் பகுதியில் சிறப்பாக செயலாற்றிய வெளிநாட்டுத் துறையானது மோசமடைந்த உலகளாவிய நிகழ்வுகள் மற்றும் இறக்குமதிக் கேள்வியில் ஏற்பட்ட விரைந்த வளர்ச்சி என்பனவற்றின் காரணமாக ஆண்டின் பிற்பகுதியில் குறிப்பிடத்தக்க சவால்களை எதிர்நோக்கியது.** உலகளாவிய ரீதியில், ஐரோப்பிய பிராந்தியத்தில் நாட்டிற்கான படுகடன் நெருக்கடி தீவிரமடைந்தமை, உலகளாவிய பொருளாதாரத்தின் மீட்சியில் ஏற்பட்ட மந்தமான தன்மை, எண்ணெய் உற்பத்தியை மேற்கொள்ளும் மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்க நாடுகளில் காணப்பட்ட புவிசார் நிச்சயமற்ற தன்மைகள் எண்ணெய் விலைகளிலும் நிதியியல் உட்பாய்ச்சல்களிலும் அழுத்தத்தினை தோற்றுவித்தன. உள்நாட்டு ரீதியில், விரிவடைந்த ஒன்று சேர்ந்த கேள்வி இறக்குமதியில் விரைந்த வளர்ச்சியை ஏற்படுத்தியமையானது, ஏற்றுமதிகளில் வரவேற்கத்தக்க வளர்ச்சி காணப்பட்டமைக்கிடையிலும் வர்த்தகப் பற்றாக்குறைகளை கணிசமானளவிற்கு விரிவடையச் செய்தது. குறிப்பாக, முக்கியமாக கைத்தொழில் ஏற்றுமதிகளின் உதவியுடன் ஏற்றுமதிகள் 22 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த வேளையில் இறக்குமதிகள் 51 சதவீதத்தினால் படிப்படியாக வளர்ச்சியடைந்து, எண்ணெய் இறக்குமதிகளை முக்கியமாகக் கொண்ட இடைநிலைப் பொருட்களிலும் செயற்றிட்டத்துடன் தொடர்பான இறக்குமதிகளை முக்கியமாகக் கொண்ட முதலீட்டுப் பொருட்களிலுமான மிகக் கூடிய வளர்ச்சியைப் பிரதிபலித்தது.


**மூலதன மற்றும் நிதியியல் கணக்கிற்கான உட்பாய்ச்சல்கள் வலுவானதாகக் காணப்பட்ட போதும், அவற்றின் உட்பாய்ச்சல்கள், உயர்ந்த நடைமுறை கணக்குப் பற்றாக்குறையினை எதிரீடு செய்யப் போதுமானதாக இருக்கவில்லை.** தனியார் நீண்ட கால வெளிநாட்டு நேரடி முதலீடுகள் உள்ளடங்கலாக, மற்றும் அரசாங்கத்திற்கான உட்பாய்ச்சல்கள் என்பன ஆரோக்கியமான நிலையில் காணப்பட்டன. எனினும் உயர்ந்தளவு நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை, திரண்ட சென்மதி நிலுவை 2011 இறுதியில் ஐ.அ.டொலர் 1.06 பில்லியன் கொண்ட பற்றாக்குறையை பதிவு செய்ய வழிவகுத்தது.

**நாட்டின் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2011 ஒகத்து நடுப்பகுதியில் வரலாற்றிலேயே மிக உயர்ந்த மட்டமான ஐ.அ.டொலர் 8.2 பில்லியனை அடைந்ததுடன் அதன் பின்னர் ஓரளவு வீழ்ச்சியடைந்தது.** வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்கள் ஈர்த்துக் கொள்ளப்பட்டமை, குறிப்பாக நாட்டிற்கான முறி வழங்கலின் மூலமான பெறுகைகள் உட்பட அரசாங்கத்திற்கு கிடைத்த உட்பாய்ச்சல்கள் அதேபோன்று ப.நா. நிதிய துணைநில் ஒழுங்குவசவிதிகளின் கீழான பெறுகைகள் என்பன அலுவல்சார் ஒதுக்குகளை கட்டியெழுப்புவதோடு இலங்கை ரூபாவின் நியாயமற்ற பெறுமதி உயர்வைத் தடுக்கவும் உதவின. எனினும், 2011இன் பிற்பகுதியில், இறக்குமதிச் செலவினத்தில் ஏற்பட்ட மிகக் கூடியளவு அதிகரிப்பின் காரணமாக விரிவடைந்த வர்த்தகப் பற்றாக்குறையானது உள்நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் செலாவணிக்கான கேள்வியை முன்னெப்பொழுதுமில்லாத விதத்தில் உருவாக்கியதன் காரணமாக, மிகையான தளம்பல்களைத் தவிர்க்கும் நோக்குடன் சந்தைக்கு வெளிநாட்டுச் செலாவணியை வழங்கல் செய்வதன் மூலம் தலையிடுவதற்கு மத்திய வங்கியைத் தேவைப்படுத்தியது. இதன் விளைவாக உயர் நிலையில் காணப்பட்ட மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2011 இறுதியில் ஐ.அ.டொலர் 6.0 பில்லியனுக்கு வீழ்ச்சியைக் காட்டின. இது 3.5 மாத இறக்குமதிகளுக்கு சமமானதாகும்.

வரைபடம் 5.1 சென்மதி நிலுவை




வரைபடம் 5.2 வெளிநாட்டு செலாவணி வருவாய்களின் முக்கிய மூலங்கள்




**2011இல் செலாவணி வீதக் கொள்கையானது, உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணி வீதத்தில் நியாயமற்ற தளம்பல்கள் ஏற்படுவதனைத் தடுப்பதில் தொடர்ந்தும் கவனம் செலுத்தி உள்நாட்டில் வெளிநாட்டு செலாவணிச் சந்தையில் அழுத்தத்தை குறைத்தது.** இவ்வாண்டின் முதல் எட்டு மாதங்களில் வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல் தொடர்ந்தும் காணப்பட்டமையினைத் தொடர்ந்து, மத்திய வங்கி பெருந்தொகையான உட்பாய்ச்சல்களை ஈர்த்துக் கொள்வதற்குத் தலையிட்டமையின் காரணமாக, 2011 ஒகத்தளவில் ஐ.அ.டொலாருக்கெதிரான ரூபாவின் பெறுமதியானது மிதமானதொரு அளவில் உயர்வுக்குட்பட்டது. பின்பு ஆண்டின் பிற்பகுதியை நோக்கி உநாட்டில் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் அதிகரித்துச் செல்லும் கேள்வி அழுத்தத்துடன் போதியளவு செலாவணித் திரவத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கும் செலாவணி வீதத்தில் ஏற்படும் தேவையற்ற எந்தவொரு பெறுமதித் தேய்வைத் தடுப்பதற்கும் மத்திய வங்கி சந்தைக்கு வெளிநாட்டுச் செலாவணியை வழங்கியது. மேலும் ஏற்றுமதி போட்டித்தன்மையை பலப்படுத்துவதுடன் அதிகரித்துச் செல்லும் இறக்குமதி செலவினை கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்ட முன்மொழிவு மூலம் ரூபாவானது 2011 நவெம்பரில் 3 சதவீதத்தால் தேய்வடைந்தது. இதன்படி 2011 இறுதியில் ரூபாவானது ஐ. அ .டொலருக்கு எதிராக 2.59 சதவீதத்தால் தேய்வடைந்தது.

**2012 இல் வெளிநாட்டு நிலுவைகளை மேலும் மேம்படுத்துவதற்கான பொருத்தமான சூழலை ஏற்படுத்துவதற்கு அண்மையில் பல முக்கியமான கொள்கை வழிமுறைகள் முன்னெடுக்கப்பட்டன.** 2012 ஆரம்பத்திலிருந்து செலாவணி வீதத்தில் கூடிய நெகிழ்ச்சித் தன்மை அனுமதிக்கப்பட்டதன் மூலம் பெற்றோலிய இறக்குமதிக்கான கொடுப்பனவு கட்டுபாடுகளின் ஒரு பகுதியை நிதியிட மட்டுமே மத்திய வங்கியின் தலையீடு மட்டுப்படுத்தப்பட்டது. முக்கிய கொள்கை வழிமுறைகள் பன்னாட்டு நிதியியல் சந்தைகளிலிருந்து தொழில் முயற்சிகள் நேரடியாகக் கடன்படுவதனை வசதிப்படுத்தும் பொருட்டு செலாவணி கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளை தளர்த்துவது, வெளிநாட்டு மூலங்களிலிருந்து அடுக்கு 2 மூலதனத்தை திரட்டுவதற்கு வர்த்தக வங்கிகளை அனுமதித்தல், மீள் கொள்வனவு வீதம் மற்றும் நேர்மாற்று கொள்வனவு வீதங்கள் ஒவ்வொன்றையும் 50 அடிப்படைப் புள்ளிகளினால் அதிகரித்தல் என்பதாகும். திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகளின் மீதான வெளிநாட்டு முதலீடுகளுக்கான வரையறையினை 2011 திசெம்பரில் அரச பிணையங்களின் வெளிநின்ற இருப்புக்களின் 10 சதவீதத்திலிருந்து 12.5 சதவீதத்திற்கு உயர்த்துதல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. இக்கொள்கை வழிமுறைகள் நடைமுறைக் கணக்கு மற்றும் நிதியியல் மற்றும் மூலதனக் கணக்கு என்பனவற்றில் தேவையான சீராக்கங்களை உருவாக்கும் போல் தோன்றுவதால், இது பேரண்டப் பொருளாதார உறுதிப்பாடு வலுப்படுவதனை உறுதிப்படுத்தும்.

## 5.2 வெளிநாட்டு வர்த்தகக் கொள்கைகளும் நிறுவன ரீதியான ஆதரவும்

**நாட்டில் எதிர்பார்க்கப்பட்ட உயர் வளர்ச்சி உத்வேகத்திற்கு ஆதரவளிக்கும் விதத்தில் வர்த்தகத்தின் அபிவிருத்தியின் பொருட்டு 2011இன் வெளிநாட்டு வர்த்தக கொள்கைகள் முக்கியமாக ஏற்றுமதித் தளத்தினை விரிவுபடுத்தல், ஏற்றுமதிச் சந்தைகளை பன்முகப்படுத்தல், உள்நாட்டுப் பெறுமதிக் கூட்டல்களை அதிகரித்தல், இயலுமைப்படுத்தல் சூழ்நிலையினை உருவாக்குதல் என்பனவற்றின் மீது முக்கிய கவனத்தினைச் செலுத்தின.** இதன்படி இயல்பாகவே பொதிந்திருக்கும் உள்நாட்டு தேர்ச்சிகளையும் வளங்களையும் பயன்படுத்துதல், உட்கட்டமைப்பு அபிவிருத்தி, தொழில்நுட்ப புதுமைகளை பேணி வளர்த்தல் மற்றும் உயர்ந்த உள்ளார்ந்த வளர்ச்சியினைக் கொண்ட கைத்தொழில்களில் தனியார் முதலீடுகளை வசதிப்படுத்தல் என்பனவற்றினூடாக வெளிநாட்டுச் சந்தையின் போட்டித்தன்மையினை எய்துவதனை வெளிநாட்டு வர்த்தகக் கொள்கைக் கட்டமைப்பு நோக்காகக் கொண்டிருந்தது.

**2010 யூனில் அறிமுகப்படுத்தப்பட்ட நான்கு பிரிவுகளைக் கொண்ட தீர்வைப் பிரிவு 2011இலும் நடைமுறையிலிருந்தது.** தற்பொழுது பிரயோகிக்கப்படுகின்ற தீர்வை வீதங்களான 0, 5, 15 மற்றும் 30 சதவீதம் என்பன முன்னர் தொழிற்பாட்டிலிருந்த

அட்டவணை 5.1

## சென்மதி நிலுவைப் பகுப்பாய்வு வெளிப்படுத்துகை (அ)

| விடயம் | ஐ.அ.டொலர் மில்லியன் | | | | | ரூபா. மில்லியன் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2007 | 2008 | 2009 | 2010(ஆ) | 2011(இ) | 2007 | 2008 | 2009 | 2010(ஆ) | 2011(இ) |
| **வர்த்தக நிலுவை** | **-3,657** | **-5,981** | **-3,122** | **-4,825** | **-9,710** | **-404,703** | **-647,207** | **-358,707** | **-545,350** | **-1,073,900** |
| ஏற்றுமதி | 7,640 | 8,111 | 7,085 | 8,626 | 10,559 | 845,683 | 878,499 | 813,911 | 974,387 | 1,167,588 |
| இறக்குமதி | 11,296 | 14,091 | 10,207 | 13,451 | 20,269 | 1,250,386 | 1,525,705 | 1,172,618 | 1,519,737 | 2,241,488 |
| பணிகள் (தேறிய) | 302 | 401 | 391 | 707 | 1,099 | 33,357 | 43,557 | 44,780 | 79,766 | 121,635 |
| பெறுகைகள் | 1,775 | 2,004 | 1,892 | 2,474 | 3,084 | 196,249 | 217,180 | 217,378 | 279,634 | 340,977 |
| கொடுப்பனவுகள் | 1,472 | 1,603 | 1,501 | 1,768 | 1,985 | 162,892 | 173,623 | 172,598 | 199,868 | 219,342 |
| வருமானம் (தேறிய) | -358 | -972 | -488 | -617 | -647 | -39,054 | -105,032 | -55,814 | -69,776 | -72,046 |
| பெறுகைகள் | 449 | -32 | 116 | 323 | 467 | 50,213 | -3,133 | 13,551 | 36,508 | 51,109 |
| கொடுப்பனவுகள் | 807 | 940 | 603 | 940 | 1,114 | 89,267 | 101,899 | 69,365 | 106,284 | 123,155 |
| **பொருட்கள், பணிகள் மற்றும் வருமானம் (தேறிய)** | **-3,712** | **-6,552** | **-3,219** | **-4,735** | **-9,258** | **-410,401** | **-708,681** | **-369,740** | **-535,360** | **-1,024,311** |
| **நடைமுறை மாற்றல்கள் (தேறிய)** | **2,311** | **2,666** | **3,005** | **3,660** | **4,643** | **255,684** | **288,639** | **345,498** | **413,885** | **513,216** |
| தனியார் மாற்றல்கள் (தேறிய) | 2,214 | 2,565 | 2,927 | 3,608 | 4,583 | 245,006 | 277,711 | 336,578 | 407,967 | 506,630 |
| பெறுகைகள் | 2,502 | 2,918 | 3,330 | 4,116 | 5,145 | 276,814 | 316,091 | 382,818 | 465,166 | 569,103 |
| கொடுப்பனவுகள் | 288 | 353 | 403 | 508 | 562 | 31,808 | 38,380 | 46,240 | 57,199 | 62,473 |
| அலுவல்சார் மாற்றல்கள் (தேறிய) | 97 | 101 | 77 | 52 | 60 | 10,677 | 10,928 | 8,920 | 5,918 | 6,587 |
| **நடைமுறை கணக்கு** | **-1,402** | **-3,886** | **-214** | **-1,075** | **-4,615** | **-154,717** | **-420,042** | **-24,242** | **-121,475** | **-511,095** |
| **மூலதன மற்றும் நிதியியல் கணக்குகள்** | **2,097** | **1,773** | **2,594** | **2,877** | **4,262** | **230,978** | **193,713** | **299,381** | **322,035** | **458,412** |
| **மூலதனக்கணக்கு** | **269** | **291** | **233** | **164** | **164** | **29,669** | **31,456** | **26,832** | **18,521** | **18,126** |
| மூலதன மாற்றல்கள் (தேறிய) | 269 | 291 | 233 | 164 | 164 | 29,669 | 31,456 | 26,832 | 18,521 | 18,126 |
| பெறுகைகள் | 278 | 303 | 247 | 182 | 185 | 30,735 | 32,774 | 28,465 | 20,599 | 20,382 |
| கொடுப்பனவுகள் | 10 | 12 | 14 | 19 | 20 | 1,066 | 1,319 | 1,633 | 2,078 | 2,256 |
| **நிதியியல் கணக்கு** | **1,828** | **1,483** | **2,361** | **2,713** | **4,097** | **201,309** | **162,258** | **272,550** | **303,515** | **440,286** |
| நீண்டகாலம்: | 1,251 | 1,016 | 1,304 | 2,379 | 3,292 | 140,054 | 109,174 | 149,772 | 268,228 | 362,419 |
| நேரடி முதலீடு | 548 | 691 | 384 | 435 | 896 | 60,768 | 74,837 | 44,112 | 49,008 | 99,265 |
| வெளிநாட்டு நேரடி முதலீடு (தேறிய) | 548 | 691 | 384 | 435 | 896 | 60,768 | 74,837 | 44,112 | 49,008 | 99,265 |
| தனியார் நீண்டகாலம் (தேறிய) | 31 | 74 | 79 | 149 | 153 | 3,314 | 7,768 | 9,105 | 17,569 | 16,804 |
| உட்பாய்ச்சல்கள் | 199 | 265 | 390 | 580 | 364 | 22,033 | 28,693 | 44,795 | 65,934 | 40,187 |
| வெளிப்பாய்ச்சல்கள் | 168 | 191 | 311 | 431 | 211 | 18,719 | 20,925 | 35,691 | 48,365 | 23,384 |
| அரச, நீண்ட காலம் (தேறிய) | 672 | 252 | 840 | 1,796 | 2,244 | 75,971 | 26,568 | 96,555 | 201,650 | 246,350 |
| உட்பாய்ச்சல்கள் | 1,290 | 1,059 | 1,780 | 2,460 | 3,029 | 144,146 | 114,658 | 204,435 | 276,582 | 333,630 |
| வெளிப்பாய்ச்சல்கள் | 618 | 807 | 940 | 665 | 785 | 68,175 | 88,090 | 107,880 | 74,932 | 87,280 |
| குறுங்காலம்: | 577 | 466 | 1,058 | 334 | 805 | 61,256 | 53,084 | 122,777 | 35,287 | 77,867 |
| பட்டியலிடப்பட்ட முதலீடுகள் (தேறிய) | 101 | 60 | -6 | -230 | -171 | 11,249 | 6,460 | -785 | -26,010 | -18,979 |
| தனியார் குறுங்காலம் (தேறிய) | 20 | 594 | 228 | -1,032 | -228 | 1,868 | 63,987 | 26,108 | -116,655 | -25,226 |
| வர்த்தக வங்கி சொத்துக்கள் (தேறிய) | -281 | 210 | -435 | 249 | 183 | -31,352 | 17,889 | -51,298 | 33,343 | 14,724 |
| வர்த்தக வங்கி பொறுப்புக்கள் (தேறிய) | 364 | -185 | -98 | 815 | 788 | 38,746 | -11,858 | -8,836 | 84,356 | 81,555 |
| அரச குறுங்காலம் (தேறிய) | 372 | -213 | 1,369 | 531 | 233 | 40,744 | -23,395 | 157,588 | 60,252 | 25,794 |
| சிஎஉ ஒதுக்குகள் (ஈ) | - | - | 508 | - | - | - | - | 58,353 | - | - |
| மதிப்பீட்டு சீர்திருத்தங்கள் | - | - | - | - | - | - | - | - | - | - |
| பிழைகளும் தவறுகளும் | -165 | 728 | 346 | -881 | -707 | -16,259 | 80,534 | 40,082 | -112,586 | -53,167 |
| **திரண்ட நிலுவை (உ)** | **531** | **-1,385** | **2,725** | **921** | **-1,061** | **60,002** | **-145,795** | **315,221** | **87,974** | **-105,850** |
| நாணய அசைவுகள் (உ) | -531 | 1,385 | -2,725 | -921 | 1,061 | -60,002 | 145,795 | -315,221 | -87,974 | 105,850 |
| **ஆண்டுச்சராசரி செலவாணி வீதம் ரூ/ஐ.அ.டொ.** | | | | | | **110.62** | **108.33** | **114.94** | **113.06** | **110.57** |
| **மொ.உ.உ இற்கான விகிதம் சதவீதங்களில் (ஊ)** | | | | | | | | | | |
| வர்த்தக கணக்கு | -11.3 | -14.7 | -7.4 | -9.7 | -16.4 | -11.3 | -14.7 | -7.4 | -9.7 | -16.4 |
| நடைமுறை கணக்கு | -4.3 | -9.5 | -0.5 | -2.2 | -7.8 | -4.3 | -9.5 | -0.5 | -2.2 | -7.8 |
| கொடைகளற்ற நடைமுறை கணக்கு | -4.6 | -9.8 | -0.7 | -2.3 | -7.9 | -4.6 | -9.8 | -0.7 | -2.3 | -7.9 |

(அ) இந்த வெளிப்படுத்துகை பன்னாட்டு நாணய நிதியத்தின் சென்மதி நிலுவைக் கையேட்டின் 5ஆம் பதிப்புடன் (1993) சாத்தியமான அளவுக்கு இணங்கிச் செல்லும் விதத்தில் தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் 1994 இலிருந்து கரைகடந்த வங்கித் தொழில் பிரிவுகள் உள்நாட்டு வங்கித் தொழில் முறையின் பகுதியொன்றாக கருதப்பட்டுள்ளது.

(ஆ) திருத்தியமைக்கப்பட்டது

(இ) தற்காலிகமானது

(ஈ) பன்னாட்டு நாணய நிதியத்திடமிருந்தான சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் பொது மற்றும் விசேட ஒதுக்குகள்

(உ) ஐ.அ.டொலர் பெறுமதிகள் காலச் சராசரி செலாவணி வீதங்களைப் பயன்படுத்தி ரூபாய் பெறுமதிக்கு மாற்றப்பட்டுள்ளது.

(ஊ) தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட நடைமுறைச் சந்தை விலைகளிலான மொத்த உள்நாட்டு உற்பத்தியிலனை அடிப்படையாகக் கொண்டது.

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்
வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களம்
இலங்கை முதலீட்டு சபை
இலங்கை தொகை மதிப்பு புள்ளி விவர திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 5.2 சராசரி இறக்குமதித் தீர்வை சேகரிப்பு வீதம் (அ)**

சதவீதம் (%)

| விடயம் | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 (ஆ) |
|---|---|---|---|---|---|
| **நுகர்வுப் பொருட்கள்** | **12.4** | **12.6** | **19.4** | **12.6** | **11.0** |
| உணவும் குடிப்பானங்களும் | 13.5 | 14.8 | 26.8 | 12.1 | 12.3 |
| அரிசி | 3.1 | 3.1 | 5.4 | 2.1 | 21.2 |
| மாவு | 31.9 | 22.6 | 22.6 | 40.8 | 8.1 |
| சீனி | 23.9 | 32.8 | 26.5 | 4.0 | 5.0 |
| கோதுமையும் மெசுலினும் | 6.3 | 6.7 | 32.2 | 12.4 | 12.2 |
| பாலும் பால் உற்பத்திகளும் | 7.7 | 2.0 | 29.2 | 6.4 | 1.2 |
| கருவாடு | 2.9 | 9.4 | 10.9 | 12.2 | 12.1 |
| ஏனைய மீன் உற்பத்திகள் | 4.9 | 8.7 | 18.3 | 25.0 | 21.3 |
| ஏனையவை | 20.8 | 24.2 | 27.2 | 19.6 | 21.0 |
| உணவல்லா நுகர்வுப் பொருட்கள் | 11.2 | 8.4 | 6.7 | 13.3 | 9.7 |
| உந்து ஊர்திகளும் ஈருளிகளும் | 16.3 | 7.7 | 6.2 | 18.4 | 14.0 |
| வானொலிப் பெட்டிகளும் | 7.7 | 6.3 | 7.1 | 20.0 | 2.3 |
| இறப்பர் ரயர்களும் ரீயூப்புக்களும் | 22.4 | 19.2 | 20.1 | 21.6 | 20.9 |
| மருந்தாக்கல் பொருட்கள் | 0.4 | 0.4 | 0.4 | 0.3 | 0.2 |
| ஏனையவை | 10.6 | 13.0 | 8.6 | 9.7 | 7.4 |
| **இடைநிலைப் பொருட்கள்** | **1.5** | **2.2** | **5.0** | **1.7** | **1.0** |
| வளமாக்கி | 2.7 | 2.5 | 2.5 | 1.0 | 0.0 |
| மசகெண்ணை | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| ஏனைய பெற்றோலிய உற்பத்திகள் | 1.6 | 4.7 | 19.0 | 3.2 | 1.1 |
| இராசாயன கூறுகளும் கலவைகளும் | 1.9 | 1.8 | 1.9 | 1.1 | 0.3 |
| சாயமூட்டல், தோல் பதனிடல் | 2.5 | 2.1 | 2.1 | 2.1 | 2.3 |
| தாளும் தாள் மட்டைகளும் | 2.2 | 2.0 | 2.1 | 1.8 | 1.4 |
| புடவைகள் | 0.1 | 0.2 | 0.2 | 0.1 | 0.1 |
| ஏனையவை | 3.3 | 2.9 | 4.9 | 3.2 | 2.0 |
| **முதலீட்டுப் பொருட்கள்** | **4.8** | **5.3** | **4.4** | **4.8** | **3.9** |
| கட்டடப்பொருட்கள் | 7.2 | 7.2 | 8.2 | 5.9 | 4.3 |
| போக்குவரத்து கருவிகள் | 7.1 | 7.1 | 3.7 | 7.6 | 7.8 |
| பொறிகளும் கருவிகளும் | 2.7 | 3.1 | 2.5 | 2.8 | 1.5 |
| ஏனைய முதலீட்டுப் பொருட்கள் | 4.2 | 3.9 | 3.3 | 4.0 | 2.8 |
| **சராசரி இறக்குமதித் தீர்வை வசூலிப்பு வீதம்** | **4.1** | **4.6** | **7.8** | **5.0** | **3.8** |

(அ) உண்மையான இறக்குமதி தீர்வை சேகரிப்பு மொத்த (இறக்குமதியின் சதவீதமாக எதற்கு பொருந்துமோ அதற்கான விசேட பண்டங்கள் வரி உள்ளடங்கலாக) (பொ.கா.பெ).
(ஆ) தற்காலிகமானது

மூலம்: இலங்கைச் சுங்கம்

0, 2.5, 6, 15 மற்றும் 28 சதவீதம் கொண்ட ஐந்து தீர்வை அமைப்புக்களிலிருந்து இலகுபடுத்தப்பட்டவையாகும். கைத்தொழில் உற்பத்தியை உத்வேகப்படுத்தும் பொருட்டும் பெறுமதி கூட்டப்பட்ட ஏற்றுமதிகளை ஊக்குவிக்கும் பொருட்டும் தற்போதைய அமைப்பின் கீழ், ஏற்றுமதிக்கான பொருட்களின் உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படும் பெரும்பாலான மூலப் பொருட்கள் மற்றும் பொறிகள் என்பன முன்னைய 2.5 சதவீதத்திலிருந்து மாற்றப்பட்டு பூஜ்ய தீர்வை அல்லது தீர்வையற்றனவாக்கப்பட்டன.

**வெளிநாட்டுச் செலாவணியை சம்பாதிக்கும் கைத் தொழில்களுக்கு இறக்குமதிகளை வசதிப்படுத்தும் அதேவேளை உற்பத்திப் புத்தாக்கங்களையும் பெறுமதிகூட்டல்களையும் தீவிரப்படுத்துவதன் மூலம் ஏற்றுமதித் தளத்தினை விரிவாக்குவதற்காக 2011 வரவு செலவுத்திட்டம் முன்னேற்றகரமான வழிமுறைகளை நடைமுறைப்படுத்தியிருக்கிறது.** பெறுமதிகூட்டல்களை ஊக்கு விக்கும் பொருட்டு, ரைட்டேனியம், இயற்கைக் காரியம் போன்ற கனிமப்பொருட்கள் உள்ளிட்ட அநேக மூலப்பொருட்கள் மற்றும் ஓரளவு பதனிடப்பட்ட ஏற்றுமதிகள் மீதான செஸ் தீர்வையொன்று அறிமுகப்படுத்தப்பட்ட அதேவேளையில் இறுதி உற்பத்திகளுக்கு செஸ் தீர்வையிலிருந்து விலக்களிக்கப்பட்டது. மேலும், உள்நாட்டுக் கைத்தொழில்கள் முன்னேற்றங்கண்ட தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதனை அதிகரிக்கும் பொருட்டு பொறிகள், கருவிகள் மற்றும் மூலப்பொருட்கள் மீதான இறக்குமதித் தீர்வை குறைக்கப்பட்டது. இதன் மூலம் உலகத்தரம் வாய்ந்த உற்பத்திகளை அவர்கள் தயாரிப்பது இயலுமைப்படுத்தப்படும். மேலும், 2016 அளவில் சுற்றுலாக் கைத்தொழிலானது 2.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகளைக் கையாள்வதற்கான ஆற்றலை வசதிப்படுத்தும் விதத்தில் விரிவாக்கங்கள், புதுப்பித்தல்கள் மற்றும் பணிகளைத் தரமுயர்த்தல் என்பனவற்றிற்குத் தேவைப்படும் பொருட்கள் மீதான செஸ் தீர்வை குறைக்கப்பட்டது.

**அனைத்தையுமுள்ளடக்கிய வளர்ச்சியை எய்துவதற்காக வர்த்தகம் மற்றும் வணிகத்தினை மேம்படுத்துவதில் புவிசார் மற்றும் தொழில்நுட்பத் தொடர்புகளின் முக்கியத்துவத்தினை அங்கீகரிக்கின்ற விதத்தில் உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்களுக்கான முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகளுக்கு சில வரிகளிலிருந்து விலக்களிக்கப்பட்டன.** இதன்படி, 2011 சனவரி 01 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் வெளிநாட்டுக் கடன்களின் மூலம் அல்லது நிதி திட்டமிடல் அமைச்சினால் ஒப்புதலளிக்கப்பட்ட அரச அமைச்சுக்களுக்கான நேரடி அன்பளிப்புக்களின் மூலம் நிதியிடப்படும் உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்களுக்கான இறக்குமதிகள் தேசத்தினைக் கட்டியெழுப்பும் வரியிலிருந்தும் பெறுமதிசேர் வரியிலிருந்தும் விலக்களிக்கப்பட்டன. மேலும், பிட்டுமன் மற்றும் குறிப்பிட்ட வகைப் போக்குவரத்துக் கருவிகளின் இறக்குமதிகளுக்கு தேசத்தினைக் கட்டியெழுப்பும் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்ட வேளையில் தொலைத் தொடர்பூட்டல் துறையின் உயர் தொழில்நுட்பக் கருவிகளுக்கு பெறுமதிசேர் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது. இக்கொள்கைகள் 2011இல் உட்கட்டமைப்புடன் தொடர்பான முதலீடுகள் மற்றும் இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிகளில் விரைந்த உயர்வு ஏற்பட வழிவகுத்தன.

**குறிப்பிட்ட உணவுப் பொருட்களின் உள்நாட்டு விலைகளை சமநிலையில் வைத்திருப்பதற்கு அநேக வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.** உள்நாட்டு நிரம்பலர்களைப் பாதுகாப்பதற்காக இறக்குமதிகளை கட்டுப்படுத்துவதற்கு முக்கியமானதொரு கருவியாக சிறப்புப் பண்டத் தீர்வை பயன்படுத்தப்பட்டதுடன் குறிப்பாக உயர்ந்த உள்நாட்டு நிரம்பல்கள் காணப்பட்ட வேளையில் மேற்கொள்ளப்படும் அநேக உணவுப் பொருட்களின் இறக்குமதி மீதும் இது விதிக்கப்பட்டது. உலர் காய்கறிகள், உலர் பழவர்க்கங்கள் போன்ற குறிப்பிட்ட உணவுப் பொருட்களின் இறக்குமதி மீதான செஸ் தீர்வைகள் அதிகரிக்கப்பட்ட வேளையில் கோதுமை மா மற்றும் திரிபோசா என்பனவற்றின் இறக்குமதி மீது செஸ் தீர்வை அறிமுகப்படுத்தப்பட்டது.

**நிறுவன ரீதியான கட்டமைப்பினை வலுப்படுத்துவதன் மூலம் வெளிநாட்டு வர்த்தகத்திற்கான ஆதரவுப் பணிகளை மேம்படுத்துவதற்காக ஒருங்கிணைந்த முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன.** வெளிநாட்டு வர்த்தகத்தை வசதிப்படுத் துவதற்காக உருவாக்கப்பட்ட நிறுவனங்கள், நாட்டின் வெளிநாட்டு வர்த்தகக் கொள்கைகளுக்கு உதவும் விதத்தில் தமது பணிகளை மேம்படுத்திக் கொள்வதன் மீதும் தொழில் முயற்சியாண்மையாளர் மற்றும் ஏற்றுமதியாளர்களுக்கான தூண்டுதலளிக்கும் சூழ்நிலையினை உருவாக்குவதன் மீதும் பெருமளவு கவனத்தினைச் செலுத்தின. ஆவணப்படுத்தலை விரைவுபடுத்துவதற்காக இலங்கைச் சுங்கம் அதேநேர சுங்கப் பிரகடனங்களை நடைமுறைப்படுத்துவதற்கான முனைவுகளை மேற்கொண்டது. இம்முறைமையானது துறைமுகம், சுங்கம் மற்றும் வசதியளிக்கும் வங்கிக்கு அதேநேரத்தில் தகவல்களைப் பூரணப்படுத்துவதுடன் ஏற்றுமதியாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்களுக்கு இலத்திரனியல் அதேநேர கொடுப்பனவுகளுக்கு வசதிகளையும் வழங்கும். நடைமுறைகளையும், தொழிற்பாட்டு வினைத்திறனையும் ஒழுங்குபடுத்துவதற்காக, ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, முக்கிய உற்பத்தித் துறைகளின் அம்சங்களை உள்ளடக்கத்தக்க விதத்தில் தனியார் மற்றும் அரச துறை இரண்டிலுமிருந்தான பிரதிநிதிகளை உள்ளடக்கி 20 ஆலோசனைக் குழுக்களை அமைத்தது. ஏற்றுமதி அபிவிருத்திச் சபையானது உயர்ந்தளவு உள்ளார்ந்த வளத்தை உழைக்கக் கூடியவையென அடையாளம் காணப்பட்ட ஏழு முன்னுரிமை உற்பத்தித் துறைகளை மேலும் இலக்கிட்டமையானது 2015 அளவில் இலக்கிடப்பட்ட ஐ.அ.டொலர் 15 பில்லியன்களுக்கு மேற்பட்ட தொகையினை அடைவதற்கு ஏற்றுமதிகளை இட்டுச் செல்லும். இத்துறைகள் ஆடை, தேயிலை, இறப்பரை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகள், வைரங்கள், இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள், தகவல் மற்றும் தொடர்பூட்டல் தொழில்நுட்பம்/ வெளியிலிருந்து பணிகளைப் பெற்றுக் கொள்ளுதல்/ அறிவினை வெளியிலிருந்து பெற்றுக் கொள்ளல், உணவு மற்றும் குடிபானம், வாசனைத் திரவியங்கள் மற்றும் அதனுடன் இணைந்த உற்பத்திகள் போன்றவற்றை உள்ளடக்கியிருந்தன. வேளாண்மை ஏற்றுமதி வியாபாரங்கள் இலக்கிடப்பட்ட பயிர்ச்செய்கையாளர்கள்

**அட்டவணை 5.3 வர்த்தகச் சுட்டெண்கள் (அ)**

2010=100

| வகை | பெறுமதிச் சுட்டெண் | | | அளவுச் சுட்டெண் | | | அலகு விலைச் சுட்டெண் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2010 | 2011(ஆ) | வளர்ச்சி(%) | 2010 | 2011(ஆ) | வளர்ச்சி(%) | 2010 | 2011(ஆ) | வளர்ச்சி(%) |
| **ஏற்றுமதிகள்** | | | | | | | | | |
| **வேளாண்மை ஏற்றுமதிகள்** | **100.0** | **109.7** | **9.7** | **100.0** | **97.5** | **-2.5** | **100.0** | **112.5** | **12.5** |
| தேயிலை | 100.0 | 103.5 | 3.5 | 100.0 | 98.2 | -1.8 | 100.0 | 105.4 | 5.4 |
| இறப்பர் | 100.0 | 119.2 | 19.2 | 100.0 | 83.1 | -16.9 | 100.0 | 143.5 | 43.5 |
| தெங்கு | 100.0 | 160.6 | 60.6 | 100.0 | 116.3 | 16.3 | 100.0 | 138.1 | 38.1 |
| ஏனைய வேளாண்மை உற்பத்திகள் | 100.0 | 124.2 | 24.2 | 100.0 | 144.2 | 44.2 | 100.0 | 86.1 | -13.9 |
| **கைத்தொழில்கள் ஏற்றுமதிகள்** | **100.0** | **131.2** | **31.2** | **100.0** | **118.5** | **18.5** | **100.0** | **110.7** | **10.7** |
| புடவைகளும் ஆடைகளும் | 100.0 | 125.0 | 25.0 | 100.0 | 113.5 | 13.5 | 100.0 | 110.1 | 10.1 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 100.0 | 210.0 | 110.0 | 100.0 | 134.8 | 34.8 | 100.0 | 155.8 | 55.8 |
| இறப்பரினை அடிப்படையாக கொண்ட உற்பத்திகள் | 100.0 | 159.0 | 59.0 | 100.0 | 117.0 | 17.0 | 100.0 | 135.9 | 35.9 |
| **கனிப்பொருள் ஏற்றுமதிகள்** | **100.0** | **135.7** | **35.7** | **100.0** | **110.0** | **10.0** | **100.0** | **123.3** | **23.3** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **100.0** | **122.5** | **22.5** | **100.0** | **110.4** | **10.4** | **100.0** | **110.9** | **10.9** |
| **இறக்குமதிகள்** | | | | | | | | | |
| **நுகர்வுப்பொருட்கள்** | **100.0** | **147.7** | **47.7** | **100.0** | **125.6** | **25.6** | **100.0** | **117.6** | **17.6** |
| உணவும் குடிப்பானங்களும் | 100.0 | 118.4 | 18.4 | 100.0 | 108.5 | 8.5 | 100.0 | 109.1 | 9.1 |
| ஏனைய நுகர்வுப்பொருட்கள் | 100.0 | 181.2 | 81.2 | 100.0 | 145.2 | 45.2 | 100.0 | 124.8 | 24.8 |
| **இடைநிலைப் பொருட்கள்** | **100.0** | **152.5** | **52.5** | **100.0** | **123.3** | **23.3** | **100.0** | **123.7** | **23.7** |
| வளமாக்கி | 100.0 | 169.5 | 69.5 | 100.0 | 122.9 | 22.9 | 100.0 | 137.9 | 37.9 |
| மசகெண்ணைய் | 100.0 | 157.7 | 57.7 | 100.0 | 121.1 | 21.1 | 100.0 | 130.2 | 30.2 |
| ஏனைய பெற்றோலியம் | 100.0 | 135.0 | 35.0 | 100.0 | 115.8 | 15.8 | 100.0 | 116.6 | 16.6 |
| இராசாயனக்கூறுகளும் கலவைகளும் | 100.0 | 161.8 | 61.8 | 100.0 | 117.9 | 17.9 | 100.0 | 137.2 | 37.2 |
| புடைவைகள் | 100.0 | 128.3 | 28.3 | 100.0 | 111.7 | 11.7 | 100.0 | 114.8 | 14.8 |
| பிளாத்திக்குகள் | 100.0 | 123.7 | 23.7 | 100.0 | 110.8 | 10.8 | 100.0 | 111.7 | 11.7 |
| வைரங்கள் | 100.0 | 284.9 | 184.9 | 100.0 | 200.4 | 100.4 | 100.0 | 142.2 | 42.2 |
| **முதலீட்டுப் பொருட்கள்** | **100.0** | **155.6** | **55.6** | **100.0** | **128.2** | **28.2** | **100.0** | **121.3** | **21.3** |
| கட்டடப் பொருட்கள் | 100.0 | 131.0 | 31.0 | 100.0 | 121.2 | 21.2 | 100.0 | 108.0 | 8.0 |
| போக்குவரத்துக் கருவிகள் | 100.0 | 179.7 | 79.7 | 100.0 | 144.4 | 44.4 | 100.0 | 124.4 | 24.4 |
| பொறியும் கருவியும் | 100.0 | 160.1 | 60.1 | 100.0 | 125.4 | 25.4 | 100.0 | 127.7 | 27.7 |
| ஏனைய முதலீட்டுப்பொருட்கள் | 100.0 | 120.6 | 20.6 | 100.0 | 118.9 | 18.9 | 100.0 | 101.4 | 1.4 |
| **மொத்த இறக்குமதிகள்** | **100.0** | **151.2** | **51.2** | **100.0** | **123.5** | **23.5** | **100.0** | **122.4** | **22.4** |
| **வர்த்தக மாற்று விகிதம்** | | | | | | | **100.0** | **90.7** | **-9.3** |

(அ) வர்த்தக சுட்டெண்ணானது ஐ.அ.டொலர் நியதிகளில் பரந்த உள்ளடக்கத்துடன் 2010 இனை அடிப்படை ஆண்டாகக் கொண்டு கணிப்பிடப்பட்டது.
(ஆ) தற்காலிகமானது

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

மற்றும் வழங்கல் இணைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களூடாக ஊக்குவிக்கப்பட்டதுடன் இது இனிவரும் ஆண்டுகளில் சிறுவேளாண்மை ஏற்றுமதிகளை அதிகரிக்கவும் எதிர்காலத்தில் மேலும் வளர்ச்சிக்கான வாய்ப்புக்கள் ஏற்படுவதனையும் இயலச் செய்யும். இலங்கையின் உயர் தரத்திலான, தனிச் சிறப்பு வாய்ந்த பொருட்களை ஒரே வர்த்தக அடையாளத்தின் கீழ் ஒருங்கிணைந்து அதனை, நிலைநிறுத்தும் ஒரு முயற்சியாக, இலங்கைக் கறுவாவானது, 'சிலோன் தேயிலை' மற்றும் 'சிலோன் நீலக்கல்' போன்ற வர்த்தக அடையாளங்களுடன் இணைந்து செல்லும் விதத்தில் 'சிலோன் கறுவா' என பெயரிடப்பட்டது. இது, உயர்ந்த பெறுமதி கொண்ட பண்டமாக சிலோன் கறுவாவை உலகளாவிய ரீதியில் சந்தைப்படுத்துவதற்காக முன்னெடுக்கப்பட்டது. அதேவேளை, முக்கிய ஏற்றுமதி நாடுகளின் உயர்வடைந்து வரும் புவிசார் பதற்றங்கள் ஏற்றுமதிக் கொடுகடனுக்கான காப்புறுதி உள்ளடக்கத்தில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினை விளைவித்தது. மத்திய கிழக்கிற்கான தேயிலை ஏற்றுமதிகள் கொடுகடன் காப்புறுதிகளில் ஏறத்தாழ 57 சதவீத உயர்ந்த வளர்ச்சியைக் காட்டின.

**உலகளாவிய பொருளாதாரத்தில் தொடர்ந்து காணப்படும் நிச்சயமற்ற தன்மைகளின் காரணமாக பேரப்பேச்சுகள் மூலமான வர்த்தக ஒழுங்குகளில் ஒரு அதிகரித்த போக்கு காணப்படுகிறது.** இலங்கை திறந்த பொருளாதார நாடு என்ற ரீதியில், உலக வர்த்தக பேரப்பேச்சு துறையில் பொதுவாகக் காணப்படும் பின்னடைவுகள், தாமதங்கள் என்பனவற்றிற்கிடையிலும் பல்புடை, பிராந்திய மற்றும் இருபுடைய மட்டங்களிலுள்ள வர்த்தகப் பங்காளர்களுடனான தொடர்புகளை வலுப்படுத்திக் கொண்டது. முக்கியமான பல்புடை மட்ட வர்த்தக பேரப்பேச்சாக விளங்கும் உலக வர்த்தக அமைப்பிலுள்ள டோகா அபிவிருத்திச் சுற்று, 2011இல் பேரப் பேச்சுக்களை முடித்துக் கொள்வதற்கு கடப்பாடுகள் காணப்பட்ட போதும் உறுப்பு நாடுகளினால் ஒரு முறையான உடன்படிக்கைக்கு வரமுடியாமல் இருந்தது. 2011 திசெம்பரில் நடத்தப்பட்ட உலக வர்த்தக அமைப்பின் எட்டாவது அமைச்சுக்கள் கூட்டத்தில், இலங்கை வேளாண்மை மற்றும் வேளாண்மையல்லா சந்தை வசதிகளை அடைந்து கொள்வது தொடர்பான துறைகளில் முக்கியமான ஈடுபாடுகளைக் கொண்டுள்ளமையினால் டோகா சுற்றினை முடிவிற்குக் கொண்டு வருவதிலுள்ள தாமதம் தொடர்பாக அதன் கரிசனைகளை வெளிக்காட்டியது. வர்த்தகம் மற்றும் அபிவிருத்தி மீதான ஐக்கிய நாடுகள் மாநாட்டின் ஆதரவின் கீழான தெற்கு மற்றும் தெற்கு வர்த்தகத்தினை ஊக்குவிக்கின்ற வர்த்தக முன்னுரிமைகளின் உலகளாவிய முறைமை தொடர்ந்தும் இலங்கைக்கு சிறியளவு நன்மைகளையே வழங்கியது. வர்த்தக முன்னுரிமைகளின் உலகளாவிய முறைமையின் கீழ் 2011இல் ஐ.அ.டொலர் 10.6 மில்லியன் பெறுமதியான பொருட்களை மட்டுமே இலங்கை ஏற்றுமதி செய்தமையானது உடன்படிக்கையின் கீழ் வழங்கப்பட்ட வசதிகளும் வழிகளும் பயன்படுத்தப்படுவதனை மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் மிகத் தெளிவாக எடுத்துக்காட்டியது.

**ஆசிய - பசுபிக் வர்த்தக உடன்படிக்கையின் செயற்பரப்பினை விரிவாக்கிக் கொள்ளும் ஒரு முன் முயற்சியாக வர்த்தக வசதிப்படுத்தல் மற்றும் முதலீடு மீதான கட்டமைப்பு உடன்படிக்கைகளை இலங்கை உறுதிப்படுத்திக் கொண்டதுடன் பயன்பாட்டிலுள்ள கட்டமைப்பு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.** ஆசிய - பசுபிக் வர்த்தக உடன்படிக்கை சீனா, கொரியா போன்ற பாரிய சந்தைகளுக்குள் நுழைகின்ற வாய்ப்பை வழங்குவதனால் இலங்கை முன்னுரிமைகளின் 40 சதவீத தீர்வை தொடர்களுக்கு 40 சதவீத அளவை வழங்கும் முழுமையான நடைமுறைக்கிடலுக்கு இலங்கை ஆதரவளித்தது. ஆசிய - பசுபிக் வர்த்தக உடன்படிக்கையில் இலங்கை அபிவிருத்தி குறைந்த நாடாகக் கருதப்படுவதனால் மேற்கூறிய கட்டுப்பாடுகளிலிருந்து விலக்களிக்கப்பட்டது. எதிர்கணிய பட்டியலினை மேலும் குறைப்பதற்கான உறுப்பினர்களின் கலந்துரையாடல்கள் 2011இலும் தொடர்ந்தது. ஆசிய - பசுபிக் வர்த்தக உடன்படிக்கை பரந்த செயற்பரப்பினைக் கொண்டிருந்த போதும் இவ்வுடன்படிக்கையின் கீழ், ஏற்றுமதிகளின் பெரும் பங்கை உருவாக்கும் தேயிலை மற்றும் தும்பு போன்ற மட்டுப்படுத்தப்பட்ட பொருட்களே ஏற்றுமதி செய்யப்பட்டன.

**தென்னாசிய பிராந்தியத்தில் பல்புடை மற்றும் இருபுடை மட்டங்கள் இரண்டிலும் வர்த்தகத் தொடர்புகளை வலுப்படுத்திக் கொள்வதற்கான அதன் முயற்சிகளை இலங்கை தொடர்ந்தும் மேற்கொண்டது.** பிராந்திய வர்த்தகத்தினை மேலும் விரைவுபடுத்தும் குறிக்கோளுடன், தெற்காசிய சுதந்திர வர்த்தக வலயமானது, அவர்களின் தாக்கமுள்ள பட்டியலிலிலிருந்தான தீர்வை மட்டங்களை 20 சதவீதத்திற்கு குறைப்பதனை ஏற்கனவே வழங்கியுள்ளதுடன் இது 2012 ஆரம்பம் முதல் நடைமுறைப்படுத்தபப்படும். மேலும் தீர்வையினை 5 சதவீதத்திலிருந்து 0 சதவீதத்திற்கு படிப்படியாகக் 2016இற்கு முதல் குறைக்க உறுப்பினர்கள் எதிர்பார்க்கப்படுகின்றனர். எனினும் இலங்கையின் முக்கியமான பிராந்திய வர்த்தகப் பங்காளர்களான இந்தியா மற்றும் பாகித்தானுடனான வர்த்தகம் இருபுடை உடன்படிக்கையின் கீழ் காணப்பட்டமையின் காரணமாக தெற்காசிய சுதந்திர வர்த்தக வலயம் மற்றும் தெற்காசிய முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கை என்பனவற்றின் கீழான வர்த்தகம் மிகக் குறைந்தளவிலேயே காணப்பட்டது. 2010 ஏப்பிறலில் கையெழுத்தான பணிகளின் வர்த்தகம் தொடர்பான பிராந்திய ஒத்துழைப்பிற்கான தெற்காசிய அமைப்பின் (சார்க்) கட்டமைப்பு உடன்படிக்கை ஆப்கானிஸ்தான் மற்றும் பூட்டான் தவிர்ந்த அனைத்து உறுப்பினர்களாலும் ஏற்கனவே உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. உறுப்பினர் அவர்களின் கடப்பாடுகளின் அட்டவணைப்படி 2011 மார்ச்சில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்ததுடன் அவற்றை 2012 யூன் அளவில் இறுதிப்படுத்தி பின்பற்றுவார்களென எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும், 2011இல் குறிப்பிடத்தக்க அபிவிருத்திகள் எதுவும் இடம்பெறவில்லை. இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ்,

2011இல் இலங்கையின் ஏற்றுமதிகள் 9.5 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில், இந்தியாவிலிருந்தான இறக்குமதிகள் 72.4 சதவீதத்தினால் அதிகரித்தன. பெறுமதியில் தெளிவான வேறுபாடுகள் காணப்பட்ட போதும் இந்திய - இலங்கை சுதந்திர உடன்படிக்கையின் கீழ் இந்தியாவிற்கான பெருந்தொகை வடிவிலான ஏற்றுமதிகள் காணப்படுகின்ற அதேவேளையில் இறக்குமதிகளில் பெருந்தொகை உடன்படிக்கைக்கு வெளியிலேயே நடைபெற்றமையால் இந்திய இலங்கை சுதந்திர உடன்படிக்கையிலிருந்து இலங்கை நன்மைகளைப் பெற்றுக் கொண்டது. 2008 இலிருந்து அனைத்தையுமுள்ளடக்கிய பொருளாதார பங்குடமை உடன்படிக்கையில் காணப்பட்ட சிக்கலான தன்மையினைத் தொடர்ந்து, உத்தேச உடன்படிக்கையின் நகல் வரைவினை திருத்தும் நோக்கத்திற்காக 2011 பெப்புருவரியில் அமைச்சரவை இடை முகவர் குழுவொன்றினை நியமித்தது. உள்நாட்டு ஆர்வலர்களுடனான கூட்டங்களைத் தொடர்ந்து இடை முகவர் குழு முதலீட்டு அத்தியாயம் நீங்கலான நகல் வரைவின் திருத்தங்களை இறுதிப்படுத்தியது. 2005 இல் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்ட பாகித்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை 2011இன் பயன்பாட்டில் 25 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சியை எடுத்துக்காட்டி இலங்கையின் வளர்ந்து வரும் வர்த்தகப் பங்காளராக பாகித்தான் உருவாகி வருவதனைப் பிரதிபலிக்கிறது.

## 5.3 பொருட்களிலான வர்த்தகம், வர்த்தக நிலுவை மற்றும் வர்த்தக மாற்று விகிதம்

### ஏற்றுமதிச் செயலாற்றம்

**உலகளாவிய பொருளாதாரத்தின் மீட்சியில் பாதிப்புக்கள் காணப்பட்ட போதும் 2010இல் மீள உத்வேகமடைந்த ஏற்றுமதிகள் 2011ஆம் ஆண்டுப் பகுதியில் மேலும் வலுவடைந்தன.** ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 10 பில்லியன்களை விஞ்சி ஐ.அ.டொலர் 10,559 மில்லியன்களை அடைந்து முன்னைய ஆண்டினைவிட 2011இல் 22.4 சதவீதம் கொண்ட அதிகரிப்பொன்றினைக் காட்டியது. உலகளாவிய பொருளாதார மீட்சியில் முக்கியமாக இலங்கையின் பாரம்பரியச் சந்தைகளான ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், வட ஆபிரிக்கா மற்றும் மத்திய கிழக்கு நாடுகள் எதிர்நோக்கிய சமூக அரசியல் நிச்சயமற்ற தன்மைகளுக்கு மத்தியிலும் 2011இல் பெறப்பட்ட இவ்வேற்றுமதி வளர்ச்சி பாராட்டத்தக்கதாக விளங்குவதுடன் இலங்கை ஏற்றுமதிகளின் தாக்குப்பிடிக்கக் கூடிய தன்மையினையும் எடுத்துக்காட்டுகிறது. உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்பட்ட விரிவு, தாழ்ந்த வட்டியுடன் கூடிய சாதகமான முதலீட்டுச் சூழல் மற்றும் மேம்பட்ட உட்கட்டமைப்பு என்பன இந்த ஏற்றுமதி வளர்ச்சிக்குப் பங்களித்தன. ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட வளர்ச்சிக்கான பாரிய பங்களிப்பு ஐ.அ.டொலர் 1,896 மில்லியன் பெறுமதியான கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்து பெறப்பட்டதோடு அடுத்து வேளாண்மை ஏற்றுமதிகளிலிருந்து (ஐ.அ.டொலர் 221 மில்லியன்) பெறப்பட்டது.

**2011இல் கைத்தொழில் ஏற்றுமதிகள் 31.1 சதவீதத்தினால் ஐ.அ.டொலர் 7,992 மில்லியனுக்கு அதிகரித்தன.** இவ்வளர்ச்சிக்கான முக்கிய பங்களிப்பு புடவை மற்றும் ஆடைகள், பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் இறப்பர் உற்பத்திகளின் ஏற்றுமதிகளிலிருந்து கிடைத்தன. மேலும், உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை, இரத்தினக்கல், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள், போக்குவரத்துக் கருவிகள், பொறிகள் மற்றும் எந்திரத்திற்குத் தேவையான பொருத்திச் சாதனங்கள் என்பனவற்றின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களும் நன்கு செயற்பட்டன.

**மொத்த ஏற்றுமதிகளில் 39.7 சதவீதத்திற்கு வகைகூறும் புடவை மற்றும் ஆடைகளின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2011இல் ஐ.அ.டொலர் 4,191 மில்லியனுக்கு 24.9 சதவீதத்தினால் அதிகரித்து ஆடைக் கைத்தொழிலினால் நிர்ணயிக்கப்பட்ட ஐ.அ.டொலர் 4 பில்லியன் கொண்ட இலக்கினை விஞ்சின.** இலங்கை ஆடைகளின் தரம், அதேபோன்று முக்கியமாக கூலி அழுத்தங்களின் காரணமாக போட்டி நாடுகளின் உற்பத்திச் செலவு அதிகரிக்கின்றமை என்பன இலங்கையின் புடவை மற்றும் ஆடைகளின் ஏற்றுமதிக்கான கேள்வி வலுவாகக் காணப்பட உதவியிருக்கின்றன. இவ்வாண்டில் ஐ.அமெரிக்காவிற்கான ஆடை ஏற்றுமதிகள் 21.5 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் ஐரோப்பிய ஒன்றியத்திற்கான ஆடை ஏற்றுமதிகள் 25.1 சதவீதத்தினால் அதிகரித்தன. சந்தைகள் பன்முகப்படுத்தப்பட்டமையும் அதிகரித்த பெறுமதிகூட்டல்களும் கூட 2011இல் ஆடை ஏற்றுமதிகளின் வருவாய்கள் அதிகரிப்பதற்கு உதவின. உள்ளூர் பெறுமதிகூட்டல்களை மேலும் அதிகரிப்பதற்காக 2012ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தில், நூலிழைகளின் இறக்குமதி மீது சுங்க நிலையத்தில் விதிக்கப்பட்ட அனைத்து வரிகளிலுமிருந்து விலக்களித்தல், ஆடைக் கைத்தொழிலை நவீனமயப்படுத்துவதற்குத் தேவையான கருவிகளின் மீதான பெறுமதிசேர் வரி மற்றும் சுங்கத் தீர்வை என்பனவற்றிலிருந்து விலக்களித்தல் போன்ற பல்வேறு வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன.


**இறப்பர் உற்பத்திகள், பெற்றோலிய உற்பத்திகள், போக்குவரத்துக் கருவிகள், பொறிகள் மற்றும் எந்திரத்திற்குத் தேவையான பொருத்திச் சாதனங்கள், இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் போன்ற கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களும் 2011இல் அதிகரித்தன.** 2011இல் இறப்பர் உற்பத்திகளின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 885 மில்லியன்களுக்கு 58.7 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு விலைகளின் அதிகரிப்பே

## சிறப்புக்குறிப்பு 10 உலகளாவிய சமநிலையற்ற தன்மை

காலத்திற்குக் காலம் பொருளாதாரக் கொள்கை தொடர்பான கலந்துரையாடல்களின் போது, குறிப்பாக பொருளாதாரக் குழப்பநிலை காணப்படும் வேளையில், பொருளாதார தளர்வொன்றிற்கான 'காரணங்களை'க் கண்டறியும் முயற்சியொன்றாக உலகளாவிய சமநிலையற்றதன்மை பற்றிய கருத்து முதன்மை பெறுகிறது. பொருளாதரம் நல்ல நிலையில் காணப்படும் சந்தர்ப்பத்தில் "கவனிக்கப்படாதிருக்கும்" சில போக்குகளும் அமைப்பியல் மாற்றங்களும் குழப்ப நிலமைகளின் போது முன்னணிக்கு வந்துவிடும். குறிப்பிட்ட நேரங்களில் குறிப்பிட்ட நாடுகளில் "சாதகமானது" எனக் கருதப்பட்ட பேரண்டப் பொருளாதாரப் பண்புகள் வேறுபட்ட இன்னொரு சூழ்நிலையில் "அச்சுறுத்தும்" விடயமொன்றாகவும் தோற்றமளிக்க முடியும். அத்தகைய 'போக்குகள்' அந்நாடுகளுக்கு பாதகமானவையாக இருக்குமெனக் கருதப்படும் பொழுது அவற்றினை 'சமநிலைகள்' என்ற சொற்பதத்தினால் அழைக்கின்ற மனப்போக்கொன்று தோன்றுகிறது. இச்சொற்பதத்தினைப் பயன்படுத்துவது உலகளாவிய கொள்கை கலந்துரையாடல்களின் போது குறிப்பாக வடக்கு - தெற்கு கலந்துரையாடலின் போது மிகச் சுவாரஸ்யம் மிக்கதொன்றாக விளங்குகிறது. ஏனெனில் 'பாதகமானது' என்ற வெளிப்பாட்டின் வரைவிலக்கணமானது 'யார் நன்மை பெறுகின்றனர் யார் பாதிக்கப்படுகின்றனர்' என்பதில் தங்கியிருப்பதாகும் (கப்ரால், 2012).


தற்போதைய 'உலகளாவிய சமநிலையற்றதன்மை' சில அபிவிருத்தியடைந்த பொருளாதாரங்களின் பாரிய நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறைகள் என பொதுவாகக் கருதப்படுவதுடன் இது தோற்றம் பெற்றுவரும் சந்தை மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் பொருளாதாரங்களில் பாரிய மிகைகளை ஏற்படுத்துகிறது.[1] இக்கருத்துப்படி, 'சமநிலையற்ற' என்ற சொற்பதம் மிகவும் சாதகமற்ற ஓர் நிலையை விதந்துரைக்கிறது. யதார்த்தத்தில், சில நாடுகளில் நடைமுறைக் கணக்கு மிகைகள் எழுவதும் மற்றவையில் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறைகள் எழும் சம்பவம் உலக பொருளாதாரத்தில் புதிதான ஒன்றல்ல. எனினும், வரலாற்று ரீதியாக மிகையைக் கொண்ட பொருளாதாரங்கள் பற்றாக்குறைப் பொருளாதாரங்களாகவும் அதற்கு எதிர்மாறாகவும் இருப்பது தோற்றம் பெற்றுவரும் பிரச்சனையாக தோன்றுகிறது. 1970 இலிருந்து சில முன்னேற்றமடைந்த மற்றும் தோற்றம் பெற்றுவரும் சந்தைப் பொருளாதாரங்களிலான நடைமுறைக் கணக்கு நிலுவைகளின் இவ்வெதிர்மறையை வரைபடம் சிகு 10.1 சித்திரிக்கிறது. 1996 இலிருந்து நடைமுறைக் கணக்குப்

**வரைபடம் சிகு 10.1** நடைமுறைக் கணக்கு மீதி / மொ.உ.உ.




*மூலம்:* உலக பொருளாதார எதிர்பார்க்கைகளின் தரவுத்தளம், பன்னாட்டு நாணய நிதி, 2011 செத்

**வரைபடம் சிகு 10.2** முக்கிய பொருளாதார பிராந்தியங்கள் மற்றும் சில தெரிவு செய்யப்பட்ட நாடுகளின் நடைமுறைக் கணக்கு மீதி




*மூலம்:* உலக பொருளாதார எதிர்பார்க்கைகளின் தரவுத்தளம், பன்னாட்டு நாணய நிதி, 2011 செத்

பற்றாக்குறையை அனுபவித்த தோற்றம் பெற்றுவரும் சந்தை மற்றும் ஆசியப் பொருளாதாரங்கள் 1997 இலிருந்து வியக்கத்தக்க விதத்தில் மிகைகளுக்கு மாறியதை வரைபடம் காட்டுகிறது. இதேவேளை, முன்னேற்றமடைந்த பொருளாதாரங்களில் இதற்கு எதிர்மாறானது இடம்பெற்றுள்ள இத்தோற்றப்பாட்டை ஏற்படுத்திய காரணத்தை ஆராய்வது ஆர்வமுடையதாகவிருக்கும். 1977இல் ஏற்பட்ட ஆசிய நிதியியல்

1 பாரிய நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையைக் கொண்டுள்ள நாடுகளின் பொருளாதாரங்களைக் கவனத்திற் கொள்கையில் நீடித்து நிலைத்திருக்கும் இறைத் துறையை உறுதிப்படுத்தும் பொருட்டு தனியார் சேமிப்புகளை ஊக்கப்படுத்தும் அதேவேளையில் அரச துறையிலிருந்து தனியார் துறைக் கேள்வி மீள சமப்படுத்தப்பட வேண்டும் (பநாநி, 2011). மீள்சமப்படுத்தும் உபாயங்கள் நீடித்து நிலைத்திருக்கும் பொருளாதார மீட்சிக்கு உதவுவதற்கும் தொழில்நிலையை உருவாக்குவதற்குமான கொள்கை இடைவெளியை இலக்கிட வேண்டும். இதேவேளை, மிகையைக் கொண்டுள்ள பொருளாதாரங்களுக்கு மீள்சமநிலைப்படுத்தல் நீடித்து நிலைத்திருக்கக்கூடிய பொருளாதார வளர்ச்சியை உறுதிப்படுத்தும் அதேவேளை முன்னேற்றமடைந்த பொருளாதாரங்களிலிருந்து ஆரம்பமாகும் அதிர்வுகளுக்கு அவற்றின் தாக்குப்பிடிக்கத்தக்க நிலையை மேம்படுத்தும் பொருட்டு வெளிநாட்டிலிருந்து உள்நாட்டுக் கேள்விக்கு நடைபெற வேண்டும்.

நெருக்கடிக்குப் பின்னர் அநேகமான ஆசியப் பொருளாதாரங்கள் குறுங்காலப் படுகடன்களை உள்ளடக்குவதற்காக பெருமளவு பன்னாட்டு ஒதுக்குகளை ஒன்று சேர்க்கத் தொடங்கின. முன்னேற்றமடைந்த பொருளாதாரங்களின் தோற்றப்பாட்டின்படி அவற்றின் இறக்குமதிகள் ஏற்றுமதிகளை விட பல மடங்குகளில் அதிகரித்து பாரிய வர்த்தக சமநிலையற்ற தன்மையை அனுபவித்தல், பொதுவாகக் காணப்படுவதால், பாரிய சேமிப்பு/ முதலீட்டு சமநிலையற்றதன்மையை ஏற்படுத்துகின்றன. இதன் விளைவாக, பாரிய நடைமுறைக் கணக்கு மிகையைக் கொண்ட தோற்றம் பெற்று வரும் சந்தைப் பொருளாதாரங்கள் முன்னேற்றமடைந்த பொருளாதாரங்களுக்கு மூலதனத்தை ஏற்றுமதி செய்தன. உதாரணத்திற்கு, ஆசியப் பொருளாதாரங்கள் (முக்கியமாக மக்கள் சீனக் குடியரசு மற்றும் யப்பான்) மற்றும் எண்ணெய் ஏற்றுமதி செய்யும் பொருளாதாரங்களின் நடைமுறைக் கணக்கு மிகைகளின் அளவு அநேகமாக முன்னேற்றமடைந்த பொருளாதாரங்களின் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறைகளின் அதே அளவாக விளங்கியது (வரைபடம் சிகு 10.2).

பன்னாட்டு நிதியியலில் ஏற்பட்ட இம்முன்னேற்றங்கள் இயல்பாகவே தோற்றம் பெற்றுவரும் சந்தை மற்றும் அபிவிருத்தி அடைந்துவரும் பொருளாதாரங்களில் கணிசமான 'பன்னாட்டு' ஒதுக்கு ஒன்று சேர்தலுக்கு இட்டுச் சென்றதுடன் இப்பாரிய ஒதுக்குகளால் காட்டப்பட்ட வெளிநாட்டு உறுதிப்பாடு இப்பொருளாதாரங்களுக்கு மேலும் மூலதனப் பாய்ச்சல்கள் வருவதற்கு ஊக்கமளித்தது. இதேவேளை, தோற்றம் பெற்றுவரும் சந்தை மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் பொருளாதாரங்களின் வெளிநாட்டுப் படுகடன் இருப்பு கணிசமானளவில் அதிகரித்தது. இது மொ.உ. உற்பத்தியின் சதவீதமாக இருந்தபோதிலும் கணிசமான திரட்சி அண்மைக்காலங்களில் காணப்படுகிறது. எனினும், நடக்க இயலாததாக விளங்கும், தோற்றம் பெற்றுவரும் சந்தை மற்றும் ஆசியப் பொருளாதாரங்களின் பாரிய ஒதுக்கு மட்டங்களுக்கு மத்தியிலும் மூலதனத்தை வழங்கும் தோற்றம் பெற்றுவரும் நாடுகளுக்கிடையேயும் (இங்கு வட்டி வீதங்கள் அதிகம்) மூலதனத்தைப் பெறும் முன்னேற்றமடைந்த நாடுகளுக்கிடையேயும் (இங்கு வட்டி வீதங்கள் குறைவு) கணிசமான வட்டி வீத வேறுபாடுகள் காணப்படுகின்றன. அத்தகைய வட்டி வீத வேறுபாடுகள் தோற்றம் பெற்றுவரும் பொருளாதாரங்களில் வருமான மிகையையும் முன்னேற்றமடைந்த பொருளாதாரங்களில் வருமான இழப்பையும் ஏற்படுத்திய வேளையில் முன்னேற்றமடைந்த பொருளாதாரங்களிலிருந்து திரட்டப்பட்ட அவற்றின் வெளிநாட்டுப் படுகடன் மீது உயர் வட்டி வீதத்தைச் செலுத்துகின்றன. இந்நிகழ்வு தோற்றம் பெற்றுவரும் பொருளாதாரங்களின் மிகைகளின் நாட்டுக்குச் சொந்தமான 'மூலதனம் வேறு நாட்டுக்குச் சென்று அந்நாட்டின் வெளிநாட்டு நேரடி முதலீடாக மீள்முதலீடு செய்தல்' ஆகவும் குறிப்பிடலாம் (கப்ரால், 2012).

யார் நன்மையடைகிறார், யார் பாதிப்புறுகிறார், என்பதைக் கவனத்திற் கொள்கையில் அண்மைய உலகளாவிய நிதியியல் நெருக்கடி இல்லாவிடின் 'சமநிலையற்ற தன்மை' என்ற பிரச்சனை முக்கிய நிகழ்ச்சியாக அமைந்திருக்கமாட்டாது. இந்நிலைக்கு சிலர் திட்டமிட்ட மற்றும் கூட்டாக பதிலிறுத்துவது, இந்த காலத்திற்குகந்ததாக விதந்துரைக்கின்றனர். குறிப்பாக, ஒதுக்குகளைத் திரட்டல், சுவப் மற்றும் கொடுகடன் வசதிகள் மூலம் மிகையைக் கொண்டிருக்கும் நாடுகள் பிராந்திய ஒத்துழைப்பையும் ஒருங்கிணைப்பையும் தீவிரப்படுத்தலாம். உதாரணத்திற்கு, சியாங் - மாய் முன்னெடுப்பு பல்வகைப்படுத்தலில், சில தென்கிழக்காசிய மற்றும் தெற்காசிய நாடுகள் பிராந்திய திரவத்தன்மைக்கு உதவும் வசதியை உருவாக்கும் பொருட்டு அவற்றின் பன்னாட்டு ஒதுக்குகளின் ஒரு பகுதியை பொதுநிதியில் இடுகின்றன (SEACEN, 2012). உலகளாவிய நிதியியல் முறைமையில் முறைமை ரீதியான திரிபுகளைத் தீர்ப்பதற்கு அத்தகைய வழிமுறைகள் உலகளாவிய சமநிலையற்ற தன்மையின் தீவிரத்தைக் குறைக்க உதவும். தேசிய மட்டத்தில் மீள் எழுச்சியடைந்த நிதியியல் முறைமை பிராந்திய மற்றும் உலகளாவிய நிதியியல் உறுதிப்பாட்டை உறுதிப்படுத்துவதற்கான முக்கிய காரணியாக விளங்கும் வேளையில் பொருளாதாரக் கண்காணிப்பைப் பலப்படுத்தல் மரபு வழி எல்லைகளுக்கப்பால் இடம்பெற வேண்டிய தேவை காணப்படுகிறது. உலகப் பொருளாதார வரலாற்றில் பல பொருளாதார நெருக்கடிகளூடாக 'உலகளாவிய சமநிலையற்ற தன்மை' தொடர்ந்து காணப்பட்ட போதிலும் பொருத்தமான அமைப்பு ரீதியிலான சீர்திருத்தங்களூடாக உள்நாட்டு அதுபோல் முறைமை ரீதியிலான திரிபுகளைத் தீர்ப்பதற்கு மிகை மற்றும் பற்றாக்குறையையுடைய பொருளாதாரங்கள் அவர்களின் கடப்பாட்டுடன் ஒருங்கிணைந்த முயற்சியை மேற்கொள்ளாவிட்டால் இச்சமநிலையற்ற தன்மைகளிலிருந்து விடுபடுவது கடினமாகும்.[2]

**உசாத்துணை**


1. Bracke, T., Bussiere, M., Fidora, M. and Straub, R. (2008): 'A Framework for assessing global imbalances' European Central Bank Occasional Paper Series No.78
2. Cabraal, A.N. (2012): Global imbalances: Implications for SEACEN economies and moving Asia forward as a region', keynote address at the 10th SEACEN Executive Committee Meeting, Colombo, Sri Lanka.
3. IMF(2011): World Economic Outlook, International Monetary Fund
4. SEACEN (2011): 'Global imbalances: Implications for SEACEN economies and moving Asia forward as a region, The South East Asian Central Banks' Research and Learning Centre, Malaysia.


2 பாரிய நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையைக் கொண்டுள்ள நாடுகளின் பொருளாதாரங்களைக் கவனத்திற் கொள்கையில் நீடித்து நிலைத்திருக்கும் இறைத் துறையை உறுதிப்படுத்தும் பொருட்டு தனியார் சேமிப்புகளை ஊக்கப்படுத்தும் அதேவேளையில் அரச துறையிலிருந்து தனியார் துறைக் கேள்வி மீள சமப்படுத்தப்பட வேண்டும் (பநாநி, 2011). மீள்சமப்படுத்தும் உபாயங்கள் நீடித்து நிலைத்திருக்கும் பொருளாதார மீட்சிக்கு உதவுவதற்கும் தொழில்நிலையை உருவாக்குவதற்குமான கொள்கை இடைவெளியை இலக்கிட வேண்டும். இதேவேளை, மிகையைக் கொண்டுள்ள பொருளாதாரங்களுக்கு மீள்சமநிலைப்படுத்தல் நீடித்து நிலைத்திருக்கக்கூடிய பொருளாதார வளர்ச்சியை உறுதிப்படுத்தும் அதேவேளை முன்னேற்றமடைந்த பொருளாதாரங்களிலிருந்து ஆரம்பமாகும் அதிர்வுகளுக்கு அவற்றின் தாக்குப்பிடிக்கத்தக்க நிலையை மேம்படுத்தும் பொருட்டு வெளிநாட்டிலிருந்து உள்நாட்டுக் கேள்விக்கு நடைபெற வேண்டும்.


முக்கிய காரணமாகும். உள்நாட்டு திண்ம இறப்பர் டயர்கள் தயாரிப்பாளர்களும் ஏற்றுமதிச் சந்தைக்கான இறப்பர் கையுறைத் தயாரிப்பாளர்களும் உயர்ந்த இறப்பர் உற்பத்தி விலைகளின் காரணமாக ஊக்குவிக்கப்பட்ட வேளையில் ஏற்றுமதி வருவாய்களை அதிகரிப்பதனை இயலச் செய்வதற்காக பெறுமதிகூட்டப்பட்ட வாய்ப்புக்களும் கூடியளவிற்குப் பயன்படுத்தப்பட்டன. பெற்றோலிய உற்பத்திகளின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களும் நன்முறையில் செயலாற்றி நீர்க்கல எரிபொருட்களின் அளவிலும் அதேபோன்று விலைகளிலும் ஏற்பட்ட அதிகரிப்பினைப் பிரதிபலித்தன. கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டையிலுள்ள துறைமுகத் தொழிற்பாடுகள் விரிவடைவதுடன் நீர்க்கல எரிபொருள் வழங்கும் நடவடிக்கைகள் மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஈருருளிகள் மற்றும் படகுகள் போன்ற போக்குவரத்துச் சாதனங்கள் மற்றும் காப்பிடப்பட்ட கம்பிகள் மற்றும் மின்மாற்றிகள் போன்ற பொறி மற்றும் எந்திரத்திற்குத் தேவையான பொருத்திச் சாதனங்களின் ஏற்றுமதிக்கு இவ்வாண்டில் அதிகரிப்பினைப் பதிவு செய்தன. 2011இல் இரத்தினக்கற்கள், வைரங்கள், ஆபரணங்கள் என்பனவற்றின் ஏற்றுமதிகள் ஐ.அ.டொலர் 532 மில்லியனுக்கு 29.9 சதவீதத்தினால் அதிகரித்தவிடத்து, இரத்தினக்கற்கள் 35.6 சதவீதத்தினாலும் ரைவங்கள் 28.9 சதவீதத்தினாலும் வளர்ச்சியடைந்தமைக்கு இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணக் கைத்தொழிலுக்கு வழங்கப்பட்ட தீர்வைச் சலுகைகளிலிருந்தும் பெறுமதிகூட்டல்களுக்கான பொருள்களின் கிடைப்பனவிற்கு வசதியளித்தமையிலிருந்தும் கிடைத்த நன்மைகளே முக்கிய காரணமாகும். உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 42.4 சதவீதத்தினால் ஐ.அ.டொலர் 348 மில்லியனுக்கு அதிகரித்தமைக்கு கோதுமை, அரிசி போன்ற மா வகைகள், மரவள்ளிக்கிழங்கு, உருளைக்கிழங்கு, காய்கறிகள், பழவகை மற்றும் விதைகளின் தயாரிப்பு போன்றவற்றை உள்ளடக்கிய ஆலையிடும் கைத்தொழில் உற்பத்திகளே முக்கிய காரணமாகும்.

**மொத்த ஏற்றுமதிகளில் 23.9 சதவீதத்திற்கு வகைகூறும் வேளாண்மை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 2,528 மில்லியனுக்கு 9.6 சதவீதத்தினால் அதிகரித்தது.** 2011இன் முதலரைப் பகுதியில் பன்னாட்டுச் சந்தைகளில் நிலவிய உயர்ந்த விலைகளை அனுபவித்த பாரம்பரிய வேளாண்மைப் பயிர்களிலிருந்தான உயர்ந்த வருவாய்களை பெருமளவிற்கு **பிரதிபலித்தன.** வேளாண்மை ஏற்றுமதிகளிடையே தேயிலை 2011இன் மொத்த ஏற்றுமதி வருவாய்களில் 14.1 சதவீதத்திற்கு வகைகூறியதுடன் அதனை அடுத்து தேங்காய் (2.5 சதவீதம்), வாசனைத்திரவியங்கள் (2.2 சதவீதம்) மற்றும் இறப்பர் (2 சதவீதம்) என்பன காணப்பட்டன.

**தேயிலை ஏற்றுமதி தொடர்ந்தும் முக்கியமான வேளாண்மை ஏற்றுமதியாக விளங்கி மொத்த வேளாண்மை ஏற்றுமதிகளில் 59 சதவீதத்திற்குப் பங்களித்தது.** 2011ஆம் ஆண்டின் பின்னரைப் பகுதியில் மத்திய கிழக்கிலுள்ள பாரம்பரிய நாடுகளுக்கான ஏற்றுமதிகளில் மெதுவான தன்மை காணப்பட்ட போதும் தேயிலை ஏற்றுமதியிலிருந்தான வருவாய்கள் 3.5 சதவீதத்தினால் ஐ.அ.டொலர் 1,491 மில்லியனுக்கு அதிகரித்தன. தேயிலையின் சராசரி ஏற்றுமதி விலை 2011இல் கி.கிறாமொன்றிற்கு ஐ.அ.டொலர் 4.62 இற்கு 5.1 சதவீதத்தினால் உயர்வடைந்ததுடன் இதற்கு தேயிலையை இறக்குமதி செய்யும் நாடுகள் "இலங்கைத் தேயிலை" என்ற தரம் கூடிய தேயிலையின் கூடியளவு விருப்பம் கொண்டிருந்தமையும் இலங்கையின் தேயிலை உற்பத்தியில் ஏறத்தாழ 90 சதவீதத்திற்கு வகைகூறும் மரபுரிமைத் தேயிலைக்கான உயர்ந்த உலகளாவிய கேள்வியும் பெருமளவிற்குக் காரணங்களாக அமைந்தன. மத்திய கிழக்கின் முக்கிய சந்தைகள் சிலவற்றில் காணப்படும் புவிசார் பதட்ட நிலைமைகளின் காரணமாக தேயிலையின் ஏற்றுமதி அளவு 2011இல் 323 மில்லியன் கி. கிறாம்களுக்கு 1.5 சதவீதத்தினால் சிறிதளவிற்கு வீழ்ச்சியடைந்தன. 2011இன் நடுப்பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்ட பெருந்தோட்டங்களையும் உள்ளடக்கும் விதத்தில் வளமாக்கி உதவுதொகை விரிவாக்கப்பட்டமை தேயிலை உற்பத்தி அதிகரிக்க உதவியிருக்குமென்பதுடன் அது எதிர்காலத்தில் ஏற்றுமதியின் அளவினையும் அதிகரிக்கச் செய்யும். தொகை வடிவிலான தேயிலை ஏற்றுமதிகளின் மீது 2011 வரவு செலவுத்திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட கி.கிறாமொன்றிற்கான ரூ.10 கொண்ட செஸ்வரி, 2011இன் தொகை வடிவிலான ஏற்றுமதிகளின் அளவில் ஏற்பட்ட 6.9 சதவீதம் கொண்ட வீழ்ச்சியினால் எடுத்துக்காட்டப்பட்டவாறு பெறுமதிகூட்டப்பட்ட தேயிலை ஏற்றுமதிகளை அதிகரிப்பதில் வெற்றி கண்டிருப்பது போல் தோன்றுகிறது. மொத்தத் தேயிலை ஏற்றுமதிகளில் பெறுமதிகூட்டப்பட்ட தேயிலை ஏற்றுமதிகளின் பெறுமதிப்பங்கு 2010இன் 59.5 சதவீதத்திலிருந்து 2011இல் 63.9 சதவீதத்திற்கு அதிகரித்தது.

**இறப்பர் மற்றும் தெங்கு என்பனவற்றின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் அதிகரித்தமைக்கு விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாகும்.** ஏற்றுமதி அளவுகளில் வீழ்ச்சி காணப்பட்ட போதும் 2011இல் இறப்பர் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 19.1 சதவீதத்தினால் ஐ.அ.டொலர் 206 மில்லியனுக்கு அதிகரித்தன. முக்கிய சிறப்பு உற்பத்தி செய்யும் நாடுகளில் காணப்பட்ட

**வரைபடம் 5.3** ஏற்றுமதி செயலாற்றம்



**அட்டவணை 5.4 ஏற்றுமதிகளின் உள்ளமைப்பு (அ)**

| வகை | 2010 (ஆ) பெறுமதி ஐ.அ.டொலர் மில்லியன் | 2010 (ஆ) பங்கு % | 2011 (இ) பெறுமதி ஐ.அ.டொலர் மில்லியன் | 2011 (இ) பங்கு % | பெறுமதியில் மாற்றம் (இ) ஐ.அ.டொலர் மில்லியன் | வளர்ச்சி வீதம் (இ) % | வளர்ச்சிக்கான பங்களிப்பு (இ) % |
|---|---|---|---|---|---|---|---|
| **வேளாண்மை ஏற்றுமதிகள்** | **2,306.4** | **26.7** | **2527.8** | **23.9** | **221.4** | **9.6** | **11.5** |
| தேயிலை | 1,440.6 | 16.7 | 1,490.9 | 14.1 | 50.3 | 3.5 | 2.6 |
| இறப்பர் | 173.2 | 2.0 | 206.4 | 2.0 | 33.1 | 19.1 | 1.7 |
| தெங்கு | 165.8 | 1.9 | 266.0 | 2.5 | 100.1 | 60.4 | 5.2 |
| வாசனைப் பொருட்கள் | 207.3 | 2.4 | 235.2 | 2.2 | 27.9 | 13.5 | 1.4 |
| மரக்கறிகள் | 23.4 | 0.3 | 16.9 | 0.2 | -6.5 | -27.6 | -0.3 |
| உற்பத்தியாக்கப்படாத புகையிலை | 32.2 | 0.4 | 38.4 | 0.4 | 6.2 | 19.2 | 0.3 |
| சிறு வேளாண்மை உற்பத்திகள் | 71.6 | 0.8 | 88.7 | 0.8 | 17.1 | 23.8 | 0.9 |
| கடல் உணவுகள் | 192.2 | 2.2 | 185.3 | 1.8 | -6.9 | -3.6 | -0.4 |
| **கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **6,096.1** | **70.7** | **7,991.7** | **75.7** | **1,895.6** | **31.1** | **98.1** |
| புடவைகளும் ஆடைகளும் | 3,356.0 | 38.9 | 4,191.2 | 39.7 | 835.2 | 24.9 | 43.2 |
| இறப்பர் உற்பத்திகள் | 557.6 | 6.5 | 884.8 | 8.4 | 327.3 | 58.7 | 16.9 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 263.4 | 3.1 | 552.7 | 5.2 | 289.3 | 109.9 | 15.0 |
| வைரம் மற்றும் ஆபரணங்கள் | 409.0 | 4.7 | 531.5 | 5.0 | 122.5 | 29.9 | 6.3 |
| உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை | 244.6 | 2.8 | 348.2 | 3.3 | 103.6 | 42.4 | 5.4 |
| பொறியும் கருவியும் | 258.8 | 3.0 | 312.2 | 3.0 | 53.4 | 20.6 | 2.8 |
| அச்சு கைத்தொழில் உற்பத்திகள் | 246.1 | 2.9 | 235.1 | 2.2 | -11.1 | -4.5 | -0.6 |
| போக்குவரத்துக் கருவிகள் | 143.9 | 1.7 | 225.0 | 2.1 | 81.2 | 56.4 | 4.2 |
| தோல், பயணப்பொருட்களும் காலணியும் | 60.2 | 0.7 | 65.1 | 0.6 | 4.9 | 8.2 | 0.3 |
| மட்பாண்ட உற்பத்திகள் | 39.9 | 0.5 | 38.3 | 0.4 | -1.6 | -4.1 | -0.1 |
| ஏனைய கைத்தொழில்கள் உற்பத்திகள் | 516.6 | 6.0 | 607.5 | 5.8 | 90.9 | 17.6 | 4.7 |
| **கனிப்பொருள் ஏற்றுமதிகள்** | **24.2** | **0.3** | **32.9** | **0.3** | **8.6** | **35.7** | **0.4** |
| **பாகுப்படுத்தப்படாதவை** | **199.2** | **2.3** | **6.5** | **0.1** | **-192.7** | **-96.7** | **-10.0** |
| **மொத்த ஏற்றுமதிகள் (ஈ) (உ)** | **8,625.8** | **100.0** | **10,558.8** | **100.0** | **1,933.0** | **22.4** | **100.0** |
| **ஆண்டுச் சராசரி செலாவணி வீதம் (ஊ)** | **113.06** | | **110.57** | | | | |

(அ) தேசிய இறக்குமதி தீர்வை வழிகாட்டி - 2010 இனை அடிப்படையாகக் கொண்டு வகைகள் மீள வகைப்படுத்தப்பட்டுள்ளது.
(ஆ) திருத்தியமைக்கப்பட்டது
(இ) தற்காலிகமானது
(ஈ) சீராக்கப்பட்டவை
(உ) மீள் ஏற்றுமதிகள் தவிர்ந்த
(ஊ) ரூபா/ஐ.அ.டொலர் செலவாணி வீதம்

மூலங்கள்: இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்
மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள்
தேசிய இரத்தினக்கற்கள் ஆபரண அதிகார சபை
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

சாதகமற்ற வானிலை நிலைமைகளின் காரணமாக உலக சந்தையில் காணப்பட்ட இலங்கை இறப்பரின் குறைந்த நிரம்பலுடன் உயர்ந்த எண்ணெய் விலைகளும் இணைந்து கொழும்பு ஏலங்களின் விலைகள், குறிப்பாக 2011இன் முன்னரைப் பகுதியில் தொடர்ந்தும் கவர்ச்சியுடையனவாக விளங்கின. 2011இல் இறப்பரின் சராசரி ஏற்றுமதி விலை கி.கிறாமிற்கு ஐ.அ.டொலர் 4.84 இற்கு 45 சதவீதத்தினால் உயர்வடைந்தது. உயர்ந்த ஏற்றுமதி விலைகள் காணப்பட்ட போதும், இறப்பர் தயாரிப்புக் கைத்தொழில்களின் அதிகரித்த உள்நாட்டுக் கேள்வியின் காரணமாக 2011இல் இறப்பரில் ஏற்றுமதி அளவு 17.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை 2011இல் தெங்கு உற்பத்திகளின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 266 மில்லியனுக்கு 60.4 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு தேங்காய்த்துருவல் ஏற்றுமதிகளிலிருந்தான உயர்ந்த வருவாய்களே பெருமளவிற்குக் காரணமாகும். தேங்காய்த்துருவல் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட மிகக் கூடியளவு அதிகரிப்பிற்கு உயர்ந்த அளவும் ஏலங்களில் அடையப்பட்ட சாதகமான விலைகளுமே தூண்டுதலாக அமைந்தன. 2011இல் உடன் தேங்காய்களின் ஏற்றுமதி பெறுமதி, அளவு ஆகிய இரண்டு நியதிகளிலும் முறையே 46.4 சதவீதத்தினாலும் 60.5 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தமைக்கு அதிகரித்த உள்நாட்டுக் கேள்வியே காரணமாகும்.

**பன்னாட்டுச் சந்தைகளில் காணப்பட்ட சாதகமான விலைகளுடன் வாசனைத் திரவியங்கள் மற்றும் சிறுவேளாண்மை உற்பத்திகளிலிருந்தான வருவாய்கள் அதிகரித்தன.** கறுவா மற்றும் சாதிக்காய் என்பனவற்றை முதன்மையாகக் கொண்ட வாசனைத்திரவியங்களிலிருந்தான வருவாய்கள் 2011இல் ஐ.அ.டொலர் 235 மில்லியனுக்கு 13.5 சதவீதத்தினால் அதிகரித்தன. கறுவா ஏற்றுமதிகள் ஐ.அ.டொலர் 129 மில்லியனுக்கு 31.4 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு 2011இல் விலைகள் கி.கிறாமொன்றிற்கு ஐ.அ.டொலர் 9.38 இற்கு 30.8 சதவீதத்தினால் அதிகரித்தமையே பெருமளவிற்குக் காரணமாகும். மிளகு மற்றும் கராம்பு என்பனவற்றிலிருந்தான வருவாய்கள் வீழ்ச்சியடைந்தமைக்கு விலைகள் உயர்வாக இருந்த போதும் ஏற்றுமதி அளவுகள் குறைவடைந்தமையே காரணமாகும். பழவகை, உண்ணத்தக்க விதைகள், தானியங்கள், கொக்கோ, மலர்கள் மற்றும் செடிகள் என்பனவற்றை உள்ளடக்கிய சிறுவேளாண்மை உற்பத்திகள் உயர்ந்த ஏற்றுமதி வருவாய்களைப் பதிவு செய்தன. 2011இல் தயாரிக்கப்படாத புகையிலையிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 38 மில்லியனுக்கு 19.2 சதவீதத்தினால் அதிகரித்தன.


## இறக்குமதிச் செயலாற்றம்

**இறக்குமதிகள் மீதான செலவினம் 2010இன் ஐ.அ.டொலர் 13,451 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2011இல் ஐ.அ.டொலர் 20,269 மில்லியனுக்கு 50.7 சதவீதத்தினால் அதிகரித்தது.** நுகர்வு, இடைநிலை மற்றும் முதலீட்டுப்பொருட்கள் ஆகிய அனைத்து முக்கிய வகைகளுக்குமான உயர்ந்த கேள்வியும் அதேபோன்று உயர்ந்த பன்னாட்டுப் பண்ட விலைகளும் இறக்குமதிச் செலவினம் கூர்மையடைய காரணங்களாக அமைந்தன. இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிகள் மொத்த இறக்குமதிகளில் 60.6 சதவீதத்திற்கு வகைகூறிய வேளையில் முதலீட்டுப் பொருட்கள் மொத்த இறக்குமதிகளில் 21.2 சதவீதத்திற்கு வகைகூறின. நுகர்வுப்பொருட்களின் இறக்குமதிகள் மொத்த இறக்குமதிகளின் செலவினத்தில் 18 சதவீதத்திற்கு பங்களித்தன.


**2011இல் இடைநிலைப் பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் ஐ.அ.டொலர் 12,275 மில்லியனுக்கு 52.4 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு உயர்ந்த பெற்றோலிய மற்றும் புடவை இறக்குமதிகளே முக்கியமாக வழிவகுத்ததுடன், இச்செலவினங்கள் முறையே 57.7 சதவீதத்தினாலும் 28.1 சதவீதத்தினாலும் அதிகரித்ததுடன் இவை இணைந்து மொத்த இறக்குமதிச் செலவில் 35.1 சதவீதத்திற்குப் பங்களித்தன.** மசகெண்ணெயின் சராசரி இறக்குமதி விலை 2010இன் பீப்பாய் ஒன்றிற்கான ஐ.அ.டொலர் 79.52 உடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டுப் பகுதியில் பீப்பாய் ஒன்றிற்கு ஐ.அ.டொலர் 108.59 இற்கு 36.6 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு தோற்றம் பெற்றுவரும் சந்தை பொருளாதாரங்களிலிருந்தான அதிகரித்த கேள்வி மற்றும் வட ஆபிரிக்கா மற்றும் மத்திய கிழக்கிலுள்ள எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளில் நிலவிய நிச்சயமற்ற தன்மைகள் என்பன முக்கிய காரணங்களாக அமைந்தன. விரிவடைந்துவரும் பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் அதிகமான வெப்பவலு உருவாக்கத்தினால், பெற்றோலிய இறக்குமதிகள், மசகெண்ணெய் மற்றும். சுத்தீகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளின் அளவும் 2011இல் அதிகரித்தது. இதன் விளைவாக, பெற்றோலிய இறக்குமதிகள் மீதான செலவினம் 2010இன் ஐ.அ.டொலர் 3,041 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2011இல் ஐ.அ.டொலர் 4,795 மில்லியன்களாக விளங்கின. 2011இல் புடவை மற்றும் ஆடைகளின் இறக்குமதி மீதான செலவினம் ஐ.அ.டொலர் 2,321 மில்லியன்களாக விளங்கி குறிப்பாக 2011இன் முதலரைப் பகுதியில் ஆடை ஏற்றுமதிகளுக்கான அதிகரித்த கேள்வி மற்றும் புடவைகளின் அதிகரித்த விலைகள் இரண்டினையும் பிரதிபலித்தன. தேறிய நியதிகளில் புடவை மற்‌றும் ஆடைகளிலிருந்தான தேறிய ஏற்றுமதிகள் 2011 இல் ஐ.அ.டொலர் 1,871 மில்லியனாக விளங்கின. 2011இல் வளமாக்கி இறக்குமதிகள் மீதான செலவினம் ஐ.அ.டொலர் 407 மில்லியனுக்கு 69.5 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு பன்னாட்டுச் சந்தையில் நிலவிய உயர்ந்த கேள்விகளும் 2011 மேயிலிருந்து அனைத்துப் பயிர்களையும் உள்ளடக்கும் விதத்தில் வளமாக்கி உதவுதொகை வழங்கப்பட்டமையின் காரணமாக இறக்குமதிகளின் அளவு அதிகரித்தமையும் காரணங்களாக அமைந்தன. கோதுமை மற்றும் சோளம் மீதான இறக்குமதிச் செலவும் ஐ.அ.டொலர் 429 மில்லியனுக்கு 62 சதவீதத்தினால் அதிகரித்தது. இரசாயனங்கள், வைரங்கள், அரிய உலோகங்கள் போன்ற இடைநிலைப் பொருட்களின் மற்றைய வகைகளின் இறக்குமதிகளும் இக்காலப்பகுதியில் அதிகரித்தன. 2010இல் தங்கத்தின் மீதான இறக்குமதித் தீர்வை அகற்றப்பட்டிருந்தமையின் காரணமாக வைரங்கள் மற்றும் அரிய கற்கள் மற்றும் உலோகங்களின் இறக்குமதிக்கான முக்கிய பங்களிப்பாளராக விளங்கும் தங்கத்தின் இறக்குமதிகள் 2011இல் ஐ.அ.டொலர் 604 மில்லியனுக்கு ஆறு மடங்கிற்கும் கூடுதலாக அதிகரித்தன.

**போக்குவரத்துக் கருவிகள், பொறிகள் அதேபோன்று கட்டட மூலப்பொருட்கள் என்பனவற்றில் ஏற்பட்ட அதிகரிப்புக்களின் காரணமாக முதலீட்டுப் பொருட்கள் மீதான செலவினம் 2011இல் ஐ.அ.டொலர் 4,286 மில்லியன்களாக விளங்கி 55.4 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைப் பதிவு செய்தது.** முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதியில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு வெளிநாட்டுக் கடன்களினால் நிதியிடப்பட்ட அரசாங்கத்தின் பாரிய அளவு உட்கட்டமைப்பு அபிவிருத்திச்

**வரைபடம் 5.4 பண்டங்களின்படி ஏற்றுமதிகள்**




**வரைபடம் 5.5 இறக்குமதி செயலாற்றம்**



**அட்டவணை 5.5 இறக்குமதிகளின் உள்ளமைப்பு (அ)**

| வகை | 2010 (ஆ) | | 2011 (இ) | | பெறுமதியில் மாற்றம் (இ) ஐ.அ.டொலர் மில்லியன் | வளர்ச்சி வீதம் (இ) % | வளர்ச்சிக்கான பங்களிப்பு (இ) % |
|---|---|---|---|---|---|---|---|
| | பெறுமதி ஐ.அ.டொலர் மில்லியன் | பங்கு % | பெறுமதி ஐ.அ.டொலர் மில்லியன் | பங்கு % | | | |
| **நுகர்வுப் பொருட்கள்** | **2,476.3** | **18.4** | **3,653.6** | **18.0** | **1,177.3** | **47.5** | **17.3** |
| உணவும் குடிபானங்கள் | 1,321.6 | 9.8 | 1,566.9 | 7.7 | 245.3 | 18.6 | 3.6 |
| அரிசி | 59.0 | 0.4 | 18.4 | 0.1 | -40.6 | -68.8 | -0.6 |
| சீனி மற்றும் சீனி இனிப்பு வகை | 364.5 | 2.7 | 427.6 | 2.1 | 63.2 | 17.3 | 0.9 |
| பால் உற்பத்திகள் | 258.6 | 1.9 | 345.2 | 1.7 | 86.6 | 33.5 | 1.3 |
| பருப்பு வகை | 128.8 | 1.0 | 116.9 | 0.6 | -11.9 | -9.2 | -0.2 |
| ஏனையவை | 510.8 | 3.8 | 658.8 | 3.3 | 148.0 | 29.0 | 2.2 |
| ஏனைய நுகர்வுப் பொருட்கள் | 1,154.8 | 8.6 | 2,086.7 | 10.3 | 932.0 | 80.7 | 13.7 |
| வாகனங்கள் | 455.1 | 3.4 | 881.0 | 4.3 | 425.9 | 93.6 | 6.2 |
| மருத்துவ மற்றும் மருந்தாக்கல் பொருட்கள் | 216.9 | 1.6 | 348.2 | 1.7 | 131.3 | 60.5 | 1.9 |
| வீட்டுப் பாவனைப் பொருட்கள் | 93.2 | 0.7 | 227.9 | 1.1 | 134.7 | 144.4 | 2.0 |
| புடவைகள் மற்றும் அதற்கான துணைப் பொருட்கள் | 91.7 | 0.7 | 141.8 | 0.7 | 50.1 | 54.6 | 0.7 |
| ஏனையவை | 297.9 | 2.2 | 487.9 | 2.4 | 190.1 | 63.8 | 2.8 |
| **இடைநிலைப் பொருட்கள்** | **8,054.4** | **59.9** | **12,275.3** | **60.6** | **4,220.9** | **52.4** | **61.9** |
| பெற்றோலிய உற்பத்திகள் | 3,040.8 | 22.6 | 4,794.9 | 23.7 | 1,754.1 | 57.7 | 25.7 |
| புடவைகள் | 1,811.9 | 13.5 | 2,320.7 | 11.4 | 508.7 | 28.1 | 7.5 |
| வைரங்கள் மற்றும் அருமையான உலோகங்கள் | 378.1 | 2.8 | 1,075.7 | 5.3 | 697.7 | 184.5 | 10.2 |
| இரசாயன உற்பத்திகள் | 520.3 | 3.9 | 702.0 | 3.5 | 181.7 | 34.9 | 2.7 |
| கோதுமை மற்றும் சோளம் | 265.1 | 2.0 | 429.4 | 2.1 | 164.3 | 62.0 | 2.4 |
| வளமாக்கி | 240.3 | 1.8 | 407.2 | 2.0 | 166.9 | 69.5 | 2.4 |
| ஏனைய இடைநிலைப் பொருட்கள் | 1,797.8 | 13.4 | 2,545.3 | 12.6 | 747.6 | 41.6 | 11.0 |
| **முதலீட்டுப் பொருட்கள்** | **2,757.9** | **20.5** | **4,286.1** | **21.1** | **1,528.2** | **55.4** | **22.4** |
| கட்டடப் பொருட்கள் | 822.1 | 6.1 | 1,076.1 | 5.3 | 254.0 | 30.9 | 3.7 |
| போக்குவரத்துக் கருவிகள் | 593.2 | 4.4 | 1,064.6 | 5.3 | 471.4 | 79.5 | 6.9 |
| பொறியும் கருவியும் | 1,339.3 | 10.0 | 2,141.4 | 10.6 | 802.1 | 59.9 | 11.8 |
| ஏனைய முதலீட்டுப் பொருட்கள் | 3.3 | 0.0 | 4.0 | 0.0 | 0.7 | 20.7 | 0.0 |
| **பாகுபடுத்தப்படாத இறக்குமதிகள்** | **162.3** | **1.2** | **53.9** | **0.3** | **-108.5** | **-66.8** | **-1.6** |
| **மொத்த இறக்குமதிகள் (ஈ) (உ)** | **13,450.9** | **100.0** | **20,268.8** | **100.0** | **6,817.9** | **50.7** | **100.0** |
| **ஆண்டுச்சராசரி செலாவணி வீதம் (ஊ)** | **113.06** | | **110.57** | | | | |

(அ) தேசிய இறக்குமதி தீர்வை வழிகாட்டி - 2010 இனை அடிப்படையாகக் கொண்டு வகைகள் மீள வகைப்படுத்தப்பட்டுள்ளது
(ஆ) திருத்தியமைக்கப்பட்டது
(இ) தற்காலிகமானது
((ஈ) சீராக்கப்பட்டது
(உ) மீள் இறக்குமதிகள் நீங்கலாக
(ஊ) ரூபா/ ஐ.அ.டொ. செலவாணி வீதம்

மூலங்கள்: இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்
லங்கா ஐ.ஓ.சி. பி.எல்.சி
வரையறுக்கப்பட்ட பிறிமா இலங்கை
வரையறுக்கப்பட்ட செரண்டிப் (தனியார்) மா ஆலை
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

செயற்றிட்டங்களே முக்கிய காரணமாக அமைந்தது. பொறியியல் கருவிகள், இலத்திரனியல் கருவிகள், தொலைத் தொடர்பூட்டல் சாதனங்கள், அலுவலகப் பொறிகள், மருத்துவ மற்றும் ஆய்வுகூடச் சாதனங்கள் மற்றும் புடவைக் கைத்தொழிலுக்கான சாதனங்கள் என்பனவற்றை உள்ளடக்கிய பொறி மற்றும் கருவிகள் ஐ.அ.டொலர் 2,141 மில்லியனுக்கு 59.9 சதவீதத்தினால் அதிகரித்தன. பயணிகள் மற்றும் பொருட்களின் போக்குவரத்து ஊர்திகள், பார ஊர்திகள், சிறிய அளவுக் கப்பல்கள் மற்றும் படகுகள் என்பனவற்றை உள்ளடக்கிய போக்குவரத்துக்கருவி இறக்குமதிகளின் மீதான செலவினம் ஐ.அ.டொலர் 1,065 மில்லியனுக்கு 79.5 சதவீதத்தினால் அதிகரித்தது. சீமெந்து, இரும்பு மற்றும் உருக்கு, அலுமினியப் பொருட்கள் மற்றும் கனிப்பொருள் உற்பத்திகள் என்பனவற்றை முக்கியமாக உள்ளடக்கிய கட்டடப் பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் 2011இல் 30.9 சதவீதத்தினால் ஐ.அ.டொலர் 1,076 மில்லியனுக்கு அதிகரித்து நாட்டில் கட்டுமான நடவடிக்கைகள் விரிவடைந்தமையினைப் பிரதிபலித்தது.

**2011இல் நுகர்வுப் பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் ஐ.அ.டொலர் 3,654 மில்லியனுக்கு 47.5 சதவீதத்தினால் அதிகரித்தது.** நுகர்வுப் பொருட்களில் உணவல்லா நுகர்வுப் பொருட்கள் 57.1 சதவீதத்திற்குப் பங்களித்தன. ஆண்டு காலப்பகுதியில் 93.6 சதவீதத்தினால் ஐ.அ.டொலர் 881 மில்லியனுக்கு அதிகரித்த தனிப்பட்ட உந்து ஊர்திகள், உந்து ஈருருளிகள் மற்றும் முச்சக்கர வண்டிகள் என்பன உணவல்லா நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிக்கு முக்கியமாகப் பங்களித்தன. இவ்வாண்டுப் பகுதியில் உந்து ஊர்திகளின் இறக்குமதியில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு, இறக்குமதித் தீர்வைகளில் அண்மையில் செய்யப்பட்ட குறைப்பு, போட்டி வீதங்களில் ஒப்பீட்டு ரீதியில் இலகுவான முறையில் கொடுகடன்களை பெறமுடிந்தமை மற்றும் அதிகரித்த உண்மை வருமான மட்டங்கள் என்பன காரணங்களாக அமைந்தன. 2011இல் மருத்துவ மற்றும் மருந்தாக்கல் பொருட்களின் இறக்குமதிகளும் ஐ.அ.டொலர் 348 மில்லியன்களுக்கு 60.6 சதவீதத்தினால் அதிகரித்தன. 2011இல் உணவு மற்றும்

குடிபான இறக்குமதிகள் மீதான செலவினம் ஐ.அ.டொலர் 1,567 மில்லியனுக்கு 18.6 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு முக்கிய நுகர்வு உணவு பொருள் வகைகளின் அதிகரித்த பன்னாட்டு விலைகளே முக்கிய காரணமாகும். சீனி மற்றும் இனிப்புப் பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் ஐ.அ.டொலர் 428 மில்லியனுக்கு 17.3 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு, 2011இல் உலகளாவிய நிரம்பல் தடைகளின் காரணமாக சீனியின் இறக்குமதி விலைகள் 6.2 சதவீதத்தினால் அதிகரித்தமையே முக்கிய காரணமாகும். பால்மா உள்ளிட்ட பண்ணை உற்பத்திகளின் இறக்குமதிகள் ஐ.அ.டொலர் 345 மில்லியனுக்கு 33.5 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு உயர்ந்த பன்னாட்டு விலைகளே காரணமாகும்.


## வர்த்தக நிலுவை

**இறக்குமதிச் செலவினம் 50.7 சதவீதத்தினால் அதிகரித்து, ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட 22.4 சதவீதம் கொண்ட வளர்ச்சியை விஞ்சியமையினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் 2011இல் வர்த்தகப் பற்றாக்குறை கணிசமாக விரிவடைந்தது.** இதன்படி, வர்த்தகப் பற்றாக்குறை, 2010இன் ஐ.அ.டொலர் 4,825 மில்லியனிலிருந்து 2011இல் ஐ.அ.டொலர் 9,710 மில்லியனுக்கு 101.2 சதவீதத்தினால் அதிகரித்தது. மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக இது 2010இன் 9.7 சதவீதத்திலிருந்து 2011இல் 16.4 சதவீதத்திற்கு அதிகரித்தது.

## வர்த்தக மாற்று விகிதம்

**ஏற்றுமதி விலைகள் மற்றும் அளவுகளிலும் பார்க்க உயர்ந்த வீதத்தில் இறக்குமதி விலைகள் மற்றும் அளவுகள் அதிகரித்தமையின் காரணமாக வர்த்தக மாற்று விகிதம் 2011இல் 9.3 சதவீதத்தினால் மோசமடைந்தது.** வேளாண்மைப் பொருட்களுக்கு 2011 முதலரைக் காலப்பகுதியில் நிலவிய உயர்ந்த விலைகள் மற்றும் அதிகரித்த பெறுமதி சேர்ப்புக்கான முயற்சிகள் மற்றும் தர முன்னேற்றங்களுடன் அதிகரித்த கைத்தொழில் வருவாய்களின் விளைவாக 2011இல் ஏற்றுமதி விலைச் சுட்டெண் 10.9 சதவீதத்தினால் அதிகரித்தது.

**வரைபடம் 5.6 பண்டங்களின்படி இறக்குமதிகள்**




**அட்டவணை 5.6 முக்கிய இறக்குமதிகளின் அளவு (அ)**

'000 மெ.தொ.

| விடயம் | 2007 | 2008 | 2009 | 2010 (ஆ) | 2011 (இ) |
|---|---|---|---|---|---|
| **அரிசி** | **88** | **84** | **52** | **126** | **28** |
| 1ஆம் காலாண்டு | 4 | 41 | 3 | 121 | 8 |
| 2ஆம் காலாண்டு | 7 | 28 | 3 | 2 | 2 |
| 3ஆம் காலாண்டு | 3 | 12 | 2 | 2 | 9 |
| 4ஆம் காலாண்டு | 74 | 3 | 44 | 1 | 9 |
| **கோதுமை(ஈ)** | **952** | **919** | **1,026** | **1,052** | **1,242** |
| 1ஆம் காலாண்டு | 204 | 272 | 288 | 352 | 322 |
| 2ஆம் காலாண்டு | 388 | 312 | 229 | 171 | 455 |
| 3ஆம் காலாண்டு | 274 | 153 | 220 | 292 | 254 |
| 4ஆம் காலாண்டு | 87 | 182 | 289 | 236 | 211 |
| **சீனி** | **478** | **571** | **466** | **548** | **606** |
| 1ஆம் காலாண்டு | 111 | 163 | 123 | 145 | 163 |
| 2ஆம் காலாண்டு | 137 | 130 | 110 | 145 | 170 |
| 3ஆம் காலாண்டு | 117 | 164 | 142 | 154 | 124 |
| 4ஆம் காலாண்டு | 113 | 114 | 92 | 104 | 149 |
| **பெற்றோலியம் (மசகெண்ணை)(ஈ)** | **1,968** | **1,853** | **2.066** | **1,819** | **2,070** |
| 1ஆம் காலாண்டு | 272 | 229 | 559 | 332 | 557 |
| 2ஆம் காலாண்டு | 556 | 525 | 417 | 541 | 555 |
| 3ஆம் காலாண்டு | 589 | 544 | 416 | 541 | 410 |
| 4ஆம் காலாண்டு | 550 | 555 | 673 | 405 | 547 |
| **சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம்(ஈ)** | **2,411** | **2,476** | **2.264** | **2,991** | **4,283** |
| 1ஆம் காலாண்டு | 621 | 807 | 433 | 814 | 887 |
| 2ஆம் காலாண்டு | 682 | 603 | 639 | 931 | 1,133 |
| 3ஆம் காலாண்டு | 521 | 504 | 579 | 541 | 1,038 |
| 4ஆம் காலாண்டு | 588 | 563 | 614 | 706 | 1,224 |
| **வளமாக்கி** | **569** | **773** | **462** | **649** | **801** |
| 1ஆம் காலாண்டு | 62 | 125 | 46 | 88 | 131 |
| 2ஆம் காலாண்டு | 171 | 223 | 83 | 238 | 207 |
| 3ஆம் காலாண்டு | 132 | 216 | 110 | 165 | 266 |
| 4ஆம் காலாண்டு | 205 | 208 | 223 | 158 | 197 |

(அ) தேசிய இறக்குமதி தீர்வை வழிகாட்டி - 2010 இனை அடிப்படையாகக் கொண்டு வகைகள் மீள வகைப்படுத்தப்பட்டுள்ளது
(ஆ) திருத்தியமைக்கப்பட்டது
(இ) தற்காலிகமானது
(ஈ) சீராக்கப்பட்டது

மூலங்கள்: இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
லங்கா ஐ.ஓ.சி பி.எல்.சி
வரையறுக்கப்பட்ட பிறிமா இலங்கை
வரையறுக்கப்பட்ட செரண்டிப் (தனியார்) மா ஆலை
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

தெங்கு உற்பத்திகள் மற்றும் இறப்பரின் சராசரி ஏற்றுமதி விலைச்சுட்டெண் முறையே 38.1 சதவீதத்தினாலும் 43.5 சதவீதத்தினாலும் அதிகரித்த வேளையில், 2011இல் சராசரி தேயிலை ஏற்றுமதி விலைச் சுட்டெண் 5.4 சதவீதத்தினால் மாத்திரம் அதிகரித்தது. 2011இல் கைத்தொழில் ஏற்றுமதி விலைச்சுட்டெண்ணும் 10.7 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் கனிப்பொருள் ஏற்றுமதிகளின் விலைச்சுட்டெண் 55.8 சதவீதத்தினாலும் இறப்பரை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளின் ஏற்றுமதிகள் 35.9 சதவீதத்தினாலும் அதிகரித்தமையே முக்கிய காரணமாகும்.

**2011இல் இறக்குமதிகளின் சராசரி விலைகள் 22.4 சதவீதத்தினால் அதிகரித்து அனைத்து முக்கிய இறக்குமதி வகைகளினதும் விலைகள் அதிகரித்தமையினைப் பிரதிபலித்தன.** உணவு மற்றும் உணவல்லா வகையின் இறக்குமதி விலைகள் முறையே 9.1 சதவீதத்தினாலும் 24.8 சதவீதத்தினாலும் அதிகரித்து நுகர்வுப் பொருட்களின் விலைச்சுட்டெண் 17.6 சதவீதத்தினால் அதிகரிக்க வழிவகுத்தது. இடைநிலைப் பொருட்களின் சராசரி விலைகள் 23.7 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு வளமாக்கியில்


ஏற்பட்ட 37.9 சதவீத அதிகரிப்பும் பெற்றோலிய உற்பத்திகளில் ஏற்பட்ட 30.2 அதிகரிப்பும் முக்கிய காரணங்களாக அமைந்தன. 2011இல் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதி விலைகளும் 21.3 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு பொறிகள் மற்றும் கருவிகளின் விலைகளே முக்கியமாக வழிவகுத்தன.

## வர்த்தகத்தின் போக்கு

**2011இல் இலங்கையின் பிரதான வர்த்தகப் பங்காளராக இந்தியா தொடர்ந்தும் விளங்கிய அதேவேளை அதைத் தொடர்ந்து சிங்கப்பூர் மற்றும் ஐ. அமெரிக்கா என்பனவும் விளங்கின.** 2011இல் ஐ.அ.டொலர் 1 பில்லியனுக்கும் அதிகமாக வர்த்தகம் செய்த ஏனைய நாடுகளாக சீனா, ஈரான், ஐக்கிய இராச்சியம் மற்றும் யப்பான் என்பன விளங்கின. 2011இல் ஐ. அமெரிக்காவும் ஐக்கிய இராச்சியமும் பாரிய ஏற்றுமதி சேரிட நாடுகளாக விளங்கிய வேளையில் இந்தியாவும் சீனாவும் அவற்றைத் தொடர்ந்து சிங்கப்பூரும் மிக முக்கியத்துவம் வாய்ந்த இறக்குமதி நாடுகளாக விளங்கின. 2011இல் இந்தியா இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகத்தில் ஏறத்தாழ 16 சதவீதத்திற்கும் மேலாக பங்களித்தது.


**இலங்கையின் ஏற்றுமதிகளில் ஐக்கிய அமெரிக்கா 20.3 சதவீதத்திற்கு வகைகூறியதுடன் அதனைத் தொடர்ந்து ஐ.இராச்சியமும் (10.5 சதவீதம்), ஐரோப்பிய ஒன்றியமும் (23.3 சதவீதம், ஐ.இராச்சியம் நீங்கலாக) விளங்கின.** ஆடைகள் தொடர்ந்தும் இச்சந்தைகளுக்கான தொகை வடிவிலான ஏற்றுமதிகளாக விளங்கின. 2011இல் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளிடையே இத்தாலி (5.8 சதவீதம்), பெல்ஜியம் (5.4 சதவீதம்) மற்றும் சேர்மனி (4.8 சதவீதம்) என்பன தொடர்ந்தும் முன்னணி ஏற்றுமதி சேரிட நாடுகளாக விளங்கின. 2011இல் இலங்கையின் பதனிடப்பட்ட வைரங்களில் பெரும்பாலும் 79 சதவீதமானவை பெல்ஜியத்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. இந்தியா இலங்கையின் மொத்த ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 4.9 சதவீதத்திற்கு வகைகூறியதுடன் 2011இல் 9.5 சதவீதத்தினால் அதிகரித்த இந்தியாவிற்கான ஏற்றுமதிகள் பொறிகள் மற்றும் கருவிகள், விலங்குத்தீன், வாசனைத்திரவியங்கள் மற்றும் ஆடைகள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. 2011இல் ருஷ்யா இலங்கையின் மொத்தத் தேயிலை ஏற்றுமதியில் ஏறத்தாழ 17 சதவீதத்திற்கு வகைகூறியதுடன் தேயிலை ஏற்றுமதி சென்றடையும் முக்கிய நாடுகளில் ஒன்றாக தொடர்ந்தும் இருந்து வருகின்றது. இலங்கையின் ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 3.9 சதவீதத்திற்கு வகைகூறியதன் மூலம் 2011இல் சிங்கப்பூர் இலங்கையின் முக்கியமானதொரு ஏற்றுமதி சேரிட நாடாக வளர்ந்து வருகின்றது.

**வரைபடம் 5.7** வர்த்தக மாற்று விகிதம் மற்றும் வர்த்தக சுட்டெண்





**2011இல் இந்தியா இறக்குமதிகளுக்கான பாரிய மூலமாக தொடர்ந்தும் விளங்கி 2011இன் இறக்குமதிகளில் ஏறத்தாழ 21.9 சதவீதத்திற்கு வகைகூறியது.** இந்தியாவிலிருந்தான மொத்த இறக்குமதிகள் 2011 இல் ஐ. அ.டொலர் 4,431 மில்லியனாக விளங்கின. இந்தியாவிலிருந்தான முக்கியமான இறக்குமதிகள் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள், உந்து ஈருருளிகள் மற்றும் முச்சக்கர வண்டிகள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. சிங்கப்பூரும் சீனாவும் இதனைத் தொடர்ந்து இரண்டாவது மற்றும் மூன்றாவது இறக்குமதி மூல நாடுகளாக விளங்கி மொத்த இறக்குமதிகளில் முறையே 10.5 சதவீதத்திற்கும் 10.3 சதவீதத்திற்கும் வகைகூறின. சிங்கப்பூரிலிருந்தான முக்கிய இறக்குமதிகள் வளமாக்கி மற்றும் பெற்றோலிய உற்பத்திகளை உள்ளடக்கியிருந்த வேளையில் சீனாவிலிருந்தான முக்கிய

**வரைபடம் 5.8** நாடுகளின்படி ஏற்றுமதிகள்



வரைபடம் 5.9 நாடுகளின்படி இறக்குமதிகள்




இறக்குமதிகளாக பொறிகளும் பருத்தியும் காணப்பட்டன. ஈரானும் யப்பானும் இலங்கைக்கான பாரிய இறக்குமதி நாடுகளாக விளங்கி நான்காவது மற்றும் ஐந்தாவது இடங்களைப் பெற்றுள்ளன. ஈரான் மற்றும் யப்பானிலிருந்தான முக்கிய இறக்குமதிகள் முறையே மசகெண்ணெய் மற்றும் உந்து ஊர்திகளை உள்ளடக்கியிருந்தன.

## 5.4 பணிகளிலுள்ள வர்த்தகம், வருமானம், மாற்றல்கள் மற்றும் நடைமுறைக் கணக்கு நிலுவை

### பணிகளிலுள்ள வர்த்தகம்

**சென்மதி நிலுவையின் பணிகள் கணக்கிலுள்ள மிகை 2011இல் 55 சதவீதத்தினால் கணிசமாக அதிகரித்தது.** போக்குவரத்து, பயணம், தொடர்பூட்டல், கணனி மற்றும் தகவல் பணிகள் என்பனவற்றை முக்கியமாக உள்ளடக்கிய பணிகள் கணக்கிற்கு 2010இல் பதிவு செய்யப்பட்ட ஐ.அ.டொலர் 707 மில்லியன் கொண்ட மிகையுடன் ஒப்பிடுகையில் 2011ஆம் ஆண்டுப் பகுதியில் ஐ.அ.டொலர் 1,099 மில்லியன் கொண்ட மிகையினைப் பதிவு செய்தமைக்கு போக்குவரத்து, பயணம் மற்றும் சுற்றுலாத் துணைத் துறைகளிலிருந்து கிடைத்த உயர்ந்த பங்களிப்புக் காரணமாக அமைந்தது.

### போக்குவரத்துப் பணிகள்

**பணிகள் துறையிலுள்ள பாரிய வகையான போக்குவரத்துப் பணிகள், பணிகள் துறையின் வளர்ச்சிக்கு முக்கியமாக வழியமைத்தன.** உலகளாவிய பொருளாதார நடவடிக்கைகளில் மெதுவான போக்குக் காணப்பட்ட போதும், பயணிகள் கட்டணம், சரக்குக் கட்டணங்கள் மற்றும் துறைமுகம், வானூர்தி நிலையம் தொடர்பான நடவடிக்கைகள் என்பனவற்றை உள்ளடக்கிய போக்குவரத்துப் பணிகளின் பேரிலான மொத்த உட்பாய்ச்சல்கள் 2011ஆம் ஆண்டுப் பகுதியில் ஐ.அ.டொலர் 1,392 மில்லியனுக்கு 20 சதவீதம் கொண்ட கணிசமான வளர்ச்சியொன்றைப் பதிவு செய்தது. அதேவேளை, இறக்குமதிகளின் உயர்ந்த வளர்ச்சி மற்றும் பொழுதுபோக்கு, தொழில் வாய்ப்பு, கல்வி, நலக் கவனிப்புப் பணிகள் என்பனவற்றிற்காக வெளிநாடுகளுக்குப் பயணம் செய்யும் இலங்கையர்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பனவற்றுடன் இசைந்து செல்லும் விதத்தில் போக்குவரத்தப் பணிகளின் பேரிலான வெளிப்பாய்ச்சல்களும் 2011இல் ஐ.அ.டொலர் 953 மில்லியனுக்கு 17 சதவீதத்தினால் அதிகரித்தன.

**2011இல் பயணிகள் கட்டணங்களின் பேரிலான மொத்த உட்பாய்ச்சல்கள் ஐ.அ.டொலர் 591 மில்லியனிற்கு 26 சதவீதத்தினால் அதிகரித்தன.** இதற்கு, சிறிலங்கன் எயார் லையின்ஸ் பறக்கும் நாடுகள் விரிவடைந்தமை, பறக்கும் நேரங்கள் மற்றும் பறப்புக்களுக்கிடையிலான இடைவெளி, மேலதிக எரிபொருள் கட்டணங்களின் காரணமாக பயணிகள் கட்டணத்தில் செய்யப்பட்ட அதிகரிப்பு என்பனவற்றின் விளைவாக அதில் பயணம் செய்கின்ற பயணிகளின் எண்ணிக்கையில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாக இருந்தது. அதேவேளை, பயணிகள் கட்டணங்களின் பேரிலான வெளிப்பாய்ச்சலும் 2011இல் ஐ.அ.டொலர் 425 மில்லியன்களுக்கு 13 சதவீதத்தினால் அதிகரித்தது. 2011இல் 5 புதிய வானூர்திகளைக் கொள்வனவு செய்த சிறிலங்கன் எயார்லையின்ஸ் 2012இல் மேலும் இரண்டு வானூர்திகளைக் கொள்வனவு செய்ய எதிர்பார்ப்பதுடன் ஐந்தாண்டுத் திட்டங்களின் கீழ் 2016 அளவில் அதன் தற்போதைய வான்கலத் தொகுதியான 19 இனை 28 இற்கு அதிகரிப்பதற்கும் எதிர்பார்க்கிறது. புதிய வானூர்திகளைக் கொள்வனவு செய்வதற்கான திட்டம், அதிகரித்த சுற்றுலாப் பயணிகளின் வருகை, வானூர்திநிலைய இயலளவின் விரிவாக்கம், பறப்பு நாடுகளை விரிவாக்குதல், தேசிய வானூர்திநிலைய பறப்புக்களின் எண்ணிக்கையை அதிகரித்தல் என்பனவற்றின் காரணமாக பயணிகள் கட்டணங்களின் பேரிலான உட்பாய்ச்சல் இனிவரும் ஆண்டுகளில் மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**அட்டவணை 5.7** தேறிய பணிகள்,வருமானம் மற்றும் நடைமுறை மாற்றல்கள் (அ)

| விடயம் | ஐ.அ.டொலர் மில்லியன் | | ரூபா மில்லியன் | |
|---|---|---|---|---|
| | 2010(ஆ) | 2011(இ) | 2010(ஆ) | 2011(இ) |
| 1. போக்குவரத்து பணிகள் | 345 | 439 | 38,968 | 48,521 |
| 2. பயணம் | 123 | 329 | 13,778 | 36,518 |
| 3. தொடர்பூட்டல் பணிகள் | 27 | 29 | 3,106 | 3,173 |
| 4. கணனி மற்றும் தகவல் பணிகள் | 265 | 355 | 29,962 | 39,251 |
| 5. கட்டடவாக்கப் பணிகள் | 36 | 36 | 4,037 | 4,012 |
| 6. காப்புறுதிப் பணிகள் | 31 | 35 | 3,481 | 3,895 |
| 7. ஏனைய வியாபாரப் பணிகள் | -102 | -108 | -11,591 | -11,854 |
| 8. அரச செலவினம் வே.எ.கு | -17 | -17 | -1,976 | -1,882 |
| **மொத்த தேறிய பணிகள்** | **707** | **1,099** | **79,766** | **121,635** |
| 1. ஊழியர்களின் இழப்பீடு | -11 | -11 | -1,235 | -1,224 |
| 2. நேரடி முதலீடு | -294 | -375 | -33,176 | -41,580 |
| 3. வட்டியும் ஏனைய கட்டணங்களும் | -312 | -261 | -35,366 | -29,242 |
| **மொத்த தேறிய வருமானம்** | **-617** | **-647** | **-69,776** | **-72,046** |
| 1. தனியார் | 3,608 | 4,583 | 407,967 | 506,630 |
| 2. பொது அரசு | 52 | 60 | 5,918 | 6,587 |
| **மொத்த தேசிய நடைமுறை மாற்றல்கள்** | **3,660** | **4,643** | **413,885** | **513,216** |

(அ) இவ் வெளிப்படுத்துகை ப.நா. நிதியத்தின் சென்மதி நிலுவை கையேட்டின் 5ஆம் பதிப்புடன் (1993) சாத்தியமான அளவுக்கு இணங்கிச் செல்லுகின்றது
(ஆ) திருத்தியமைக்கப்பட்டது
(இ) தற்காலிகமானது

மூலம்: இலங்கை மத்திய வங்கி

**2011ஆம் ஆண்டுப் பகுதியில் சரக்கு அனுப்புதல், துறைமுகம் மற்றும் வானூர்திநிலையத்துடன் தொடர்பான பணிகள் என்பனவற்றின் பேரிலான மொத்த உட்பாய்ச்சல்கள் ஐ.அ.டொலர் 800 மில்லியன்களுக்கு 15 சதவீதத்தினால் அதிகரித்தன.** வருகைதரும் கலம்களின் எண்ணிக்கை அதிகரித்தமை, சரக்குகளின் அளவும் கொள்கலன் கையாளலும் அதிகரித்தமை என்பனவற்றின் பெறுபேறாக துறைமுகத்துடன் தொடர்பான நடவடிக்கைகள் அதிகரித்தன. உலகளாவிய வர்த்தகம் மீட்சியடைந்து வருகின்றமை, அம்பாந்தோட்டை துறைமுகமும் மற்றைய புதிய துறைமுகங்களும் பெருமளவில் பயன்படுத்தப்படுகின்றமை, துறைமுகத்துடன் தொடர்பான கணனி வழியில் அதேநேரக் கொடுப்பனவு வசதி, நன்கு பிணையிடப்பட்ட சரக்கு களஞ்சியசாலைகளை நன்கு நிறுவுதல், வசதியைக் கையாளதல் மற்றும் பேலியகொடவில் சரக்கு கிராமத்தில் மிக நவீனத்துவம் வாய்ந்த சரக்கு நவீனச்சந்தை நிருமாணித்தல் என்பனவற்றின் காரணமாக துறைமுகத்துடன் தொடர்பான நடவடிக்கைகள் விரைந்து வளர்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## பயணம் மற்றும் சுற்றுலா

**சுற்றுலாத்துறையில் காணப்பட்ட வளர்ச்சி உத்வேகம் 2011இலும் தொடர்ந்தது.** 2011இல் முன்னெப்பொழுதுமில்லாத மிக உயர்ந்த சுற்றுலா வருகையான 855,975 பதிவு செய்யப்பட்டதுடன் இது 2010 உடன் ஒப்பிடுகையில் 30.8 சதவீதமானதொரு வளர்ச்சியாகக் காணப்பட்டது. வருகைகளில் மிகக் கூடுதலான எண்ணிக்கையினர் இந்தியாவிலிருந்தும் (171,374) அதனைத் தொடர்ந்து ஐக்கிய இராச்சியம் (106,082), சேர்மனி (55,882), பிரான்சு (48,695), மாலைதீவு (44,018), அவுத்திரேலியா (41,728) ஆகிய நாடுகளிலிருந்தும் வருகை தந்தனர். 2011இல் மத்திய கிழக்கிலிருந்தான சுற்றுலா வருகைகளும் 53.2 சதவீதத்தினால் அதிகரித்தன. சுற்றுலா வருகைகளின் நோக்க அடிப்படையில் ஏறத்தாழ 77 சதவீதத்தினால் இலங்கைக்கு வருகை தந்தமையின் நோக்கம் விடுமுறையைக் கழிப்பதாக இருந்தது. 2011இல் ஏறத்தாழ 8 சதவீதத்தினர் வியாபார நோக்கங்களுக்காக வருகை தந்ததுடன் மிகுதியினர் நண்பர்கள் உறவினர்களைப் பார்ப்பதற்காகவும் மாநாடுகள், கூட்டங்கள் மற்றும் சமய, கலாச்சார நோக்கங்களுக்காகவும் வருகை தந்தவர்களாகக் காணப்பட்டனர்.

**சுற்றுலாவிலிருந்தான வருகைகள் தொடர்ந்தும் கணிசமாக அதிகரித்தன.** 2011இல் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 830 மில்லியன் வரையிலான மட்டத்திற்கு குறிப்பிடத்தக்களவிற்கு உயர்வடைந்து, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 44.2 சதவீதமான அதிகரிப்பினைப் பதிவு செய்தது. சுற்றுலாப் பயணி ஒருவரினால் செலவிடப்பட்ட சராசரித் தொகை 2010இல் இரவொன்றிற்கு ஐ.அ.டொலர் 88 இலிருந்து 2011இல் இரவொன்றிற்கு ஐ.அ.டொலர் 97 இற்கு அதிகரித்தமைக்கு அதிகரிக்கப்பட்ட வசதிகள், சுற்றுலா நடவடிக்கைகள் மற்றும் உயர்தர சுற்றுலாப் பயணிகளின் வருகைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பன காரணங்களாக அமைந்தன.

**பொருளாதார அபிவிருத்தி அமைச்சு 2011இல் தேசிய சுற்றுலா உபாயமொன்றினை மேற்கொண்டு 2016 வரை சுற்றுலாத் துறை அபிவிருத்தி தொடர்பான அனைத்து அம்சங்களையும் தெளிவாக விளக்கியது.** அரசாங்கம் சுற்றுலாக் கைத்தொழிலின் மீள்எழுச்சியையும் செழிப்பையும் வலுப்படுத்தும் நோக்கில் ஒருங்கிணைந்த முயற்சிகளை மேற்கொண்டது. அடையப்பட வேண்டிய குறிக்கோள்கள், இலங்கையை மிகச் சிறந்த சுற்றுலா நாடுகளிலொன்றாக உருவாக்குவதற்குப் புறம்பாக, ஆண்டிற்கு 2.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை வரவழைக்கும் விதத்தில் சுற்றுலாவினை மேம்படுத்துதல், 2016இல் ஐ.அ.டொலர் 2.75 பில்லியன் கொண்ட வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களை உழைத்தல் என்பனவற்றினை உள்ளடக்கியிருந்த வேளையில், நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்புக்களை 500,000 இற்கு உயர்த்துவதும் கருத்தில் கொள்ளப்பட்டது. அதேவேளை முதலீடுகளை வசதிப்படுத்துவதற்காக சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையில் நிறுவப்பட்டுள்ள ஒரே கூரையின் கீழான பிரிவு 9,192 அறைகளைக் கட்டுவது தொடர்பாக 2011இல் 210 முதலீட்டு விண்ணப்பங்களை பரிசீலனை செய்தது. சுற்றுலாப் பயணிகளுக்கு ஒன்றுடன் ஒன்று சேர்ந்த கூடியளவு வசதிகளை வழங்குவதற்காக வீடுகளில் தங்கும் நிகழ்ச்சித்திட்டமொன்று மேற்கொள்ளப்பட்டதுடன், 2011இல் 143 அலகுகளுக்கு இது அதிகரிக்கப்பட்டதுடன் 2012இல் இது 500 இற்கு அதிகரிக்கப்படும். இது சுற்றுலா விடுதிகள், சுற்றுலா விடுதிக் கடைகள், கடைத் தொகுதிகள், வீடுகளில் தங்கும் அலகுகள், விருந்தினர் இல்லங்கள், பாரம்பரிய இல்லங்கள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன.

**இலங்கைக்கு விஜயம் செய்யுங்கள் - 2011 நிகழ்ச்சித்திட்டம் புதிய சந்தைகளிலிருந்து சுற்றுலாப் பயணிகளைக் கவருவதற்கு உதவியது.** சீனா, ருஷ்யா, யப்பான் மற்றும் மத்திய கிழக்கு போன்ற தோற்றம் பெற்றுவரும் சந்தைகளிலிருந்தான அதிகரித்த வருகைகள் 2011இல் காணப்பட்டது. 2011இல் கவரும் அனைத்து நடவடிக்கைகளும் 8 தனித்துவமான தொனிப் பொருட்களின் கீழ், அதாவது கடற்கரை, பாரம்பரியம், இயற்கை வனப்பு, கானக விலங்குகள், விழாக்கள், விளையாட்டு மற்றும் துணிகர சாகசங்கள், மகிழ்ச்சி மற்றும் சாராம்சங்கள் என்பனவற்றின் கீழ் இடம்பெற்றன. கூட்டங்களை உள்ளடக்கிய கூட்ட தொழில் துறை, ஊக்குவிப்புப் பயணம், மாநாடு மற்றும் பொருட்காட்சி என்பனவற்றை உள்ளடக்கிய கூட்டங்கள் தொடர்பான சுற்றுலா 2011இல் ஏறத்தாழ 12 சதவீத வளர்ச்சிக்குப் பங்களித்தமையின் மூலம் ஆரோக்கியமான வளர்ச்சியைக் காட்டின. உற்பத்தி சாதன அபிவிருத்திக்காக புதிய அமைவிடங்கள் கல்பிட்டி, பாசிக்குடா, டெருவ, குச்சவெளி ஆகிய இடங்களிலிருந்து வாகரை, யால, அம்பாந்தோட்டை, சிலாபத்துறை மற்றும் யாழ்ப்பாணம் வரை விரிவாக்கப்பட்டன. விரைவாக வளர்ந்து வரும் சுற்றுலாக் கைத்தொழிலின் சவால்களை எதிர்கொள்வதற்காக பயிற்சி மற்றும் அபிவிருத்திக்கான கூடியளவு வாய்ப்புக்களை வழங்க நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன. சந்தையில் காணப்படும் தேர்ச்சி பெற்றவர்களின் பற்றாக்குறையினை ஈடுசெய்வதற்காக விருந்தோம்பல் தொழில் துறையின் பயிற்சிக்காக சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 2011இல் 72 சதவீதத்தினால் அதிகரித்தது. சாதகமான சூழ்நிலைகள் மற்றும் அதிகரித்துச் செல்லும் மக்களின் உண்மை வருமானம் என்பனவற்றின் காரணமாக 2011இல் உள்நாட்டுச் சுற்றுலாத் துறையும் விரிவடைந்தது. சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையும் அதன் விடுமுறைக்கால தங்குமிடங்களையும் விருந்தினர் இல்லங்களையும் புதுப்பிக்கும் வேலைகளை தொடங்கியிருக்கிறது. 2011இல் புதிய சுற்றுலாச் சட்டமொன்று வரையப்பட்டது. இது, ஒரே சட்டத்தின் கீழ் தற்போதுள்ள நான்கு நிறுவனங்களை இரண்டு நிறுவனங்களாக அதாவது இலங்கை சுற்றுலா அதிகாரசபை, இலங்கை சுற்றுலா நிறுவனம் மற்றும் சுற்றுலா விடுதி முகாமைத்துவம் என இரு நிறுவனங்களாக ஒருங்கிணைத்தது.

**சுற்றுலாத் துறை தொடர்பான உட்கட்டமைப்புப் பணிகளும் 2011இல் மேலும் விரிவடையும்.** சங்கிறலா, ஷெறாட்டன், கையிட், சன்சிற்றி போன்ற பல்வேறு பன்னாட்டு சுற்றுலா சங்கிலித் தொடர்களாக நாட்டின் சுற்றுலாக் கைத்தொழிலுக்குள் மிக விரைவில் நுழையவிருக்கின்றன. கல்வ்எயார், சீனாஈஸ்டன், ஏறோஸ்விட் எயார்லையின், ஓமான் எயார், பின்எயார், கெய்னன் எயார்லையின், பிளைடுபாய், நோவா எயார்வேயிஸ், பாகித்தான் இன்ரநஷனல் எயார்லையின், ஸ்பைஸ் யெட் மற்றும் ஏறோ புளோட் ஆகிய புதிய வான் நிறுவனங்கள் இலங்கைக்கு பறப்புக்களை மேற்கொள்வதற்கென கடந்த இரண்டாண்டுகளில் பதிவு செய்யப்பட்டுள்ளன. சிறிலங்கன் எயார்லையின்சும், தோற்றம் பெற்றுவரும் சந்தைப் பொருளாதாரங்கள் மற்றும் ஐரோப்பாவின் பாரம்பரிய சுற்றுலா சேரிடங்களிலிருந்தும் உருவான அதிகரித்த கேள்விகளை ஈடுசெய்யும் விதத்தில் அதன் பாதைகளையும் பறக்கும் தடவைகளையும் விரிவாக்கிக் கொண்டது. சுற்றுலாப் பயணிகளைக் கவரும் பொருட்டும் சுற்றுலாவிற்கு வசதிகளை வழங்கும் பொருட்டும் 2011இல் சிறிலங்கன் எயார் டக்சி 14 பிரபல்யம்மிக்க உள்நாட்டுச் சுற்றுலா சேரிடங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.

## தொடர்பூட்டல் பணிகள்

**தொடர்பூட்டல் பணிகள் 2011இல் தொடர்ந்தும் விரிவடைந்தன.** தொடர்பூட்டல் பணிகளின் பேரில் உட்பாய்ந்த மொத்த வெளிநாட்டுச் செலவாணி ஐ.அ.டொலர் 85 மில்லியனுக்கு 2.4 சதவீதத்தினால் அதிகரித்தன. குரல் அழைப்பிற்கான பன்னாட்டு நேரடி அழைப்பின் மீதான வருவாய்களில் ஏற்பட்ட அதிகரிப்பு இவ்வளர்ச்சிக்குப் பங்களித்தது. ஏற்கனவேயுள்ள பணி வழங்குவோருக்குமிடையேயும் புதிதாக சந்தைக்குள் நுழைவோருக்குமிடையேயான போட்டியின் பின்னணியில்,

**அட்டவணை 5.8** சுற்றுலாச் செயலாற்றும்

| விடயம் | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 (அ) | வளர்ச்சி வீதம் (%) | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | 2010 | 2011 (அ) |
| சுற்றுலா பயணிகளின் வருகை (எண்ணிக்கை) | 494,008 | 438,475 | 447,890 | 654,476 | 855,975 | 46.1 | 30.8 |
| பொழுதுபோக்கு | 331,238 | 321,079 | 358,188 | 516,538 | 663,343 | 44.2 | 28.4 |
| வியாபாரம் | 52,116 | 37,261 | 38,473 | 83,270 | 68,097 | 116.4 | -18.2 |
| ஏனையவை | 110,654 | 80,135 | 51,229 | 54,668 | 124,535 | 6.7 | 127.8 |
| சுற்றுலா விருந்தாளிகளின் இரவுகள் ('000) | 4,940 | 4,166 | 4,076 | 6,548 | 8,559 | 60.7 | 30.7 |
| தங்கும் அறை குடியிருப்பு விகிதம் (%) | 46.2 | 43.9 | 48.4 | 70.2 | 77.1 | 44.8 | 10.0 |
| மொத்தச் சுற்றுலா பெறுகைகள் (ரூ.மில்லியன்) | 42,571 | 37,094 | 40,133 | 65,018 | 91,926 | 62.0 | 41.4 |
| தலைக்குரிய சுற்றுலா பெறுகைகள் (ரூ) | 86,175 | 84,598 | 89,605 | 99,344 | 107,393 | 10.9 | 8.1 |
| மொத்த தொழில்நிலை (எண்ணிக்கை) | 145,238 | 123,134 | 124,970 | 132,055 | 138,685 | 5.7 | 5.0 |
| நேரடி | 60,516 | 51,306 | 52,071 | 55,023 | 57,786 | 5.7 | 5.0 |
| மறைமுகம் | 84,722 | 71,828 | 72,899 | 77,032 | 80,899 | 5.7 | 5.0 |

(அ) தற்காலிகமானது

மூலங்கள்: இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை
இலங்கை மத்திய வங்கி

செல்லிட மற்றும் நிலையாகப் பொருத்தப்பட்ட தொடர்பூட்டல் தொழிற்பாட்டாளர்கள் இருவரினாலும் பன்னாட்டு அழைப்புக் கட்டணங்களில் செய்யப்பட்ட குறைப்பானது பன்னாட்டு நேரடி அழைப்புக்களின் பாவனையினை ஊக்குவித்தது. எனினும், மின்னஞ்சல், பரந்த வலையமைப்பு, செய்மதித் தொடர்பு மற்றும் கம்பி இணைப்பு, தொலைக்காட்சி மற்றும் வெளிச்செல்லும் பன்னாட்டு நேரடி அழைப்பு என்பனவற்றின் அதிகரித்த பயன்பாட்டின் காரணமாக தொலைத் தொடர்பூட்டலின் பேரிலான வெளிப்பாய்ச்சலும் சமமான வீதத்தில் அதிகரித்தது. ஆசிய தொலைத் தொடர்பூட்டல் வலையமைப்பிற்கான பிராந்திய மையமாக இலங்கையினை மேம்படுத்துவதற்காக இலங்கை தொலைத் தொடர்பூட்டல் ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குள் 4ஆவது அலைக்கற்றை தொலைத் தொடர்பூட்டல் தொழில்நுட்பங்களைக் கொள்வனவு செய்வதற்கு திட்டமிட்டுள்ளது. இது இலங்கை அதன் முழுமையான உள்ளார்ந்த வளத்தைப் பயன்படுத்திக் கொள்வதற்கு இலங்கையை இயலச் செய்து அதற்கான வசதியை வழங்குமென்பதுடன் தொடர்பூட்டல் பணிகளில் மேலும் விரிவாக்கம் செய்வதற்கான வாய்ப்புக்களையும் வழங்கும். தொடர்ந்தும் இடம்பெற்றுவரும் தொடர்ச்சியான தொழில்நுட்பப் புத்தாக்கங்களின் காரணமாக இத்துறை 2012இலும் அதற்கு அப்பாலும் மேம்பாடடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### கணனி மற்றும் தகவல் பணிகள்

**2011இல் கணனி மற்றும் தகவல் தொழில்நுட்பப் பணிகள் துணைத் துறை குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் காட்டியது.** கணனி மற்றும் தகவல் துணைத் துறையின் பேரிலான மொத்த வெளிப்பாய்ச்சல் 2011ஆம் ஆண்டுப் பகுதியில் ஐ.அ.டொலர் 355 மில்லியனுக்கு 34 சதவீதத்தினால் அதிகரித்தது. வெளிமூலங்களுக்கு வியாபாரப் பணிகளை வழங்குகின்ற கைத்தொழிலின் உள்ளார்ந்த வளத்தை அங்கீகரிக்கின்ற விதத்தில், துறையின் அபிவிருத்தியைத் துரிதப்படுத்துவதற்காக இறை மற்றும் ஏனைய ஊக்குவிப்புக்களையும் சலுகைகளையும் வழங்குவதன் மூலம் அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளையும் மேற்கொண்டது. வெளிமூலங்களுக்குப் பணிகளை வழங்குகின்ற முன்னணி நாடுகளை அடையாளம் காணுகின்ற விதத்தில் ஏ.ரி கியார்னி குளோபல் சேவிசஸ் 2011 இல் அதன் அமைவிடச் சுட்டெண்ணில் இலங்கையை உலகலாவிய முன்னனி வெளிமூலங்களுக்கு வியாபாரப் பணிகளை வழங்கும் நாடுகளில் முதல் இருபத்தைந்து நாடுகளுக்கு மத்தியில் நிலைப்படுத்தியுள்ளதுடன் குளோபல் சேர்விஸ் சஞ்சிகையினால் கொழும்பு தோற்றம் பெற்றுவரும் வெளிமூலங்களுக்குப் பணிகளை வழங்கும் முதல் 10 நகரங்களுக்கிடையே ஒன்றாக நிலைப்படுத்தப்பட்டுள்ளது. 2010 இன் பிற்பகுதியில் நிறுவப்பட்ட லங்கா பிபிஒ (BPO) அகடமியானது வெளிமூலங்களுக்கு பணிகளை வழங்குகின்றவர்களுக்கு பயிற்சியை வழங்குபவர்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் இது அதிக மாணவர்களையும் வெளிமூலங்களுக்கு பணிகளை வழங்கும் தொழில் வல்லுனர்களையும் பயிற்றுவிக்க திட்டமிட்டுள்ளதுடன் இலங்கையின் வெளிமூலங்களுக்கு பணிகளை வழங்கும் கைத்தொழிலின் விரிவாக்கத்திற்கு உதவும். மேலும் ஏனைய வியாபார பணிகளின் கீழ் வகைப்படுத்தப்பட்ட அறிவு சார்ந்த செயற்பாடுகளை வெளிமூலங்களுக்கு வழங்கும் வசதியினாலான உட்பாய்ச்சலும் 2011 இல் அதிகரித்தது. இந்தியா போன்ற ஏனைய பாரிய வெளிமூலங்களுக்கு பணிகளை வழங்குவோர்களுடன் ஒப்பிடுகளையில் வரையறுக்கப்பட்ட தொழிற்படையைக் கொண்டிருந்த போதிலும் இலங்கையானது தகவல் தொழிற்நுட்பம், நிதி மற்றும் கணக்கீடு போன்ற துறைகளில் உயர் பயிற்றப்பட்ட தொழில் வல்லுனர்களைக் கொண்டுள்ளது. தொழில் வல்லுனர்களுடன் இணைந்த நேர வேறுபாட்டுடனான அமைவிடமானது அறிவுசார் செயற்பாடுகளினை வெளிமூலங்களுக்கு வழங்குவதில் இலங்கையை விரும்புகின்ற மற்றும் கவர்ச்சிகரமான இடமாக மாற்றும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### வருமான உட்பாய்ச்சல்களும் வெளிப்பாய்ச்சல்களும்

**வருமானக் கணக்கு 2010இல் பதிவு செய்யப்பட்ட ஐ.அ.டொலர் 617 மில்லியன் கொண்ட பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் 2011ஆம் ஆண்டுப் பகுதியில் ஐ.அ.டொலர் 647 மில்லியன் கொண்ட பற்றாக்குறையைப் பதிவு செய்தது.** வருமானக் கணக்கிற்கான மொத்த உட்பாய்ச்சல் ஐ.அ.டொலர் 467 மில்லியனுக்கு ஏறத்தாழ 45 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தமைக்கு; அலுவல்சார் பன்னாட்டு ஒதுக்கின் முதலீடுகளிலிருந்தான வட்டி வருமானமும் வெளிநாட்டு நாணயம் மற்றும் பிணையங்களின் வர்த்தகப்படுத்தல் மீது உழைக்கப்பட்ட இலாபமும் முக்கிய காரணங்களாக இருந்தன. மேலும், 2011இல் யூரோ மற்றும் ஸ்டேர்லிங் பவுண் போன்ற மற்றைய முக்கிய நாணயங்களுக்கெதிராக ஐ.அ.டொலர் உயர்ந்தளவில் தேய்வடைந்தமை, ஐ.அ.டொலர் நியதிகளில் சந்தைப்படியான விலைகளின் அடிப்படையில் மதிப்பிடப்படும் பொழுது இந்நாணயங்களில் குறித்துரைக்கப்பட்ட அலுவல்சார் ஒதுக்குகளின் பெறுமதியில் குறிப்பிடத்தக்களவு இலாபங்களை ஏற்படுத்தியிருக்கிறது. அதேவேளை, வருமானக் கணக்கின் வெளிப்பாய்ச்சலும் அரசாங்கத்தினால் பெறப்பட்ட வெளிநாட்டுக் கடன்களின் மீதான வட்டிக் கொடுப்பனவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பின் விளைவாக ஐ.அ.டொலர் 1,114 மில்லியனுக்கு ஏறத்தாழ 18 சதவீதத்தினால் அதிகரித்தன. ஐ.அ.டொலர் 709 மில்லியன் கொண்ட வெளிநாட்டுக் கடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவில், நீண்ட மற்றும் நடுத்தரகால கடன்கள் மீது செலுத்தப்பட்ட வட்டி ஏறத்தாழ 57 சதவீதத்திற்கு வகைகூறியது. அதேவேளை, வெளிநாட்டு நேரடி முதலீடுகளின்

பேரிலான வெளிப்பாய்ச்சல் ஐ.அ.டொலர் 385 மில்லியனுக்கு 27 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு இலங்கையில் நிறுவப்பட்டுள்ள வெளிநாட்டு தொழில் முயற்சிகளினால் இலாபங்களும் பங்கிலாபங்களும் தாய் நாட்டிற்கு அனுப்பப்பட்டமையே முக்கிய காரணமாகும். எனினும், 2011இல் ஏற்கனவேயுள்ள தொழிற்பாடுகளை விரிவாக்கிக் கொள்வதற்கு வசதிப்படுத்தும் விதத்தில் அந்நிறுவனங்கள் இலாப மற்றும் பங்கிலாபங்களின் குறிப்பிடத்தக்களவு விகிதத்தினை மீள முதலீடு செய்துள்ளன.

## நடைமுறை மாற்றல்கள்

**2011இல் தேறிய நடைமுறை மாற்றல்கள் 2010இன் ஐ.அ.டொலர் 3,660 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 4,643 மில்லியனுக்கு குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தது.** நடைமுறை மாற்றல்களில் பெரும் பங்கினைக் கொண்டுள்ள தொழிலாளர் பணவனுப்பல்கள் 2011இல் மிக முக்கியமான வெளிநாட்டுச் செலாவணி உழைப்பாளராகத் தொடர்ந்தும் விளங்கியதுடன் 2010இன் ஐ.அ.டொலர் 4,116 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 5,145 மில்லியனக்கு 25 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது. மத்திய கிழக்கு நாடுகளில் நிலவும் நிச்சயமற்ற தன்மைகளின் காரணமாக புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் தமது சேமிப்புக்களை அனுப்பி வைத்தமை, தொழிலாளர்களின் கூலிகளில் ஏற்பட்ட சராசரி அதிகரிப்பு, கொரியா, மலேசியா மற்றும் சிங்கப்பூர் போன்ற உயர்ந்தளவு கூலிகளை வழங்கும் நாடுகளுக்கான அதிகரித்த புலம்பெயர்வு மற்றும் தொழில்சார் நிபுணத்துவ வகை மீதான புலம்பெயர்வு அதிகரித்தமை என்பன 2011இல் தொழிலாளர் பணவனுப்பல்களைக் கவர்வதற்குப் பங்களித்த முக்கிய காரணிகளாக விளங்கின. அத்துடன் தொழிலாளர் புலம்பெயர்தல் தொடர்பாக அநேக நாடுகளுடன் தொடர்பான அதிகாரிகளினால் செய்து கொள்ளப்பட்ட கூட்டு உடன்படிக்கைககள் மற்றும் இலங்கைக்கு நிதியங்களை அனுப்பும் விதத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள வங்கிக் கிளைகள் மற்றும் பணி நிலையங்களின் அதிகரித்த எண்ணிக்கை உட்பட முறைசார்ந்த வழிப்படுத்துகைகளின் கிடைப்பனவு விரிவடைந்தமை என்பனவும் இவ்வாண்டில் பணவனுப்பல்கள் அதிகரிக்க உதவின. அதேவேளை, வெளிநாட்டு வேலை வாய்ப்பிற்காக புலம்பெயரும் தொழிலாளர்களின் எண்ணிக்கை 2011இல் 262,960இற்கு 6.4 சதவீதத்தினால் அதிகரித்தது. புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் பணவனுப்பல்களைக் கவரும் பொருட்டு 2012 வரவு செலவுத்திட்டத்தில் அரசாங்கம், புதிய வியாபாரங்களை தொடங்குவதற்காக புலம்பெயர்ந்தவர்களின் மூலதனப் பொருட்கள் மீதான முதலீடுகளுக்கு ஐந்தாண்டு வரி விலக்கல் வழங்கப்பட்டது.

## நடைமுறைக் கணக்கு மீதி


**நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை 2010இன் ஐ.அ.டொலர் 1,075 மில்லியன்களிலிருந்து 2011இல் ஐ.அ.டொலர் 4,615 மில்லியனுக்கு கணிசமாக அதிகரித்தமைக்கு குறிப்பிடத்தக்களவில் உயர்ந்த வர்த்தகப் பற்றாக்குறையே காரணமாகும்.** மொ.உ.உற்பத்தி நியதிகளில் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை 2010இல் 2.2 சதவீதத்திலிருந்து 2011இல் மொ.உ.உற்பத்தியில் 7.8 சதவீதத்திற்கு அதிகரித்தது. இப் பற்றாக்குறைக்கு, அதிகரித்த இறக்குமதிச் செலவினம் குறிப்பாக, எண்ணெய் மற்றும் முதலீட்டுப் பொருட்களின் அதிகரிப்புக் காரணமாக விரிவடைந்த வர்த்தகப் பற்றாக்குறையே முக்கிய காரணமாகும். எனினும், வர்த்தகக் கணக்கில் காணப்பட்ட ஏறத்தாழ மூன்றிலிரண்டு பங்கு பற்றாக்குறை தொழிலாளர் பணவனுப்பல்களின் உயர்ந்த உட்பாய்ச்சல் மற்றும் பணிகள் கணக்கிற்குக் காணப்பட்ட மிகை என்பனவற்றினால் எதிரீடு செய்யப்பட்டது. உயர்ந்த நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை நாட்டின் உயர்ந்த சேமிப்பு - முதலீட்டு இடைவெளியின் பிரதிபலிப்பாக இருப்பதனால் கூட்டுக் கேள்வியில் ஏற்படும் விரிவாக்கத்தினை வலுவான தேறிய மூலதன உட்பாய்ச்சலுடன் இசைந்து செல்லும் மட்டமொன்றிற்கு இறை மற்றும் நாணயக் கொள்கை இரண்டினதும் பொருத்தமான கொள்கைகளினூடாகக் கட்டுப்படுத்துவது மிக முக்கியமானதாகும்.

## 5.5 மூலதன, நிதியியல் பாய்ச்சல்களும் சென்மதி நிலுவையும்

### வெளிநாட்டு நேரடி முதலீடு

**சாதகமான முதலீட்டாளர் நம்பிக்கையினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில், 2011இல் இலங்கை, வெளிநாட்டு நேரடி முதலீடு தொடர்பாக முன்னெப்பொழுதுமில்லாத உயர்ந்த மொத்த உட்பாய்ச்சலைப் பதிவு செய்தது.** கடன்கள் உட்பட, வெளிநாட்டு நேரடி முதலீடு 2010இன் ஐ.அ.டொலர் 516 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2011இல் ஐ.அ.டொலர் 1,066 மில்லியனுக்கு அதிகரித்தது. இவ்வாண்டுப் பகுதியில், முதலீட்டுச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட கம்பனிகள் 2010இல் பெற்றுக்

வரைபடம் 5.10 மூலதனம் மற்றும் நிதியியல் கணக்குகளுக்கான உட்பாய்ச்சல்கள்



கொண்ட ஐ.அ.டொலர் 39 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 110 மில்லியன்களைக் கொண்ட கடன்களைப் பெற்றுக் கொண்டன. “ஒரே கூரையின் கீழான அலகு” என்ற கோட்பாட்டினை உருவாக்குவதன் மூலம் ஒப்புதலளிக்கும் செயன்முறைகளை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதுடன், முதன்மை உட்கட்டமைப்பு வசதிகளின் விரைந்த அபிவிருத்தி, ஆண்டின் முதல் மூன்று காலாண்டுகளிலும் காலாண்டொன்றிற்கு சராசரியாகப் பெறப்பட்ட ஏறத்தாழ ஐ.அ.டொலர் 225 மில்லியன்களுடன் ஒப்பிடுகையில், இவ்வாண்டின் இறுதிக் காலாண்டில் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 390 மில்லியன் கொண்ட உயர்ந்த வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் உட்பாய்ச்சல் ஏற்பட வழிவகுத்தது. சாதகமான முதலீட்டாளர் மனோபாவம் உலகளாவிய போட்டித்தன்மைக்கான நாட்டின் தரம் மேலும் முன்னேற்றமடைந்ததன் மூலமும் உலகளாவிய போட்டித்தன்மை அறிக்கை 2011-2012 மற்றும் மிக வெளிப்படையான உலகில் வியாபாரம் செய்தல் - 2012 மற்றும் முறையே உலகப் பொருளாதார அரங்கம் என்பனவற்றின்படி வியாபாரத்தினை மேற்கொள்வது இலகுவாக்கப்பட்டமை என்பனவற்றின் மூலமும் மேலும் வலுப் பெற்றது.

**வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் உட்பாய்ச்சல்களின் துறைவாரியான உள்ளமைப்பில் குறிப்பிடத்தக்க மாற்றமொன்று அவதானிக்கப்பட்டது.** 2011இல் சுற்றுலா மற்றும் உணவகத் துறை வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் உட்பாய்ச்சலில் பெரும் பங்கினை (20 சதவீதப் பங்கு) கவர்ந்து கொண்டதுடன் அதனைத் தொடர்ந்து முன்னைய ஆண்டுகளில் வழமையாக முனைப்புப் பெற்ற துறையாக விளங்கிய தொலைத் தொடர்பூட்டல் துறை (18 சதவீதப் பங்கு) காணப்பட்டது. “சுற்றுலா விடுதிகள் மற்றும் உணவகங்கள்” துறைகளுக்கான உட்பாய்ச்சல்கள், போருக்குப் பின்னர் ஏற்படும் செழிப்பினை பணமாக மாற்றிக் கொள்ளும் நோக்குடன் பல முன்னணிப் பன்னாட்டு சுற்றுலா விடுதிக் கம்பனிகளினால் கொண்டு வரப்பட்டன. முக்கியமானதொரு முதலீட்டுப் பங்காக கொழும்பிலும் அம்பாந்தோட்டையிலும் இரண்டு ஆடம்பர சுற்றுலா விடுதிகளை நிருமாணிப்பதற்காக முன்னணி சுற்றுலா விடுதித் தொடர்களிலிருந்து பெறப்பட்ட ஏறத்தாழ ஐ.அ.டொலர் 130 மில்லியன் கொண்ட தொகை காணப்பட்டது. 2011இல் வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் உட்பாய்ச்சல் ஐ.அ.டொலர் 33 மில்லியன் கொண்ட பங்கு மூலதனத்தையும் ஐஅ.டொலர் 513 மில்லியன் கொண்ட ஆர்வலர்களின் கடன்கள் மற்றும் முற்பணங்களையும் ஐ.அ.டொலர் 192 மில்லியன் கொண்ட கம்பனிகளுக்குள்ளேயான கடன்பாடுகளையும் ஐ.அ.டொலர் 110 மில்லியன் கொண்ட வெளிநாட்டுக் கடன்களையும் ஏற்கனவேயுள்ள கம்பனிகளின் பிடித்து வைத்திருக்கப்பட்ட வருவாய்களின் மீள் முதலீடான ஐ.அ.டொலர் 218 மில்லியன்களையும் உள்ளடக்கியிருந்தது.

**வெளிநாட்டு நேரடி முதலீட்டின் வெளிப்பாய்ச்சல் 2010இன் ஐ.அ.டொலர் 43 மில்லியனிலிருந்து 2011இல் ஐ.அ.டொலர் 60 மில்லியனுக்கு அதிகரித்தமைக்கு வெளிநாடுகளிலுள்ள வெளிநாட்டு முதலீடுகள் மீதான செலாவணிக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டமையே ஓருளவு காரணமாகும்.** இதன்படி, 2011இல் தேறிய வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்கள் 2010இல் பதிவு செய்யப்பட்ட ஐ.அ.டொலர் 435 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 896 மில்லியனுக்கு அதிகரித்தது. ஒப்பந்தம் செய்யப்பட்ட செயற்றிட்டங்களின் முதலீட்டுக் கடப்பாடு ஒப்பந்தம்

**அட்டவணை 5.9 2011இல் வெளிநாட்டுக் கடன் பெறுகைகளின் மூலம் நிதியிடப்பட்ட பிரதான செயற்றிட்டங்கள்**

| | கடன்வழங்குநரும் செயற்றிட்டமும் | வழங்கப்பட்ட தொகை ஐ.அ.டொலர்கள் மில்லியன் |
|---|---|---|
| **ஆசிய அபிவிருத்தி வங்கி** | | **262.5** |
| இதில்; | கொழும்பு துறைமுக விரிவாக்கச் செயற்றிட்டம் | 75.0 |
| | தேசிய அதிவேகப்பாதைத் துறைச் செயற்றிட்டம் | 41.3 |
| | கிழக்கு மற்றும் வடமத்திய மாகாண வீதி செயற்றிட்டம் | 20.2 |
| | வடக்கு வீதி இணைப்பு செயற்றிட்டம் | 19.9 |
| **அவுத்திரேலிய மற்றும் நியூசிலாந்து முதலீட்டு வங்கி** | | **35.7** |
| இதில்; | அம்பாறை மாவட்டத்தின் வழங்கப்படாத பகுதிகளுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட நீர்வழங்கல் திட்டம் (III) | 35.7 |
| **கலியோன் கிரடிட் அக்றிகோல்** | | **18.5** |
| இதில்; | விமலசுரேந்திர மற்றும் புதிய லக்சபான மின் உற்பத்தி நிலைய செயற்றிட்டம் | 18.5 |
| **சீனா அபிவிருத்தி வங்கி கூட்டுத்தாபனம்** | | **75.4** |
| இதில்; | முன்னுரிமை வீதிகளின் மீளமைப்பு மற்றும் மேம்படுத்தல் செயற்றிட்டம் | 75.4 |
| **ஈரானிய ஏற்றுமதி அபிவிருத்தி வங்கி** | | **17.1** |
| இதில்; | கிராமிய மின்சாரமயப்படுத்தல் செயற்றிட்ட மேம்பாடு (VIII) | 17.1 |
| **சீனா ஏற்றுமதி இறக்குமதி வங்கி** | | **333.5** |
| இதில்; | புத்தளம் நிலக்கரி செயற்றிட்டம் - பாகம் (II) | 63.6 |
| | மாத்தளை அம்பாத்தொட்டை பன்நாட்டு வானூர்தி செயற்றிட்டம் | 51.7 |
| | இரண்டு எம்எ 60 வானூர்திகள் வழங்கும் செயற்றிட்டம் | 39.7 |
| | வடக்கு வீதி புனரமைப்புச் செயற்றிட்டம் | 68.1 |
| | கொழும்பு-கட்டுநாயக்க விரைவுப் பாதை பிரிவு எ1, எ2, எ4 | 41.7 |
| | அம்பாந்தோட்டையிலுள்ள நீர்க்கலங்களுக்கான எண்ணெய் வழங்கும் வசதி, தடாகப் பண்ணைச் செயற்றிட்டம் | 28.2 |
| **இந்திய அரசாங்கம்** | | **201.2** |
| இதில்; | ஓமந்தை - பளை, மடு - தலைமன்னார் மற்றும் மதவாச்சி புகையிரதப் பாதை | 121.5 |
| | கொழும்பு மாத்தறை புகையிரதப் பாதை தரமுயர்த்தல் (I,II) | 51.2 |
| | டொலர் கொடுகடன் மட்ட ஒப்பந்தம், இந்தியா | 28.6 |
| **யப்பானிய அரசாங்கம்** | | **346.4** |
| இதில்; | மேல் கொத்மலை நீர் மின்வலு செயற்றிட்டம் | 77.9 |
| | தெற்கு பெருந்தெரு கட்டுமான செயற்றிட்டம் (II) | 64.5 |
| | கொழும்பு பெரும்பாகத்திற்கான போக்குவரத்து அபிவிருத்தி செயற்றிட்டம் | 43.5 |
| | அவசர தேசிய அனர்த்த புனர்வாழ்வு செயற்றிட்டம் | 42.4 |
| | நீர்த்துறை அபிவிருத்தி செயற்றிட்டம் | 29.0 |
| **கொரிய குடியரசின் அரசாங்கம்** | | **26.6** |
| இதில்; | பாதினிய - அநுராதபுரம் வீதி மேம்பாட்டு செயற்றிட்டம் | 23.4 |
| **பன்நாட்டு அபிவிருத்திச் சம்மேளனம்** | | **195.7** |
| இதில்; | சிறிய மற்றும் நடுத்தர முயற்றிகள் அபிவிருத்தி வசதிகள் செயற்றிட்டம் | 28.8 |
| | வடக்கு கிழக்கு உள்ளூர் சேவைகள் மேம்பாட்டு செயற்றிட்டம் | 19.0 |
| | இரண்டாவது சமூக அபிவிருத்தி மற்றும் ஜீவனோபய மேம்பாட்டு செயற்றிட்டம் | 18.2 |
| | வடக்கு - கிழக்கு வீடமைப்பு மீள்கட்டுமானத்திற்கான மேலதிக நிதியிட்டல் செயற்றிட்டம் | 17.2 |
| | இரண்டாவது வடக்கு - கிழக்கு நீர்வழங்கப்பட்ட வேளாண்மை செயற்றிட்டம் | 16.7 |
| | கிராமிய பொருளாதார அபிவிருத்திக்கான மீள்பயன்பாட்டு வலு | 15.9 |
| | வடக்கு அவசர மீள் நிலைப்படுத்தல் செயற்றிட்டம் | 15.5 |
| **டென்மார்க் நோர்டியா வங்கி ஏ/எஸ்** | | **38.6** |
| இதில்; | களனி வடக்கு நீர்தாங்கி நீர்ப் பராமரிப்பு பொறித்தொகுதி | 22.8 |

மூலம்: வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களம்

செய்து கொள்ளப்பட்ட அநேக செயற்றிட்டங்களுடன் சேர்ந்து 2010 உடன் ஒப்பிடுகையில் 2011இல் அதிகரித்து இனிவரும் ஆண்டுகளில் புதிய வெளிநாட்டு நேரடி முதலீடுகளைப் பெறுவதற்கான வாய்ப்புக்களை எடுத்துக்காட்டின.

## அரசிற்கான நடுத்தர மற்றும் நீண்டகால மூலதனம்

**தற்பொழுது நடைபெற்று வரும் முக்கியமான உட்கட்டமைப்பு செயற்றிட்டங்கள் விரைவாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதனைப் பிரதிபலிக்கும் விதத்தில் அரசிற்கான கடன் உட்பாய்ச்சல்கள் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தன.** ஐ.அ.டொலர் 1 பில்லியன் கொண்ட நாட்டிற்கான முறிகளின் பெறுகைகள் நீங்கலாக, அரசிற்கான நடுத்தர நீண்டகாலக் கடன்களின் உட்பாய்ச்சல் 2010இன் ஐ.அ.டொலர் 1,460 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2011இல் ஐ.அ.டொலர் 2,029 மில்லியனாக விளங்கியது. 2011 யூலையில் ஐ.அ.டொலர் 1 பில்லியன் பெறுமதியிலான இலங்கையின் நாட்டிற்கான நான்காவது பன்னாட்டு முறிகள் வெற்றிகரமாக வழங்கப்பட்டதுடன் இது 7.5 மடங்கு மேலதிகமாக உதவப்பட்டது. அதேவேளை வெளிநாட்டு நிதிகளின் பயன்பாட்டு[1] வீதம் 2010இன் 24.8 சதவீதத்திலிருந்து 2011இல் 38.2 சதவீதத்திற்கு அதிகரித்தது. வெளிநாட்டுக் கடன் உட்பாய்ச்சல்களில் பெரும்பாலானவை கொழும்புத் துறைமுக விரிவாக்கச் செயற்றிட்டம், முன்னுரிமை விலைச் செயற்றிட்டத்தின் புத்தாக்கம் மற்றும் மேம்பாடு, மேல் கொத்மலை நீர் மின்வலுச் செயற்றிட்டம், கொழும்பு பெரும்பாக போக்குவரத்து அபிவிருத்திச் செயற்றிட்டம், மத்தள வானூர்தி செயற்றிட்டம் மற்றும் தென்பகுதி நெடுஞ்சாலை கட்டுமானச் செயற்றிட்டம் போன்ற ஏற்கனவே தொடங்கிய உட்கட்டமைப்பு செயற்றிட்டங்களினைத் தொடர்வதற்காக நெறிப்படுத்தப்பட்டது.

## அரசுக்கான குறுங்கால மூலதனம்

**திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகளின் முதலீடுகளின் பேரிலான குறுங்கால தேறிய வெளிநாட்டு உட்பாய்ச்சல்கள் 2010இன் ஐ.அ.டொலர் 531 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2011இல் ஐ.அ.டொலர் 233 மில்லியன்களாகக் காணப்பட்டது.** முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்களின் நிச்சயமற்ற தன்மை அதிகரித்து வருவதனையும் தோற்றம் பெற்று வரும் பொருளாதாரங்கள் பன்முகப்படுத்தப்படுவதனையும் பிரதிபலிக்கின்ற விதத்தில் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கை அரசாங்கத்தின் பிணையங்களில் முதலீடு செய்வதற்கான ஆர்வத்தினைக் காட்டினர். இதன்படி, 2011 நவெம்பர், இறுதியில், அரசாங்கப் பிணையங்களின் மொத்த வெளிநின்ற பெறுமதியின் சதவீதமாக அரசாங்கப் பிணையங்களின் வெளிநாட்டு உடமைகளின் வெளிநின்ற பெறுமதி ஆகக்கூடிய 10 சதவீத மட்டத்தினை அடைந்தது. அதனைத் தொடர்ந்து அதிகரித்த கேள்வியினையும் அதேபோன்று மூலவளங்களின் கிடைப்பனவினை அதிகரிப்பதன் மூலம் பொருளாதாரத்தின் வளர்ச்சி உத்வேகத்திற்கு ஆதரவளிப்பதனையும் கருத்திற் கொண்டு மத்திய வங்கி 2011 திசெம்பர் 6ஆம் நாளன்று திறைசேரி உண்டியல் மற்றும் முறிகளினால் செய்யப்படும் வெளிநாட்டு முதலீடுகளின் வரையறையினை 10 சதவீதத்திலிருந்து 12.5 சதவீதத்திற்கு உயர்த்தியது.

## தனியார்துறைக்கான நீண்டகால மூலதனம்

**தனியார் துறைக்குக் கிடைத்த நீண்டகாலக் கடன் உட்பாய்ச்சல் 2010இல் பதிவு செய்யப்பட்ட ஐ.அ.டொலர் 580 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2011இல் ஐ.அ.டொலர் 364 மில்லியன் காணப்பட்டது.** 2010 இலான உயர் உட்பாய்ச்சல்கள் புத்தளம் நிலக்கரி வலுச் செயற்றிட்டத்திற்காக லங்கா கோல் கம்பனி லிமிடெட்டிற்கு சீன எக்சிம் வங்கியிலிருந்து ஒரு தரத்தில் கிடைக்கப் பெற்ற ஐ.அ.டொலர் 451 மில்லியன் கொண்ட பெறுகையால் ஏற்பட்டது. 2011இன் உட்பாய்ச்சல்கள புத்தளம் நிலக்கரி வலுச் செயற்றிட்டத்திற்காக லங்கா கோல் கம்பனி லிமிடெட்டிற்கு சீன எக்சிம் வங்கியிலிருந்து கிடைத்த ஐ.அ.டொலர் 65 மில்லியன் பெறுகை, மத்தள பன்னாட்டு வானூர்தி செயற்றிட்டத்திற்காக எயார்போட் அன்ட் எவியேசன் சேர்விஸ் (இலங்கை) இற்கு கிடைத்த ஐ.அ.டொலர் 54 மில்லியன் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. 2011இல் உயர்ந்த வெளிநாட்டு நேரடி முதலீட்டின் உட்பாய்ச்சலுடன் இசைந்து செல்லும் விதத்தில் முதலீட்டுச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட கம்பனிகளுக்கான வெளிநாட்டுக் கடன் உட்பாய்ச்சல்கள் 2010இன் ஐ.அ.டொலர் 39 மில்லியன் ஒப்பிடுகையில் 2011இல் ஐ.அ.டொலர் 110 மில்லியனுக்கு அதிகரித்தது. 2011இல் தனியார் துறையின் வெளிநாட்டுக் கடன்பாடுகள் முக்கியமாக சுற்றுலா விடுதிகள், தொலைத் தொடர்பூட்டல் மற்றும் வலு மற்றும் சக்தித் துறைகளின் முதலீடுகளில் காணப்பட்டன. அதேவேளை, செலாவணிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளில் மத்திய வங்கியினால் படிப்படியாக மேற்கொள்ளப்பட்ட தளர்த்தல்கள் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களையும் வியாபார நடவடிக்கைகளையும் வசதிப்படுத்திக் கம்பனிகள் வெளிநாட்டுக் கடன் வழங்கல் மூலங்களிலிருந்து கடன்படுவதனையும் இயலச் செய்தது. இது 23 தனியார் கம்பனிகள் 2011இல் ஐ.அ.டொலர் 205 மில்லியன் தொகை கொண்ட வெளிநாட்டுக் கடன்களைத் திரட்டுவதற்கு ஒப்புதலைப் பெற்றன.

## தனியார் துறை மற்றும் அரச கூட்டுத்தாபனங்களுக்கான குறுகியகால மூலதனம்

**2011 காலப்பகுதியில் தனியார் குறுங்கால மூலதன உட்பாய்ச்சல்கள் கணிசமாக அதிகரித்தன.** தனியார் குறுங்கால மூலதன உட்பாய்ச்சல்கள் சொத்துப்பட்டியல் முதலீடுகள், வர்த்தகக் கொடுகடன் உள்ளிட்ட குறுங்காலக் கொடுகடன்கள் மற்றும் வர்த்தக வங்கிகளின் சொத்துக்கள் மற்றும் வைப்புக்களில்

காணப்படும் மாற்றங்கள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. தனியார் குறுங்கால மூலதனங்களின் தேறிய உட்பாய்ச்சல் 2010இல் ஐ.அ.டொலர் 198 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலுடன் ஒப்பிடுகையில் 2011இல் ஐ.அ.டொலர் 572 மில்லியன்களுக்கு மாற்றமடைந்தது. இது முக்கியமாக 2011இல் வர்த்தக வங்கிகளின் தேறிய வெளிநாட்டுப் பொறுப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பினாலும் 2011இல் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் பெறப்பட்ட பாரிய எண்ணெய் இறக்குமதிக் கொடுகடனினாலும் ஏற்பட்டதொன்றாகும். 2011இல் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எண்ணெய் இறக்குமதிக்காக ஈரானிலிருந்து பெற்ற தொடர் கொடுகடனாக ஐ.அ.டொலர் 1,455 மில்லியன் உட்பட, ஐ.அ.டொலர் 2,674 மில்லியன்களை வர்த்தகக் கொடுகடனாகப் பெற்றது. ஒப்பிடுகையில் 2010இல் ஐ.அ.டொலர் 1490 மில்லியன் பெறப்பட்டது. மேலும் 2011இல் ஐ.அ.டொலர் 1,369 மில்லியன் கொண்ட ஈரானியக் கொடுகடன் தீர்ப்பனவு செய்யப்பட்டது.

**2011இல் கொழும்பு பங்குச் சந்தைக்கான மொத்த வெளிநாட்டு உட்பாய்ச்சல்கள் 2010இன் ஐ.அ.டொலர் 819 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 452 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்த வேளையில், 2011இல் தேறிய வெளிப்பாய்ச்சல் 2010இன் தேறிய வெளிப்பாய்ச்சலான ஐ.அ.டொலர் 230 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 171 மில்லியன்களாகக் காணப்பட்டது.** மொத்த உட்பாய்ச்சலில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு அதிகரித்துச் செல்லும் உலகளாவிய படுகடன் நெருக்கடிகளுக்கு மத்தியில் பண்டங்களில் குறிப்பாக தங்கம், நிலையாக வருமானம் உழைக்கும் அரசாங்கப் பிணையங்கள் போன்ற பாதுகாப்பான முதலீட்டு வாய்ப்புக்களுக்கு முதலீட்டாளர்கள் முன்னுரிமையளிப்பதன் காரணமாக முதலீடுகள் பன்முகப்படுத்தப்பட்டமையே ஓரளவு காரணமாகும்.

**வர்த்தக வங்கிகளின் தேறிய வெளிநாட்டுப் பொறுப்புக்கள் 2011இல் ஐ.அ.டொலர் 971 மில்லியனால் ஐ.அ.டொலர் 2,125 மில்லியன்களுககு அதிகரித்தன.** வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுச் சொத்துக்கள் 2010இன் ஐ.அ.டொலர் 249 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2011இல் ஐ.அ.டொலர் 183 மில்லியனால் வீழ்ச்சியடைந்தன. அதேவேளை, வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுப் பொறுப்புக்கள் 2010இன் ஐ.அ.டொலர் 815 மில்லியன் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2011இல் ஐ.அ.டொலர் 788 மில்லியனால் அதிகரித்தமையின் விளைவாக வர்த்தக வங்கிகளின் தேறிய வெளிநாட்டுப் பொறுப்புக்கள் 2011இல் ஐ.அ.டொலர் 971 மில்லியனால் அதிகரித்தன. வர்த்தக வங்கிகளின் தேறிய வெளிநாட்டுப் பொறுப்புக்கள் அதிகரித்தமைக்கு, பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கும் அதேபோன்று ஏனைய தனியார் துறைத் தொழில் முயற்சிகளுக்கும் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 620 மில்லியன் கொண்ட கடன் வழங்கலுக்காக உள்நாட்டின் வெளிநாட்டு நாணயக் கடன் வழங்கலுக்கு, வெளிநாட்டுச் செலாவணியினை உருவாக்கும் பொருட்டும் அதேபோன்று வர்த்தக வங்கிகள் இலங்கை அபிவிருத்தி முறிகளில் முதலீடு செய்வதற்கான நிதிக்காவும் வெளிநாட்டுச் சொத்துக்கள் மாற்றப்பட்டமையும் அதிகரிக்கின்ற வெளிநாட்டுப் பொறுப்புக்களும் முக்கிய காரணங்களாக இருந்தன.

## சென்மதி நிலுவை

**ஒகத்தில் கணிசமான உயர் மிகையைப் பதிவு செய்த சென்மதி நிலுவை 2011 இறுதியளவில் பற்றாக்குறையாக மாறியமைக்கு ஆண்டின் இறுதிக் காலாண்டில் காணப்பட்ட உலகளாவிய மோசமான சம்பவங்களும் அதிகரித்த உள்நாட்டுக் கேள்விகளுமே முக்கிய காரணமாகும்.** 2011 ஒகத்து நடுப்பகுதியில், சென்மதி நிலுவை ஐ.அ.டொலர் 1.2 பில்லியன் கொண்ட ஆரோக்கியமான மிகையைப் பதிவு

அட்டவணை 5.10 இலங்கையின் வெளிநாட்டு சொத்துக்கள் (அ)

| உடைமை | ஐ.அ.டொலர் மில்லியன் (ஆ) | | | | | ரூபா.மில்லியன் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 (இ) | 2007 | 2008 | 2009 | 2010 (இ) | 2011 (இ) |
| 1. அரசு | 99 | 101 | 113 | 88 | 615 | 10,768 | 11,411 | 12,920 | 9,747 | 70,088 |
| 2. மத்திய வங்கி | 3,409 | 2,301 | 5,244 | 7,109 | 6,133 | 370,640 | 260,297 | 599,880 | 788,722 | 698,528 |
| 3. மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் (1+2) | 3,508 | 2,402 | 5,357 | 7,196 | 6,748 | 381,408 | 271,708 | 612,799 | 798,469 | 768,616 |
| 4. வர்த்தக வங்கிகள் | 1,448 | 1,238 | 1,673 | 1,424 | 1,241 | 157,454 | 140,075 | 191,373 | 158,031 | 141,394 |
| 5. மொத்த வெளிநாட்டு ஒதுக்குகள் (3+4) | 4,956 | 3,640 | 7,030 | 8,621 | 7,989 | 538,862 | 411,783 | 804,173 | 956,500 | 910,010 |
| 6. திரண்ட அலுவல்சார் ஒதுக்குகள், மாதங்களின்படி | | | | | | | | | | |
| 6.1 பொருட்களின் இறக்குமதிகள் | 3.7 | 2.0 | 6.3 | 6.4 | 4.0 | | | | | |
| 6.2 பொருட்கள், பணிகளின் இறக்குமதிகள் | 3.3 | 1.8 | 5.5 | 5.7 | 3.6 | | | | | |
| 7.மொத்த ஒதுக்குகள் மாதங்களின்படி | | | | | | | | | | |
| 7.1 பொருட்களின் இறக்குமதிகள் | 5.3 | 3.1 | 8.3 | 7.7 | 4.7 | | | | | |
| 7.2 பொருட்கள், பணிகளின் இறக்குமதிகள் | 4.7 | 2.8 | 7.2 | 6.8 | 4.3 | | | | | |

(அ) ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய பெறுகைகள் உட்பட சந்தை விலையில் கணிக்கப்பட்டுள்ளன.

(ஆ) மத்திய வங்கியின் பன்னாட்டு ஒதுக்குகளிலுள்ள சில விடயங்கள் மட்டும் பன்னாட்டு நாணய நிதியத்துடன் இணங்கப்பட்ட பிரதிநிதித்துவப்படுத்தல் வீதங்களில் மாற்றப்பட்டுள்ளதுடன் இவை தவிர்ந்த ஏனையவை கீழே தரப்பட்டுள்ளன ஆண்டு இறுதி வீதங்களில் மாற்றப்பட்டுள்ளன.

| ஆண்டு | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 |
|---|---|---|---|---|---|
| ஐ.அ.டொலர் ஒன்றிற்கு ரூபா (ஆண்டிறுதி) | 108.72 | 113.14 | 114.38 | 110.95 | 113.90 |

(இ) தற்காலிகமானது

மூலம்: இலங்கை மத்திய வங்கி

சிறப்புக்குறிப்பு 11

## ஒதுக்குச் சொத்தாக தங்கம்

### அறிமுகம்

தங்கம் உலகிலே காணப்படும் மிகவும் பெறுமதி வாய்ந்த உலோகங்களில் ஒன்றாக விளங்குவதுடன் வரலாறு பதிவு செய்வதற்கு முன்பு நீண்ட காலத்திலிருந்தே நாணயங்கள் தயாரித்தல் மற்றும் ஆபரணத்துக்கான உயர் பெறுமதியுடைய உலோகமாக இருந்து வருகிறது. கடந்த நூற்றாண்டிலிருந்து நாணயக் கொள்கைகளை நடத்துவதற்கான மிகவும் பொதுவான அடிப்படையாக தங்க நியமங்கள் இருந்துள்ளன. உலகளாவிய பொருளாதார கவலைகளுடன் பாதுகாப்பான சொர்க்க சொத்தாக அதன் பெறுமதி, பணவீக்கத்துக்கான காப்பீடு, முதலீடு, உயர் தரமான பிணையத்துக்கான மூலம் என்பன காரணமாக தங்கத்தின் விலைகள் சாதனை ஏற்படுத்தும் மட்டங்களை அடைந்துள்ளன.

2007இல் நிதியியல் சந்தைகள் முறிவடைந்ததைத் தொடர்ந்து முதலீட்டாளர்கள் வெளிநாட்டுச் செலாவணி, பங்கு மற்றும் சொத்துச் சந்தைகளில் நம்பிக்கையிழந்தனர். ஐரோப்பிய வலய மற்றும் ஐக்கிய அமெரிக்கப் படுகடன் நெருக்கடியின் தாக்கம் பாதுகாப்பான சொர்க்கச் சொத்தாக தங்கத்துக்கான கேள்வியில் பாரிய அதிகரிப்பை ஏற்படுத்தியது. அண்மைய ஆண்டுகளில் தங்கம் வழங்குவோரால் கூடிய விலைகள் கேட்கப்பட்டதற்கு மத்தியிலும் வங்கிகளிலிருந்து பணம் மீளப் பெறப்பட்டு தங்கத்தில் முதலிடப்பட்டுள்ளது. பணவீக்க அழுத்தங்கள் மற்றும் உலகிலுள்ள மத்திய வங்கிகளால் தங்கத்தில் மேற்கொள்ளப்பட்ட அதிகரித்த முதலீடும் தங்கத்துக்கான கேள்வியை அதிகரிக்கச் செய்தன.

### மத்திய வங்கியின் ஒதுக்கு முகாமைத்துவத்தில் தங்கம் வகிக்கும் பங்கு


உலக தங்கச் சங்கத்தின்படி, தங்கம் ஒரு பண்டமாக இருக்கின்ற போதும் மத்திய வங்கிகளால் வைத்திருக்கப்படும் மூன்றாவது மிகப் பெரிய சொத்தாகும். இதை ஐ.அ.டொலர் மற்றும் யூரோவில் குறித்துரைக்கப்பட்ட சொத்துக்கள் மட்டுமே விஞ்சின. இது பெரும்பாலும் முடியுமானவரை குழப்பமான காலங்களில் கூட நாட்டின் வெளிநாட்டு ஒதுக்குகளின் பெறுமதி பாதுகாக்கப்பட வேண்டும் என்ற உண்மையால் ஏற்பட்டது.

பின்வரும் காரணங்களால் குறைந்த இடர்நேர்வு, உயர் திரவத்தன்மை மற்றும் சாதகமான இலாபங்கள் என்பவற்றை உள்ளடக்கும் ஒதுக்கு முகாமைத்துவத்தின் முக்கிய குறிக்கோள்களையும் தங்கம் நிறைவு செய்கிறது.

- அநேகமான மத்திய வங்கிகளின் முதலீட்டு வழிகாட்டல்கள் முதலீட்டுத் தரத்திலான நிறுவனங்களுடனான வைப்புக்கள், உயர் தரமுள்ள நாட்டுக்கான படுகடன் மற்றும் அரசாங்க உத்தரவாதத்துடன் வழங்கப்பட்ட நாட்டுக்கான போலி முறிகள் மற்றும் சிறப்பு எடுப்பனவு உரிமைகள் போன்ற சில முக்கிய சொத்து வகுப்புகளில் முதலிடுவதற்கு மட்டுப்படுத்தப்படுகின்றன. எனினும், அண்மைய நெருக்கடிகள் நாட்டுக்கான பல சொத்துக்கள் பெருமளவில் தேய்வடைந்தமையால் நாட்டுக்கான படுகடன் கூட கொடுகடன் இடர்நேர்விலிருந்து வெறுமையாக்க முடியாததை எடுத்துக்காட்டுகின்றன. இச்சூழலில், தங்கம் கொடுகடன் இடர்நேர்வையோ அல்லது இணைத்தரப்பு இடர்நேர்வையோ கொண்டிராததால் உலகிலுள்ள ஒவ்வொரு மத்திய வங்கிக்கான தகைமை பெறும் ஒதுக்குச் சொத்தாக தங்கம் விளங்கும்.

வரைபடம் சிகு 11.1

டொலர் சுட்டெண் மற்றும் தங்கத்தின் விலையின் போக்கு 2000-2011




- வரலாற்று ரீதியாக, தங்கம் பணவீக்கத்துடன் நேர்க்கணிய தொடர்பைக் கொண்டுள்ளது. எனவே, தங்கத்தில் முதலீடு செய்வதன் மூலம் உயர் பணவீக்கமுள்ள காலப்பகுதிகளில் வங்கிகளின் சொத்துப்பட்டியலால் எதிர்கொள்ளப்படும் பணவீக்க இடர்நேர்வுகளைக் குறைக்கலாம். மேலும் தங்க உடைமைகள் குறிப்பாக நெருக்கடி காலத்தில் நாணயத்தில் அல்லது மத்திய வங்கியில் பொதுமக்கள் நம்பிக்கையை மேம்படுத்தும்.

- அநேகமான மத்திய வங்கிகள் அவற்றின் ஒதுக்குகளை ஐ.அ. டொலரில் குறித்துரைக்கப்பட்ட சொத்துக்களில் வைத்திருக்கின்றன. பிரதியீட்டு சேமிப்புப் பெறுமதியாக தங்கத்தின் தொழிற்பாடு காரணமாக தங்கம் ஐ.அ.டொலருடன் எதிர்மறையான தொடர்பைக் கொண்டுள்ளது. எனவே, தங்கத்துக்கு பன்முகப்படுத்துவதன் மூலம் ஒதுக்கு முகாமையாளர்கள் டொலரின் பெறுமதித் தேய்விலிருந்து எழும் இடர்நேர்வுகளுக்கு முகம் கொடுக்கமுடியும்.

- நாணய சந்தைகளில் காணப்பட்ட திரவத்தன்மைப் பிரச்சனைகளுக்கு மத்தியிலும் நிதியியல் நெருக்கடி காலப்பகுதி முழுவதிலும் தங்கச் சந்தை தொடர்ந்தும் திரவத்தன்மை வாய்ந்ததாக விளங்கியது. தங்க திரவத்தன்மையானது வேறுபட்ட வர்த்தக நோக்கங்களைக் கொண்டுள்ள வாங்குநர்கள் மற்றும் விற்பனையாளர்களின் வேறுபட்ட அசைவுகளினாலும் விலை அசைவுகளுக்கு வேறுபட்ட விதத்தில் பிரதிபலிப்புக்களை வெளிப்படுத்துவோராலும் ஆதரவளிக்கப்பட்டது. நிதியியல் சொத்துக்களைப் போலன்றி தங்கத்துக்கான கேள்வியின் மூலம் முதலீட்டு நோக்கத்தில் மட்டும் தங்கியிருக்கவில்லை. மேலும், தங்கத்தின் வழங்கலும் பன்முகப்படுத்தப்பட்டிருப்பதனால் ஒரு சில சந்தைப் பங்கேற்பாளர்களால் சந்தையை மோசடி செய்வது கடினமாகும்.

- வரலாற்று ரீதியாக, நிதியியல் சந்தைக் குழப்பநிலைக் காலங்களில் தங்கம் பாதுகாப்பான சொர்க்கக் கேள்வியைக் கொண்டிருந்தது. இது தங்கம் எந்தவித கொடுகடன் இடர்நேர்வுகளைக் கொண்டிராததாலும் இதன் பெறுமதி நிதியியல் நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கு எப்போதும் நடைமுறையிலிடப்பட்ட கொள்கைகளால் பெறுமதித்

**வரைபடம் சிகு 11.2** **2011 திசெம்ரில் உள்ளவாறான தங்கத்தை வைத்திருக்கும் பிரதான நாடுகள்**




** நாடுகளின் பக்கத்தில் வெளிநாட்டு ஒதுக்குகளில் தங்கத்தின் சதவீதம் குறித்துக் காட்டப்பட்டுள்ளது

*மூலம்:* பன்னாட்டு நாணய நிதியம்

தேய்வடையமாட்டாததாலும் ஏற்பட்டது. நெருக்கடி காலப்பகுதியில் தங்கத்தின் புதிய நிதியியல் பயன்பாடு உருவாக்கப்பட்டது. இங்கு மத்திய இணைத்தரப்பு தீர்ப்பனவு இல்லங்கள் தங்கத்தைப் பிணையமாக ஏற்றுக்கொள்ளத் தொடங்கின.

பொருளாதார நெருக்கடிகள் மேற்கு உலகத்தில் விரிவடைந்தமையால், 1988இற்குப் பின் முதற்தடவையாக 2010இல் முன்னேற்றமடைந்த மற்றும் தோற்றம் பெற்று வரும் பொருளாதாரங்களில் மத்திய வங்கிகள் தங்கத்தின் தேறிய வாங்குநர்களாக மாறின.

**தங்கத்தை வைத்திருக்கும் பிரதான நாடுகள்**

2011 திசெம்பர் இறுதியில் ஐக்கிய அமெரிக்க நாட்டின் வெளிநாட்டு ஒதுக்குகளில் 76.6 சதவீதம் தங்கத்தின் வடிவில் இருந்ததுடன் இது உலகில் எந்தவொரு நாட்டாலும் வைத்திருக்கப்படும் மிகக் கூடிய தொகையாகும். சேர்மனி, இத்தாலி, பிரான்சு மற்றும் நெதர்லாந்து நாடுகள் அவற்றின் வெளிநாட்டு ஒதுக்குகளில் 60 சதவீதத்திற்கும் கூடுதலானவற்றை தங்கத்தில் வைத்திருக்கின்றன.

ஆசியப் பிராந்தியத்தைப் பொறுத்தமட்டில், சீனா அதன் தங்க ஒதுக்குகளை 600 தொன்களிலிருந்து 1,054 தொன்களுக்கு அதிகரித்து முன்னிலையில் நிற்கிறது. கடந்த சில ஆண்டுகளில் தங்க உடைமைகளை அதிகரித்த தோற்றம் பெற்றுவரும் ஏனைய பொருளாதாரங்கள் தாய்லாந்து, இலங்கை, கொரியா மற்றும் இந்தியாவை உள்ளடக்குகின்றன.

**இலங்கையில் தங்க ஒதுக்குகள்**

இலங்கை மத்திய வங்கி தங்கத்திலான வர்த்தகச் செயற்பாடுகளை 1990 களின் முற்பகுதியில் ஆரம்பித்தது. ஒதுக்கை முகாமைப்படுத்தும் குறிக்கோள்களின் உச்சப்பயனை அடையும் நோக்கில் இலங்கை மத்திய வங்கி பன்னாட்டுச் சந்தையில் தங்கத்தை வாங்குவதிலும் விற்பதிலும் ஈடுபடுகிறதுடன் அது அதன் தங்க உடைமைகளை படிப்படியாக ஒன்று சேர்த்தது.

தங்க இறக்குமதிகளை மீள் ஒழுங்குமுறைப்படுத்த முன்பு, 1990 களில் உள்ளூர் சில்லறை வாடிக்கையாளர்களுக்கு மீள்விற்பனை செய்யும் நோக்கத்துக்காக இலங்கை மத்திய வங்கி ஒப்படை அடிப்படையில் தங்கத்தின் சில்லறைப் பொருட்களின் (அதாவது சட்டங்கள் மற்றும் நாணயக் குத்திகள்) பௌதீக அளவுகளில் இறக்குமதி செய்தது. 1996இல் இத்தொழிற்பாடு வர்த்தக வங்கிகளிடம் ஒப்படைக்கப்பட்டது. வர்த்தக வங்கிகளுக்கு சில்லறைத் தொழிற்பாட்டைக் கையளித்த பின் இலங்கை மத்திய வங்கி உள்நாட்டுச் சந்தையில் எந்தவொரு தங்க விற்பனையையும் மேற்கொள்ளவில்லை அல்லது சில்லறை விற்பனைக்காக எந்தவொரு தங்கத்தையும் இறக்குமதி செய்யவில்லை.

அண்மையில் இலங்கை மத்திய வங்கியால் மேற்கொள்ளப்பட்ட பாரிய தங்கக் கொள்வனவு 2009இல் பநாநிதியத்திடமிருந்து 10 தொன் தங்கத்தைக் கொள்வனவு செய்ததன் மூலம் இடம்பெற்றது. இலங்கை மத்திய வங்கி அதன் வெளிநாட்டு ஒதுக்குகளில் போதுமான அளவு தங்கத்தைத் தொடர்ந்து பேணி வருகிறது.

செய்தமைக்கு பணிகள் கணக்கிற்கான உட்பாய்ச்சல், தொழிலாளர் பணவனுப்பல் மற்றும் அரசாங்கம் மற்றும் தனியார் துறைகளுக்கான ஏனைய நிதிப்பாய்ச்சல் என்பன பக்கபலமாக அமைந்தன. எனினும், நாட்டின் விரைவடைந்த பொருளாதார நடவடிக்கைகள், இடைநிலை மற்றும் முதலீட்டுப் பொருட்களுக்கு கணிசமாக உயர்வடைந்த கேள்வி, அதிகரித்த பன்னாட்டு எண்ணெய் விலைகள் என்பன ஆண்டின் பிற்பகுதியில் வர்த்தகப் பற்றாக்குறை குறிப்பிடத்தக்களவிற்கு விரிவடைய வழிவகுத்து, 2011இல் நடைமுறைக் கணக்கு ஒப்பீட்டு ரீதியில் உயர்ந்த பற்றாக்குறையினை பதிவு செய்யும் நிலைக்கு இட்டுச் சென்றது. 2011இல் மூலதன மற்றும் நிதியியல் கணக்கின் மிகை 2010 உடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்த போதும் உயர்ந்த நடைமுறைக் கணக்கு, மூலதன மற்றும் நிதியியல் கணக்கின் மிகைகளை விஞ்சியதன் விளைவாக 2011இன் இறுதியில் சென்மதி நிலுவையில் ஐ.அ.டொலர் 1,061 மில்லியன் கொண்ட பற்றாக்குறை உருவாயிற்று.


## பன்னாட்டு ஒதுக்குகள்

**மத்திய வங்கிக்கும் அரசாங்கத்திற்கும் (ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய நிலுவைகள் நீங்கலாக) சொந்தமான பன்னாட்டு ஒதுக்குகளை உள்ளடக்கிய மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2010 இறுதியின் ஐ.அ.டொலர் 6,610 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2011 இறுதியில் ஐ.அ.டொலர் 5,958 மில்லியன்களாகக் காணப்பட்டன.** ஆண்டின் இறுதியில் ஒதுக்கு நிலைமை, 2010 இறுதியில் பதிவு செய்யப்பட்ட 5.9 மாத இறக்குமதிகளுக்குப் போதுமான நிலைமையுடன் ஒப்பிடுகையில் 3.5 மாத இறக்குமதிகளுக்குச் சமமானதாகக் காணப்பட்டது. மிகையான வெளிநாட்டுச் செலாவணியினைச் சந்தையிலிருந்து ஈர்த்துக் கொள்ளும் மத்திய வங்யின் நடவடிக்கை, நாட்டிற்கான முறிகளின் பெறுகை மற்றும் ப.நா. நிதியத்தின் துணைநில் ஒழுங்குகள் என்பனவற்றின் காரணமாக நாட்டின் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2011 ஒகத்து நடுப்பகுதியில் ஐ.அ.டொலர் 8.2 பில்லியன் கொண்ட சாதனை மட்டத்தினை

அடைந்தன. எனினும், 2011இன் பின்னரைப் பகுதியில், உயர்ந்த எண்ணெய் இறக்குமதிச் செலவு உட்பட, இறக்குமதிச் செலவினம் மிகக் கூடுதலாக அதிகரித்தமையின் முக்கிய விளைவாக வர்த்தகப் பற்றாக்குறை விரிவடைந்தமையானது, தொழிலாளர் பணவனுப்பல்கள் மற்றும் சுற்றுலாவின் பேரிலான அதிகரித்த பெறுகைகளும் மூலதன மற்றும் நிதியியல் கணக்குகளுக்கு உட்பாய்ச்சல்களும் காணப்பட்டமைக்கிடையிலும் அத்தகைய அதிகரித்த கேள்வியின் ஒரு பகுதியை ஈடுசெய்ய வெளிநாட்டுச் செலாவணியினை நிரம்பல் செய்வதற்கு மத்திய வங்கியைத் தேவைப்படுத்தியது. இதன் விளைவாக, மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2011 இறுதியில் ஐ.அ.டொலர் 6 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது.

**பன்னாட்டு நாணய நிதியம் (பநாநி) - துணைநில் ஒழுங்குவசதியின் (துஒவ) கீழ், சிஎஉ 1.65 பில்லியன் (கிட்டத்தட்ட ஐ.அ.டொலர் 2.56 பில்லியன்) 2009 யூலையில் ஒப்புதலளிக்கப்பட்டது.** இதன்படி 2010 இறுதியில், நான்கு மீளாய்வுகள் பூர்த்தி செய்யப்பட்டதுடன் துஒவசதியின் பெயரில் மொத்தமாக ஐ.அ.டொலர் 1.3 பில்லியன் (சிஎஉ 827 மில்லியன்) பெறப்பட்டது. (இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை 2010 - சிறப்புக் குறிப்பு 11ஐப் பார்க்கவும்). ஐந்தாவது மற்றும் ஆறாவது மீளாய்வுகள் முறையே 2011 பெப்புருவரி மற்றும் ஏப்பிறலில் பூர்த்தி செய்யப்பட்டதுடன் மொத்தமாக ஐ.அ.டொலர் 436 மில்லியன் ஆறாவது மற்றும் ஏழாவது தொகுதியாக (ஒவ்வொன்றும் சிஎஉ 137.8 மில்லியன்) பெறப்பட்டன. மேலும், பநாநி - துஒவசதியின் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான வெற்றிகரமான செயலாற்றத்தின் அடிப்படையில் பநாநிதிய நிறைவேற்றுச் சபை 2011 ஏப்பிறலில் மீளாய்வுகளை மீளமைக்க தீர்மானித்ததுடன் பகிர்ந்தளிப்புகள் காலாண்டிலிருந்து அரையாண்டு அடிப்படையில் விளங்கி முன்னைய தொகுதிப் பெறுமதியை இரு மடங்காக்கியதன் மூலம் எஞ்சிய நான்கு தொகுதிகளும் இரண்டு தொகுதிகளாக இணைக்கப்பட்டன. ஏழாவது மீளாய்வு 2012 ஏப்பிறல் 02இல் பூர்த்தி செய்யப்படுமென எதிர்பார்க்கப்படுவதுடன் எட்டாவது தொகுதியாக ஐ.அ.டொலர் 427 மில்லியன் (சிஎஉ 275.6

**வரைபடம் 5.11** காலாண்டு வெளிநாட்டு ஒதுக்குகள் (ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய நிலுவைகள் உள்ளடங்கலாக)




மில்லியன்) பெறப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. துஒவசதி நிகழ்ச்சித்திட்டத்தின் எட்டாவதும் இறுதியுமான மீளாய்வு 2012 யூலையில் பூர்த்தியாக்க அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளதுடன் இதைத் தொடர்ந்து இறுதித் தொகுதி வழங்கப்படுவதுடன் இந்நிகழ்ச்சித்திட்டம் முடிவுக்கு வரும்.

**மொத்த அலுவல்சார் ஒதுக்குகளையும் வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுச் சொத்துக்களையும் உள்ளடக்கிய மொத்தப் பன்னாட்டு ஒதுக்குகள் 2010 இறுதியின் ஐ.அ.டொலர் 8,034 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2011 இறுதியில் ஐ.அ.டொலர் 7,199 மில்லியனாக விளங்கியது.** மொத்தப் பன்னாட்டு ஒதுக்கு ஐ.அ.டொலர் 836 மில்லியனால் வீழ்ச்சியடைந்தமைக்கு மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் ஐ.அ.டொலர் 653 மில்லியனாலும் வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டு ஒதுக்குகள் ஐ.அ.டொலர் 183 மில்லியனாலும் வீழ்ச்சியடைந்தமையே காரணமாகும். குறுங்கால பொறுப்புக்களுக்கான மொத்த அலுவல்சார் ஒதுக்கின் விகிதத்தினால் அளவிடப்பட்டவாறான ஒதுக்குப் போதுமை 2010இல் இறுதியின் 96.5 சதவீதத்திலிருந்து 2011 இறுதியில் 71 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு ஒதுக்கில் ஏற்பட்ட வீழ்ச்சி மற்றும் குறுங்கால படுகடனில் ஏற்பட்ட அதிகரிப்பு இரண்டும் காரணங்களாக விளங்கின. குறுங்கால படுகடனின் அதிகரிப்பானது வர்த்தக வங்கிகளின் பொறுப்புக்களின் அதிகரிப்பு மற்றும் 2005இல் வழங்கப்பட்டு 2012இல் செலுத்தவேண்டிய ஐ. அமெ. டொலர் 500 மில்லியன் பெறுமதியான நாட்டுக்கான முறியினை செலுத்தியமையினால் பிரதானமாக ஏற்பட்டதாகும்.

**பாரிய பேரண்டப் பொருளாதாரம் மற்றும் நிதியியல் உறுதிப்பாடு, மேம்பட்டு வரும் வெளிநாட்டுக் கொடுப்பனவு நிலைமை மற்றும் நிதியியல் திரட்சித்தன்மை என்பனவற்றில் பிரதிபலிக்கப்பட்டவாறு அதிகரித்து வருகின்ற சமாதானத்தின் நன்மைகளது அடிப்படையில் பன்னாட்டு தரமிடல் முகவர்கள் 2011இன் தொடக்கத்தில் இலங்கையின் தரமிடலை உயர்த்தினர்.** பிட்ஜ்றேடிங் இலங்கையின் நீண்டகால வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நாணய வழங்குநர் செலுத்தத் தவறிய தரமிடலை பீ+ இலிருந்து பீபீ இற்கு உயர்த்திய வேளையில் இத்தரமிடல்கள் மீதான தோற்றப்பாடு "உறுதியாக" இருந்தது. மேலும் பிட்ஜ் நாடு மீதான உச்ச எல்லையை பீ+ இலிருந்து பீபீ- இற்கு தரமுயர்த்தியதுடன் குறுங்கால வெளிநாட்டு நாணய வழங்குநர் செலுத்தத் தவறிய தரமிடலை 'பீ' இல் உறுதிப்படுத்தியது. அதேவேளை, மூடி இன்வெஸ்டர் சேர்விஸ் இலங்கையின் தோற்றப்பாட்டினை பீ1 இலும் நாட்டிற்கான வெளிநாட்டு நாணய தரமிடலை 'உறுதியான' தன்மையிலிருந்து "சாதகமான" தன்மைக்கும் ஸ்டான்டட் அன்ட் புவர்ஸ் இலங்கையின் தோற்றப்பாட்டினை பீ+ இற்கும் வெளிநாட்டு நாணய நாட்டிற்கான தரமிடலை "உறுதியான" நிலையிலிருந்து "சாதகமான" தன்மைக்கும் தரமுயர்த்தியது.

**நாட்டிற்குள் மிகக் கூடியளவு வெளிநாட்டு உட்பாய்ச்சலைக் கவர்வதற்கு மத்திய வங்கியினால் பல்வேறு வழிமுறைகள் முன்னெடுக்கப்பட்டன.** வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளைத் தளர்த்தியதன் மூலம் வெளிநாட்டு நிதியியல் சந்தைகளிலிருந்து நேரடியாகக் கடன்படுவதற்கு உள்ளூர் தொழில் முயற்சிகள் ஊக்குவிக்கப்பட்ட வேளையில், வர்த்தக வங்கிகள் அவற்றின் அடுக்கு 2 மூலதனத்தினை அதிகரிப்பதற்கு வெளிநாட்டு நிதிகளைத் திரட்ட அனுமதிக்கப்பட்டன. மேலும், அரச பிணையங்கள் சந்தையில் வெளிநாட்டு உட்பாய்ச்சலை ஊக்குவிக்கும் பொருட்டு, வெளிநாட்டு முதலீடுகள் மீதான வரையறை திறைசேரி உண்டியல் மற்றும் முறிகளின் வெளிநின்ற தொகையின் 10 சதவீதத்திலிருந்து 2011 திசெம்பர் இறுதியில் 12.5 சதவீதத்திற்கு உயர்த்தப்பட்டது. அத்துடன் வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் கீழ் எதிர்பார்க்கப்படும் உட்பாய்ச்சல்கள் பெறப்படுவதனை உறுதிப்படுத்திக் கொள்ளும் விதத்தில், மத்திய வங்கி, தொடர்பான நிறுவனங்களுடன் சேர்ந்து வெளிநாட்டுச் செலாவணியின் உட்பாய்ச்சல் பற்றி மிக நெருக்கமாகக் கண்காணிக்கும்.

## 5.6 வெளிநாட்டுப் படுகடனும் படுகடன் பணிகளும்

### வெளிநாட்டுப் படுகடன்

மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக நாட்டின் மொத்த **உள்நாட்டுப் படுகடன் 2010இன் 43.3 சதவீதத்திலிருந்து 2011இல் 41.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.** ஐ.அ.டொலர்


**அட்டவணை 5.11 வெளிநின்ற வெளிநாட்டுப்படுகடனும் வங்கிதொழிற்துறையின் வெளிநாட்டுப் பொறுப்புக்களும்**

| விடயம் | ஐ.அ.டொலர் மில்லியன் | | | | | ரூபா. மில்லியன் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 (அ) | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 (அ) |
| **1. நடுத்தர, மற்றும் நீண்ட காலப்படுகடன்** | **12,879** | **13,646** | **15,564** | **18,823** | **21,882** | **1,400,883** | **1,543,952** | **1,780,313** | **2,088,449** | **2,492,391** |
| 1.1 அரசு | 11,744 | 12,593 | 13,769 | 16,076 | 18,508 | 1,276,846 | 1,424,729 | 1,574,933 | 1,783,728 | 2,108,084 |
| 1.2 அரச கூட்டுதாபனங்களும் அரச உத்தரவாதத்துடனான தனியார்துறையும் | 345 | 251 | 110 | 517 | 646 | 37,501 | 28,429 | 12,608 | 57,398 | 73,581 |
| 1.3 அரச கூட்டுதாபனங்களும் அரச உத்தரவாதமற்ற தனியார்துறையும் | 539 | 634 | 967 | 919 | 1,010 | 58,553 | 71,715 | 110,570 | 101,913 | 115,033 |
| 1.4 பன்னாட்டு நாணய நிதிய எடுப்பனவுகள்(ஆ) | 251 | 169 | 719 | 1,311 | 1,718 | 27,933 | 19,079 | 82,201 | 145,410 | 195,693 |
| **2. குறுங்கால படுகடன்** | **1,111** | **1,460** | **3,098** | **2,615** | **2,584** | **120,748** | **165,207** | **354,341** | **290,149** | **294,311** |
| 2.1 அரசு (இ) | 457 | 212 | 1,622 | 2,171 | 2,367 | 49,641 | 24,006 | 185,534 | 240,855 | 269,654 |
| 2.2 ஏனையவை (ஈ) | 654 | 1,248 | 1,476 | 444 | 216 | 71,107 | 141,201 | 168,808 | 49,294 | 24,657 |
| **3. வங்கியற்துறையின் வெளிநாட்டுப் பொறுப்புக்கள்** | **2,493** | **2,669** | **2,251** | **3,393** | **4,385** | **271,063** | **301,950** | **257,575** | **376,418** | **499,506** |
| 3.1 மத்திய வங்கி (உ) | 2 | 1 | 227 | 228 | 229 | 219 | 64 | 26,042 | 25,322 | 26,047 |
| 3.2 வர்த்தக வங்கிகள் (ஊ) | 2,046 | 1,861 | 1,763 | 2,578 | 3,366 | 222,389 | 210,531 | 201,696 | 286,052 | 383,427 |
| 3.3ஆ.தீ.ஒ. பொறுப்புக்கள் | 446 | 808 | 261 | 586 | 790 | 48,454 | 91,355 | 29,837 | 65,044 | 90,032 |
| **4. மொத்த வெளிநாட்டுப்படுகடன் (1+2)** | **13,989** | **15,107** | **18,662** | **21,438** | **24,466** | **1,521,581** | **1,709,159** | **2,134,654** | **2,378,598** | **2,786,701** |
| **5. மொத்த வெளிநாட்டுபடுகடனும் பொறுப்புக்களும் (1+2+3)** | **16,483** | **17,775** | **20,913** | **24,830** | **28,851** | **1,792,643** | **2,011,109** | **2,392,229** | **2,755,015** | **3,286,208** |
| **ஒப்பந்த குறிப்பு விடயங்கள்** | | | | | | | | | | |
| **நடுத்தர மற்றும் நீண்ட கால படுகடன்கள்** | | | | | | | | | | |
| செயற்றிட்டக்கடன்கள் | 10,002 | 11,148 | 11,914 | 13,174 | 14,482 | 1,087,359 | 1,261,304 | 1,362,806 | 1,461,729 | 1,649,492 |
| செயற்றிட்டமல்லாக் கடன்கள் | 1,064 | 740 | 708 | 1,516 | 1,860 | 115,697 | 83,703 | 81,025 | 168,151 | 211,847 |
| நிரம்பலாளர் கொடுகடன் | 679 | 705 | 1,146 | 1,838 | 2,683 | 73,790 | 79,722 | 131,103 | 203,888 | 305,631 |
| ப.நா.நி.எடுப்பனவுகள் (ஆ) | 251 | 169 | 719 | 1,311 | 1,718 | 27,933 | 19,079 | 82,201 | 145,410 | 195,693 |
| ஏனைய கடன்கள் (எ) | 884 | 885 | 1,077 | 985 | 1,139 | 96,054 | 100,145 | 123,178 | 109,271 | 129,727 |
| **குறுங்காலப்படுகடனும் வங்கித் தொழிற்துறை வெளிநாட்டு பொறுப்புக்களும்** | **3,604** | **4,129** | **5,349** | **6,008** | **6,969** | **391,811** | **467,157** | **611,916** | **666,566** | **793,817** |
| **மொ.உ.உ.இன் சதவீதமாக (ஏ)** | | | | | | | | | | |
| மொத்த வெளிநாட்டுப்படுகடன் | 43.2 | 37.1 | 44.4 | 43.3 | 41.3 | 42.4 | 38.8 | 44.1 | 42.4 | 42.6 |
| மொத்த வங்கித் தொழிற்துறையின் வெளிநாட்டுப் பொறுப்புக்கள் | 7.7 | 6.6 | 5.4 | 6.8 | 7.4 | 7.6 | 6.8 | 5.3 | 6.7 | 7.6 |
| மொத்த வெளிநாட்டுப்படுகடனும் பொறுப்புக்களும் | 51.0 | 43.7 | 49.7 | 50.1 | 48.8 | 50.1 | 45.6 | 49.5 | 49.2 | 50.2 |
| குறுங்காலப்படுகடன் | 3.4 | 3.6 | 7.4 | 5.3 | 4.4 | 3.4 | 3.7 | 7.3 | 5.2 | 4.5 |
| குறுங்காலப்படுகடனும் வங்கித்தொழிற்துறையின் வெளிநாட்டு பொறுப்புக்கள் | 11.1 | 10.1 | 12.7 | 12.1 | 11.8 | 10.9 | 10.6 | 12.7 | 11.9 | 12.1 |
| **மொத்தப் படுகடனினதும் பொறுப்புக்களினதும் சதவீதமாக** | | | | | | | | | | |
| குறுங்காலப்படுகடன் | 6.7 | 8.2 | 14.8 | 10.5 | 9.0 | 6.7 | 8.2 | 14.8 | 10.5 | 9.0 |
| குறுங்காலப் பொறுப்புக்கள் | 15.1 | 15.0 | 10.8 | 13.7 | 15.2 | 15.1 | 15.0 | 10.8 | 13.7 | 15.2 |
| **அலுவல்சார் ஒதுக்கின் சதவீதமாக குறுங்காலப்படுபடன்** | **31.7** | **60.8** | **57.8** | **36.3** | **38.3** | **31.7** | **60.8** | **57.8** | **36.3** | **38.3** |

(அ) தற்காலிகமானது
(ஆ) 2009இல் பன்னாட்டு நாணய நிதியத்தின் துணைனில் ஒழுங்குபடுத்தல் வசதியின் கீழான எடுப்பனவுகள் உள்ளடங்கலாக
(இ) வதியாதோருக்கு வழங்கப்பட்ட வெளிநின்ற திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகளை உள்ளடங்குகின்றது
(ஈ) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஈரானிய கொடுகடன்களையும் ஏனைய வர்த்தகக்கொடுகடன்களையும் உள்ளடக்குகின்றது
(உ) 2009இல் ஐ.அ.டொலர் 200 மில்லியன் நாணயக் கொடுக்கல் வாங்கல்கள் உள்ளடங்கலாக
(ஊ) கரைகடந்த வங்கித் தொழில் பிரிவுகளை உள்ளடக்கிய வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுப் பொறுப்புக்கள்
(எ) அரச கூட்டுதாபனங்களினதும் தனியார்துறை நிறுவனங்களினதும் நீண்டகாலக் கடன்களை உள்ளடக்கியது
(ஏ) தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைகளத்தால் வெளியிடப்பட்ட நடைமுறைச் சந்தை விலைகளிலான மொ.உ.உ யினை அடிப்படையாகக் கொண்டது

மூலங்கள்: வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 5.12 வெளிநாட்டுப் படுகடன்**




நியதிகளில், மொத்த வெளிநாட்டுப் படுகடன் 2010இன் ஐ.அ.டொலர் 21.4 பில்லியனிலிருந்து 2011இல் ஐ.அ.டொலர் 24.5 பில்லியனுக்கு 14.1 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு நடுத்தர மற்றும் நீண்டகாலப் படுகடனில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாகும். நடுத்தரத்திலிருந்து நீண்டகாலம் வரையான படுகடனில் அரச படுகடன் ஏறத்தாழ 85 சதவீதத்திற்கு வகைகூறியது. 2011 யூலை வழங்கப்பட்ட ஐ.அ.டொலர் 1 பில்லியன் கொண்ட நாட்டிற்கான முறி உட்பட அரசிற்கான உயர்ந்தமட்ட பகிர்ந்தளிப்புக்கள் 2011இல் அரச படுகடன் இருப்பு 15 சதவீதத்தினால் அதிகரிக்க வழிவகுத்தன. 2011இல் பல்தேசிய நிறுவனங்களிலிருந்து அரசிற்குக் கிடைத்த சலுகை ரீதியான கடன்கள் ஐ.அ.டொலர் 5.48 பில்லியனுக்கு 4 சதவீதத்தினால் அதிகரித்தன. அதேவேளை, மொத்த அரச வெளிநாட்டுப் படுகடனின் சதவீதமாக சலுகை ரீதியான கடன்கள் 2010 இறுதியின் பதிவு செய்யப்பட்ட 71 சதவீதத்திலிருந்து 2011 இறுதியில் 63 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. குறுங்காலப் படுகடன் ஐ.அ.டொலர் 2.62 பில்லியனிலிருந்து 2011இல் ஐ.அ.டொலர் 2.58 பில்லியனுக்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. குறுங்காலப் படுகடன் வீழ்ச்சியடைந்தமைக்கு திறைசேரி உண்டியல் மற்றும் முறிகளின் வெளிநின்ற இருப்பில் அதிகரிப்பு ஏற்பட்ட போதும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கான வர்த்தகக் கொடுகடன் குறைவடைந்தமையே முக்கிய காரணங்களாக அமைந்திருந்தன. அதேவேளை, மொத்தப் படுகடனுக்கான குறுங்காலப் படுகடனின் விகிதம் 2011இன் இறுதியில் 9 சதவீதத்திற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. வெளிநின்ற மொத்த வெளிநாட்டுப் படுகடனின் நாணய உள்ளமைப்பில் சிஎஉ மற்றும் ஐ.அ.டொலர் என்பனவற்றில் குறித்துரைக்கப்பட்ட படுகடனின் பங்குகள் முறையே 28.4 சதவீதத்திற்கும் 34.8 சதவீதத்திற்கும் வகைகூறிய வேளையில் 26.5 சதவீதம் யப்பானிய யென்னில் குறித்துரைக்கப்பட்டிருந்தன.

**வங்கித்தொழில் துறையின் வெளிநாட்டுப் பொறுப்புக்கள் 2011இன் இறுதியளவில் ஐ.அ.டொலர் 4.4 பில்லியனுக்கு 29 சதவீதத்தினால் கணிசமாக அதிகரித்தன.** இதற்கு, கம்பனி கடன்பாட்டாளர்களுக்கான குறிப்பாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கான வர்த்தக வங்கிகளின் அதிகரித்த இறக்குமதிக் கொடுகடன்களின் விளைவாக வர்த்தக வங்கிகளின் பொறுப்புக்கள் 2010 இறுதியின் ஐ.அ.டொலர் 2.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2011 இறுதியில் ஐ.அ.டொலர் 3.4 பில்லியனுக்கு அதிகரித்தமையே முக்கிய காரணமாகும். அதேவேளையில் ஆ.தீ.

**அட்டவணை 5.12 வெளிநாட்டுப் படுகடன் பணிக்கொடுப்பனவுகள்**

| வகை | ஐ.அ.டொலர் மில்லியன் | | | | | ரூபா.மில்லியன் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2007 | 2008 | 2009 | 2010(அ) | 2011(ஆ) | 2007 | 2008 | 2009 | 2010 (அ) | 2011(ஆ) |
| 1. படுகடன் பணிக் கொடுப்பனவுகள் | 1,232 | 1,525 | 1,702 | 1,761 | 1,717 | 136,521 | 165,511 | 195,727 | 199,144 | 189,732 |
| 1.1 படுகடன் தீர்ப்பனவுகள் | 791 | 1,075 | 1,346 | 1,142 | 1,008 | 87,731 | 116,702 | 154,713 | 129,100 | 111,392 |
| (i) ப.நா.நிதியத்திற்கு | 5 | 77 | 95 | 46 | 11 | 789 | 8,582 | 10,941 | 5,238 | 1,238 |
| (ii) ஏனையவற்றிற்கு | 786 | 998 | 1,251 | 1,095 | 996 | 86,942 | 108,120 | 143,772 | 123,862 | 110,154 |
| 1.2 வட்டிப்கொடுப்பனவுகள் | 441 | 450 | 357 | 619 | 709 | 48,790 | 48,809 | 41,014 | 70,043 | 78,340 |
| (i) ப.நா.நிதியத்திற்கு | 14 | 11 | 6 | 7 | 9 | 1,509 | 1,173 | 644 | 803 | 1,081 |
| (ii) ஏனையவற்றிற்கு | 427 | 440 | 351 | 612 | 700 | 47,281 | 47,636 | 40,370 | 69,240 | 77,259 |
| 2. பொருட்களின் ஏற்றுமதிகள் மற்றும் பணிகளிலிருந்தான வருவாய்கள் | 9,415 | 10,115 | 8,977 | 11,100 | 13,643 | 1,041,932 | 1,095,679 | 1,031,289 | 1,254,021 | 1,508,565 |
| 3. பொருட்களின் ஏற்றுமதிகள், பணிகள், வருமானம் மற்றும் தனியார் மாற்றல்களிலிருந்தான பெறுகைகள் | 12,365 | 13,001 | 12,423 | 15,539 | 19,254 | 1,368,959 | 1,408,637 | 1,427,658 | 1,755,695 | 2,128,776 |
| 4. படுகடன் பணி விகிதம் (ஆ) | | | | | | | | | | |
| 4.1 மேலுள்ள 2இன் சதவீதமாக | | | | | | | | | | |
| (i) முழு மொத்த விகிதம் | 13.1 | 15.1 | 19.0 | 15.9 | 12.6 | 13.1 | 15.1 | 19.0 | 15.9 | 12.6 |
| (ii) ப.நா.நி கொடுக்கல்வாங்கல் நீங்கலாக | 12.9 | 14.2 | 17.8 | 15.4 | 12.4 | 12.9 | 14.2 | 17.9 | 15.4 | 12.4 |
| 4.2 மேலுள்ள 3இன் சதவீதமாக | | | | | | | | | | |
| (i) முழு மொத்த விகிதம் | 10.0 | 11.7 | 13.7 | 11.3 | 8.9 | 10.0 | 11.7 | 13.7 | 11.3 | 8.9 |
| (ii) ப.நா.நி. கொடுக்கல்வாங்கல் நீங்கலாக | 9.8 | 11.1 | 12.9 | 11.0 | 8.8 | 9.8 | 11.1 | 12.9 | 11.0 | 8.8 |
| 5. அரசபடுகடன் பணிக் கொடுப்பனவுகள் | | | | | | | | | | |
| 5.1 அரச படுகடன் பணிக் கொடுப்பனவுகள் (ஈ) | 813 | 1,066 | 1,166 | 922 | 1,152 | 89,924 | 115,508 | 134,019 | 104,240 | 127,365 |
| 5.2 மேலுள்ள 1இன் சதவீதமாக | 66.0 | 69.9 | 68.5 | 52.4 | 67.1 | 65.9 | 69.8 | 68.5 | 52.3 | 67.1 |

(அ) திருத்தியமைக்கப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) ரூபா பெறுமதியிலும் ஐ.அ.டொலர் பெறுமதியிலும் கணிக்கப்பட்ட படுகடன் பணி விகிதமானது ஆண்டு கால பகுதியில் நாணய மாற்று விகித வேறுபாடுகள் காரணமாக வேறுபடும்
(ஈ) பன்னாட்டு நாணய நிதிய கொடுக்கல்வாங்கல்கள் தவிர்த்து

மூலம்: இலங்கை மத்திய வங்கி

ஒன்றியப் பொறுப்புக்கள் 2010 இறுதியின் ஐ.அ.டொலர் 586 மில்லியனிலிருந்து 2011 இறுதியில் ஐ.அ.டொலர் 790 மில்லியனுக்கு அதிகரித்தமைக்கு ஆண்டின் இறுதியில் பிற்போடப்பட்ட தீர்ப்பனவுகளே காரணமாகும். மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக மொத்த வெளிநாட்டுப் படுகடனும் பொறுப்புக்களும் 2010இன் 50.1 சதவீதத்திலிருந்து 2011 இறுதியில் 48.8 சதவீதத்திற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தன.

### வெளிநாட்டுப் படுகடன் பணிக்கொடுப்பனவு

**கடன் தீர்ப்பனவுகளையும் வட்டிக் கொடுப்பனவுகளையும் உள்ளடக்கிய மொத்த வெளிநாட்டுப் படுகடன் பணிக் கொடுப்பனவுகள் பெயரளவு நியதிகளில் 2010இன் ஐ.அ.டொலர் 1,761 மில்லியனிலிருந்து 2011இல் ஐ.அ.டொலர் 1,717 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தன.** மேலும், பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதிகளின் சதவீதமாக, மொத்த வெளிநாட்டுப் படுகடன் பணிக் கொடுப்பனவுகள் 2009இன் 19 சதவீதத்துடனும் 2010இன் 15.9 சதவீதத்துடனும் ஒப்பிடுகையில் 2011இல் 12.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. 2009இலும் 2010இலும் காணப்பட்ட உயர்ந்த விகிதத்திற்கு ஐ.அ.டொலர் 25 மில்லியன் மற்றும் ஐ.அ.டொலர் 225 மில்லியன் கொண்ட கூட்டுக் கடன்கள் தீர்ப்பனவு செய்யப்பட்டமையும் 2004இன் சுனாமி அனர்த்தத்தினை உடனடுத்து 2005இல் வழங்கப்பட்ட படுகடனின் இறுதித் தவணையினை கொடுப்பனவு செய்வதற்கான சட்ட இசைவுத் தாமதமும் அதேபோன்று 2011இல் பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பும் காரணங்களாக இருக்கக்கூடும்.


## 5.7 செலாவணி வீத அமைப்பும் செலாவணி வீத அசைவுகளும்

**2011இன் செலாவணி வீதக் கொள்கையானது செலாவணி வீதத்தில் ஏற்படும் நியாயமற்ற தளம்பல்களின் மீது கவனம் செலுத்தியது.** முதலரைப் பகுதியில் ரூபாவானது ஐ.அ.டொலருக்கெதிராக ரூபா 1.23 சதவீதத்தினால் உயர்வடைந்தமைக்கு பணவனுப்பல்கள், சுற்றுலா என்பனவற்றின் பேரிலான கணிசமான பெறுகைகளும் மூலதன மற்றும் நிதியியல் கணக்கிற்கான உட்பாய்ச்சல்களும் துணையாக இருந்த வேளையில் 2011இன் இறுதிக் காலாண்டில் 0.54 சதவீதத்தினால் தேய்வடைந்தமைக்கு பெற்றோலியச் செலவு உட்பட இறக்குமதிச் செலவினத்தில் ஏற்பட கடுமையான அதிகரிப்பே காரணமாகும். ஏற்றுமதியின் போட்டித்தன்மையினை அதிகரிக்கும் நோக்குடன் 2011 நவெம்பரில் ரூபா மேலும் 3 சதவீதத்தினால் பெறுமதி குறைக்கப்பட்டது. இதன்படி, 2011 இறுதியில் ரூபா ஐ.அ.டொலருக்கெதிராக 2.59 சதவீதத்தினால் ரூ.113.90 இற்கு தேய்வடைந்தது. அதேவேளையில், ஐ.அ.டொலருக்கெதிரான ஆண்டுச் சராசரி செலாவணி வீதம் 2010இன் ரூ.113.06 உடன் ஒப்பிடுகையில் 2011இல் ரூ.110.57 ஆகக் காணப்பட்டது.

**குறுக்கு நாணய நடத்தையினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் ரூபாவானது மற்றைய முக்கிய நாணயங்களுக்கெதிராக கலப்பான அசைவுகளைக் 2011இல் காட்டியது.** இது இந்திய ரூபாவிற்கெதிராக குறிப்பிடத்தக்களவிலும் (15.01 சதவீதம்), யூரோவிற்கெதிராக மிதமான அளவிலும் (0.09 சதவீதம்) உயர்வடைந்தமைக்கு யூரோ வலயம் நாட்டிற்கான படுகடன் தொடர்பான விடயங்களிலிருந்து நீக்கப்பட்டமையே காரணமாகும். ரூபாவானது ஸ்டேர்லிங் பவுண் (2.30 சதவீதம்) மற்றும் யப்பானிய யென்னுக்கெதிராக (7.21 சதவீதம்) தேய்வடைந்தது. 2011ஆம் ஆண்டுப் பகுதியில் ரூபா, சிஎஉ இற்கெதிராக 2.31 சதவீதத்தினால் தேய்வடைந்து பன்னாட்டுச் சந்தையில் ஐ.அ.டொலருக்கெதிராக யூரோ, யென் மற்றும் ஸ்டேர்லிங் பவுண் போன்ற முக்கிய நாணயங்கள் அசைவடைந்தமையினைப் பிரதிபலித்தது.

**2012 பெப்புருவரியில் மத்திய வங்கி செலவாணி வீத்தத்தில் கூடிய நெகிழ்ச்சி தன்மையை அனுமதிப்பதற்கு தீர்மானித்ததுடன் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் அதன் தலையீட்டை மட்டுப்படுத்தியது.** எனவே, வெளிநாட்டுச் செலாவணியிக் வளங்கள் பெற்றோலிய இறக்குமதிச் செலவில் பெரும் பகுதியை தீர்பனவு செய்ய தேவையான அளவுக்கும் மற்றும் வர்த்தக வங்கிகளுக்கான அடுக்கு - II மூலதனத்தின் பெறுகைகள், பங்கு மற்றும் முறிச் சந்தை என்பவற்றுக்கான உட்பாய்ச்சல்கள்

வரைபடம் 5.13 நாணயமாற்று வீத அசைவுகள்



**அட்டவணை 5.13 செலாவணிவீத அசைவுகள்**

| நாணயம் | வெளிநாட்டு நாணய அலகு ஒன்றிற்கு ரூபா | | | | | | முன்னைய ஆண்டைவிட சதவீத மாற்றம் (அ) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண்டிறுதி வீதம் | | | ஆண்டுச் சராசரி வீதம் | | | ஆண்டிறுதி | | ஆண்டுச் சராசரி | |
| | 2009 | 2010 | 2011 | 2009 | 2010 | 2011 | 2010 | 2011 | 2010 | 2011 |
| யூரோ | 163.72 | 147.56 | 147.42 | 160.21 | 150.10 | 153.86 | 10.95 | 0.09 | 6.73 | -2.45 |
| இந்திய ரூபா | 2.46 | 2.48 | 2.15 | 2.39 | 2.49 | 2.39 | -0.73 | 15.01 | -3.91 | 4.27 |
| யப்பானிய யென் | 1.24 | 1.36 | 1.47 | 1.23 | 1.29 | 1.39 | -8.80 | -7.21 | -4.55 | -7.06 |
| ஸ்டேர்லிங் பவுண் | 181.75 | 171.41 | 175.45 | 179.87 | 174.81 | 177.23 | 6.03 | -2.30 | 2.90 | -1.37 |
| ஐ.அ.டொலர் | 114.38 | 110.95 | 113.90 | 114.94 | 113.06 | 110.57 | 3.09 | -2.59 | 1.66 | 2.26 |
| சி.எ.உ. | 178.67 | 170.84 | 174.87 | 177.22 | 172.50 | 174.54 | 4.58 | -2.31 | 2.73 | -1.17 |
| **தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண் (ஆ) (இ) (2010=100)** | **ஆண்டிறுதி சுட்டெண்** | | | **ஆண்டுச் சராசரி சுட்டெண்** | | | **முன்னைய ஆண்டை விட சதவீத மாற்றம்** | | | |
| | | | | | | | ஆண்டிறுதி சுட்டெண் | | ஆண்டுச் சராசரி சுட்டெண் | |
| | 2009 | 2010 | 2011 | 2009 | 2010 | 2011 | 2010 | 2011 | 2010 | 2011 |
| பெ.தா.செ.வீ-24 நாணயங்கள் | 98.12 | 100.49 | 101.43 | 99.85 | 100.00 | 99.83 | 2.42 | 0.93 | 0.15 | -0.17 |
| உ.தா.செ.வீ-24 நாணயங்கள் (ஈ) | 97.48 | 102.73 | 103.90 | 97.65 | 100.00 | 102.07 | 5.38 | 1.14 | 2.40 | 2.07 |

(அ) இலங்கை ரூபாவிற்குச் சமமான வெளிநாட்டு நாணயங்களின் அடிப்படையில் மாற்றங்கள் கணிக்கப்பட்டுள்ளன. கழித்தல் அடையாளம் பெறுமானத் தேய்வினைக் குறிப்பிடுகின்றது.

(ஆ) பெ.தா.செ வீதமென்பது 24 வர்த்தகப் பங்காளர்கள் மற்றும் போட்டி நாடுகளின் பெயரளவுச் செலாவணி வீதத்தின் நிறையேற்றப்பட்ட சராசரியாகும். ஒவ்வொரு நாணய கூடைகளிலுள்ள ஒவ்வொரு நாணயத்தினதும் ஒப்பீட்டு முக்கியத்துவத்தினை பிரதிபலிக்கும் வர்த்தகப் பங்குகளின் அடிப்படையில் நிறையிடப்பட்டது. நாணயக் கூடையிலுள்ள ஒவ்வொரு நாணயத்தினதும் தொடர்பின் கூடையில் உள்ளடக்கப்பட்டுள்ள நாணயங்களைக் கொண்ட நாடுகளின் பணவீக்கம் வேறுபாடுகளுக்காக பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதங்களை சீராக்குவதன் மூலமாக உ.தா.செ.வீதம் கணிக்கப்படுகின்றது. கழித்தல் அடையாளம் பெறுமானத் தேய்வினைக் குறிப்பிடுகின்றது.

(இ) செலாவணி வீதமானது சுட்டெண்களின் அடிப்படையில் வரைவிலக்கணப்படுத்தப்பட்டதனால் ஏனைய நாணயங்களுடன் ஒப்பிடும்போது ரூபாவின் பெறுமதி உயர்வு/பெறுமதி தேய்வு என்பது தாக்கமுள்ள செலாவணி வீதங்களின் சுட்டெண்களின் பெறுமதிகளின் உயர்ச்சி/வீழ்ச்சியல் நேரடியாக பிரதிபலித்தது.

(ஈ) உ.தா.செ.வீ கணிப்பிற்கான கொநுவிசு பயன்படுத்தப்பட்டுள்ளது.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

உள்ளிட்ட பல்வேறு மூலங்களிலிருந்து சந்தைக்கு வரும் மிகையான வெளிநாட்டு செலாவணி திரவத் தன்மையை ஈர்த்துக் கொள்வதற்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டது. இவ்வாறு செய்திராவிடின் அது ரூபாவின் நியாயமற்ற உயர்வுகளுக்கு வழிவகுத்திருக்கும். இக்கொள்கையின் நோக்கம் யாதெனில் இறக்குமதிகளை ஊக்கம் குன்றச் செய்கின்ற அதேவேளையில் ஏற்றுமதிகளுக்கு ஊக்கமளித்து அதன் மூலமாக வர்த்தகப் பற்றாக்குறையினையும் அதேபோன்று நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையினையும் குறைவடையச் செய்வதேயாகும்.


## பெயரளவு மற்றும் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதங்கள்

**2011இல் பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதம் மற்றும் உண்மைத்தாக்கமுள்ள செலாவணி வீதம் இரண்டும், 2010இல் அவதானிக்கப்பட்ட போக்கினைத் தொடர்ந்து உயர்வடைந்தது.** இந்திய ரூபா மற்றும் யூரோ என்பனவற்றிற்கெதிரான இலங்கை ரூபாவின் பெயரளவு உயர்வினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் 5 நாணயக் கூடையை அடிப்படையாகக் கொண்ட (இது ஐ.அ.டொலர், ஸ்டேர்லிங் பவுண், யூரோ, யப்பானிய யென் மற்றும் இந்திய ரூபா என்பனவற்றை உள்ளடக்கியது) இலங்கை ரூபாவின் பெயரளவுத்தாக்கம் 1.94 சதவீதத்தினால் உயர்வடைந்த வேளையில் 24 வர்த்தகப் பங்காளர்களினதும் போட்டியாளர்களினதும் பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதங்களை அடிப்படையாகக் கொண்ட பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதம் 0.93 சதவீதத்தினால் உயர்வடைந்தது. ரூபாவின் உயர் பெயரளவிலான உயர்வு மற்றும் வர்த்தகப் பங்காளர்கள் மற்றும் போட்டியாளர்களின் அத்தகைய தன்மைகளுடன் ஒப்பிடுகையில் ஒப்பீட்டு ரீதியில் உயர்ந்த உள்நாட்டுப் பணவீக்கம் என்பன 5 நாணயங்கள் மற்றும் 24 நாணயக் கூடைகள் இரண்டினையும் அடிப்படையாகக் கொண்ட உண்மைத்தாக்கமுள்ள செலாவணி வீதத்தில் 2011இல் முறையே 2.65 சதவீதம் மற்றும் 1.14 சதவீதம் கொண்ட உயர்வினைத் தோற்றுவித்தன.

## உள்நாட்டிலுள்ள வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் அபிவிருத்தி

**உலகளாவிய பொருளாதாரச் சூழலில் பின்னடைவுகள் காணப்பட்ட போதும் உள்நாட்டின் வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் நடவடிக்கை மட்டம் 2011இல் விரிவடைந்தது.** அதிகரித்த பன்னாட்டு வர்த்தகம்,

**வரைபடம் 5.14 வங்கிகளுக்கிடையிலான காலாண்டு ரீதியான முன்னோக்கிய கொடுக்கல் வாங்கல்களின் அளவுகள்**



தொழிலாளர் பணவனுப்பல்களில் ஏற்பட்ட உயர்வு, சென்மதி நிலுவையின் பணிகள் மற்றும் நிதியியல் கணக்குகளுக்கான உட்பாய்ச்சல் மற்றும் ஒப்பீட்டு ரீதியில் உறுதியான செலாவணி வீதம் என்பனவற்றின் காரணமாக உடன் கொடுக்கல்வாங்கல்களின் மொத்த அளவு 2010இல் பதிவு செய்யப்பட்ட ஐ.அ.டொலர் 7,416 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2011இல் ஐ.அ.டொலர் 10,787 மில்லியனுக்கு (மொத்தக் கொடுக்கல்வாங்கல்களில் 66 சதவீதம்) அதிகரித்தது. உடன் சந்தையில் காணப்பட்ட போக்கினைத் தொடர்ந்து, முன்னோக்கிய கொடுக்கல்வாங்கல்களின் மொத்த அளவு 2010இன் ஐ.அ.டொலர் 3,649 மில்லியனிலிருந்து 2011இல் ஐ.அ.டொலர் 5,655 மில்லியனுக்கு அதிகரித்தது. வெளிநாட்டுச் செலாவணியின் முன்னோக்கிய பதிவு 2011இன் பின்னரைப் பகுதியில் அதிகரித்தமைக்கு அதிகரித்த இறக்குமதிகளிலிருந்து தோன்றிய வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைகளில் காணப்பட்ட கேள்வி அழுத்தங்களே காரணமாகும். இதன்படி வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல்வாங்கல்களின் மொத்த அளவு 2010இன் ஐ.அ.டொலர் 11,064 மில்லியனிலிருந்து 2011ஆம் ஆண்டுப் பகுதியில் 16,442 மில்லியனுக்கு கணிசமாக அதிகரித்தது. இதன்படி, 2011ஆம் ஆண்டுப் பகுதியில் மத்திய வங்கி ஐ.அ.டொலர் 343 மில்லியன்களை ஈர்த்துக் கொண்டு ஐ.அ.டொலர் 3,184 மில்லியன்களை வழங்கல் செய்தமையின் காரணமாக தேறிய நிரம்பல் ஐ.அ.டொலர் 2,840 மில்லியனாகக் காணப்பட்டது.

**செலாவணி வீதத்தில் காணப்படும் நியாயமற்ற தளம்பல்களை தடுக்கும் பொருட்டும் அதேபோன்று உள்நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் போதுமான திரவத்தன்மையினை உறுதிப்படுத்தும் பொருட்டும் இவ்வாண்டுப் பகுதியில் மத்திய வங்கி வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் இரண்டு பக்கங்களிலும் தலையிட்டது.** ஆண்டின் முதலரைப் பகுதியில் வெளிநாட்டுச் செலாவணியினை ஈர்த்துக் கொள்வதற்கான மத்திய வங்கியின் தலையீடு குறைவாகக் காணப்பட்ட போதும், உயர்ந்த பெற்றோலிய இறக்குமதிகள் மற்றும் தீர்ப்பனவு செய்ய வேண்டிய ஏனைய இறக்குமதி உண்டியல்கள் என்பனவற்றிலிருந்து தோன்றிய வெளிநாட்டுச் செலாவணியின் தொடர்ச்சியான வெளிப்பாய்ச்சலின் பின்னணியில் மத்திய வங்கி செலாவணி வீதத்தில் ஏற்படக்கூடிய ஏதேனும் தேவையற்ற தேய்மானங்களை தணிக்கும் பொருட்டு ஆண்டின் பிற்பகுதியில் மத்திய வங்கி உயர்ந்தளவு செலாவணி வீதங்களை நிரம்பல் செய்ய வேண்டியிருந்தது.

**ஒரு மாதம், மூன்று மாதம் மற்றும் ஆறு மாதங்களுக்கான முன்னோக்கிய கட்டுப்பணம் இவ்வாண்டின் பெரும்பாலான காலப்பகுதியில் காணப்பட்ட வட்டி வீத வேறுபாடுகளிலும் பார்க்க சிறிதளவு குறைவானதாக இருந்தது.** இது, குறுகிய காலத்தில் உள்நாட்டின் வெளிநாட்டு செலாவணிச் சந்தையினுள் தொடர்ச்சியான எதிர்காலப் பாய்ச்சல்களின் சந்தை எதிர்பார்ப்புக்களை எடுத்துக்காட்டியது. உள்நாட்டுச் சந்தை வட்டி வீதங்களுடன் ஒப்பிடுகையில் குறைந்த பன்னாட்டு வட்டி வீதங்களிலிருந்து தோன்றிய உயர்ந்த வட்டி வீத வேறுபாட்டுத் தன்மையும் ஒப்பீட்டு ரீதியில் உறுதியான செலாவணி வீதமும் இவ்வாண்டில் உள்நாட்டு திறைசேரி உண்டியல்களின் மற்றும் முறிகளின் சந்தைக்கு வெளிநாட்டு முதலீடுகளைக் கவர்வதற்கு துணை நின்றன. எனினும், ஒரு மாதத்திற்கான முன்னோக்கிய கட்டுப்பணம் 2011இன் இறுதி சில மாதங்களில் காணப்பட்ட வட்டி வீத வேறுபாட்டினை விஞ்சியமையின் காரணமாக சந்தை எதிர்பார்ப்புக்களின் போக்கு செலாவணி வீதங்களின் தேய்விற்கேற்ப நேர்மாற்றமடைந்தது. அதேவேளை, வர்த்தக வங்கிகளின் எதிர்க்கணிய தேறிய திறந்த நிலைமையும் ஆண்டின் இறுதிப் பகுதியில் படிப்படியான அதிகரிப்பினைக்காட்டி குறுங்காலத்தில் செலாவணி வீதத்தில் தேய்வு ஏற்படும் என்ற சந்தை எதிர்பார்ப்பினை எடுத்துக்காட்டியது.

**செலாவணி வீதத்தில் மிகையான தளம்பல்களையும் உள்நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் காணப்படும் ஊக நடத்தைகளையும் கட்டுப்படுத்தும் பொருட்டு மத்திய வங்கி முன்னோக்கிய ஒப்பந்தங்கள் மற்றும் வர்த்தக வங்கிகளின் தேறிய திறந்த நிலைமைகள் தொடர்பாக 2012 மார்ச்சில் சில வழிமுறைகளை மேற்கொண்டது.** இதன்படி, வர்த்தக வங்கிகள் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் மீதான முன்னோக்கிய ஒப்பந்த காலப்பகுதியை உயர்ந்தபட்சம் 90 நாட்களுக்கு மட்டுப்படுத்துமாறு வர்த்தக வங்கிகளைப் பணித்ததுடன் தேறிய சிறந்த நிலமைகள் மீதான நடைமுறை வெளிப்படுத்துகை வரையறைகள் கீழ் நோக்கித் திருத்தப்பட்டன.